
# மரம்



மேலாண்மை
பொன்னுச்சாமி

# மரம்

மேலாண்மை பொன்னுச்சாமி

சிட்டு

சிட்டு — 1

மரம் / மேலாண்மை பொன்னுச்சாமி
சிட்டு பதிப்பகம், 26-A, சத்தியமூர்த்தி தெரு,
நரிமேடு, மதுரை - 625 002
அச்சிட்டோர் : நியூகேஸியோ பிரிண்டர்ஸ், மதுரை-2.
ரூ. 19/-

Maram / Melanmai Ponnuchamy,
Chittu Pathippagam,
26-A, Sathiyamoorthy Street,
Narimedu, Madurai - 625 002.
New Casio Printers, Sellur, Madurai - 2.

## புதிய எல்லைகளை நோக்கி...

நாள்தோறும் தாக்கிடும் நச்சிலக்கியக் கணைகளுக்கிடையே நல்ல நூல்களைத் தேடும் நெஞ்சங்கள் பற்றிய நம்பிக்கையோடு நாங்கள் உங்களிடம் வருகிறோம்.

ஆனைவிலை, குதிரைவிலை, காகிதவிலை என்றாகி விட்ட காலகட்டத்தில் புத்தக விலைகளும் மருட்டவே செய்யும். ஆயினும் காலத்துக்குத் தேவையான இலக்கியங்களும், கருத்துரைகளும், ஆய்வுகளும் பரவலான வாசகர்களிடையே செல்ல வேண்டியது அவசியம்.

எனவேதான் முடிந்த அளவு குறைவான விலையில், நிறைவான நூல்களை அளித்திடும் உறுதியுடன் எழுத்து வானத்தில் புதிய எல்லைகளை நோக்கி இந்தச் சிட்டு தன் சிறகுகளை விரிக்கிறது...

எமது இந்த எளிய முதல் முயற்சிக்குத் தனது புதிய படைப்பாகிய ‘மரம்’ மற்றும் இதர படைப்புக்களைத் தந்த மேலாண்மை பொன்னுச்சாமிக்கு எம் நன்றிகள்.

சிட்டு எவ்விப் பறந்திட ஊக்கமளித்த நண்பர்களுக்கும் முன்வெளியீட்டுத் திட்டத்திற்கு ஒத்துழைத்த நேசக்கரங்களுக்கும் நாங்கள் என்றும் கடமைப் பட்டுள்ளோம். அவர்கள் கொண்ட நம்பிக்கைக்கு உரியவர்களாய் எம் உழைப்பைத் தொடர்ந்திடுவோம்.

சிட்டு பதிப்பகம்

# மரம் சும்மா இருந்தாலும்...

இது முன்னுரையென்பதைவிட கதைகளின் கதை என்று சொல்வது பொருத்தம்.

நாவல், குறுநாவல்... இவை எனக்கு ரொம்ப புதுசு.

சிறுகதைகளில் ஓரளவுக்குப் புரண்டு உருண்டு மல்லுக்கட்டிய பரிச்சயம் உண்டு. ஆனால், நாவல், குறுநாவல், முயற்சித்ததில்லை. குறுநாவல் என்கிற வடிவம் பிரக்ஞை புரியாத நாளில் நான் என்னையறி யாமலே சிறு குறுநாவல்கள் எழுதியிருக்கிறேன் என்பதை இப்போது நினைத்துப் பார்க்க முடிகிறது. ஆனால், அதெல்லாம் சிறுகதை என்ற பெயரிலேயே எழுதியிருக் கிறேன்!

சிறுகதை எழுதத்துவங்கிய நாளில் எனக்கு சிறு கதை வடிவம் பற்றிய ஞானம் இருந்ததில்லை. ''இது தான் சிறுகதை,'' ''இப்படித்தான் சிறுகதை இருக்க வேண்டும்'' என்கிற விபரமெல்லாம் அறியாமலேயே தான் சிறுகதைகள் எழுதி வந்தேன்.

எழுத எழுதச்சில விஷயம் பிடிபட்டது. விமர்சனங் கள் என்னைச் செதுக்கின. நிறையப் படிக்க வைத்தன. ஆண்டன் செகாவ்வையும், ஓஹென்றியையும் உள் வாங்க முடிந்தது. கார்க்கியையும் டால்ஸ்டாயையும் புரிந்துகொள்ள முடிந்தது. புதுமைப்பித்தனையும், கு. அழகிரிசாமியையும் துல்லியப் படுத்திக் கொள்ள முடிந்தது.

வார்த்தைகளின் வலிமைகூட இப்ப இப்பத்தான் பிடிபடுகிறது. எனது ஆரம்பகாலச் சிறுகதைகளைப்

படித்தால்... வார்த்தைகளை சிக்கனமில்லாமல் செலவழித்திருக்கிறேன் என்பது புரிகிறது.

வார்த்தையை அளவுமீறி அள்ளி இறைக்கிறபோது அழகாயிருக்க வேண்டியதெல்லாம் அலங்கோலமாகி விடுகிறது.

உணர்வுகளின் சித்திரமாக இருக்க வேண்டிய வார்த்தைகளே, உணர்வுகளை அண்டவிடாத நந்திகளாகி விடுகின்றன.

சின்னப்பையன் பெரியாள் சட்டையை மாட்டிக் கொண்டு தெருவில் வருகிற மாதிரியாகி விடுகிறது.

இப்ப இப்பத்தான்... ஓரளவுக்கு வார்த்தைகளின் வீர்யம் புரிகிறது.

அதே போலத்தான்... குறுநாவல் இன்னது என்று அறியாமலேயே முந்தியே நிறைய எழுதியிருக்கிறேன்.

ஆனால் இப்போது –

ஓரளவுக்குக் குறுநாவல் இன்னது என்று புரிந்த பிறகு எழுதியது 'அந்நியம்'.

இந்தக்கதை எனக்குள் ரொம்பக்காலம் கிடந்தது. அலையடித்துக் கொண்டேயிருந்தது. சிறுகதைக்குள் திணிக்க முயன்ற போதெல்லாம், அடங்காமல் திமிறிக் கொண்டேயிருந்தது. நான் பார்த்துப் பழகிய ஒரு மனிதரின் அவலம் இது. மனசை வலியெடுக்க வைத்த அவலம்.

அதை அங்கே இங்கே கொஞ்சம் மாற்றி, பேர் மாற்றி, ஊர் மாற்றி எழுதி முடித்தேன் குறுநாவலாக.

வாழ்ந்த குடும்பம், சறுக்கி விழுந்து நொறுங்கிப் போன கதைகளையெல்லாம் பார்த்தால்... காரணம் அபத்தமாகவே இருக்கும்.

''அப்பவும் ஒரு மனுசன் இப்படியா யோசிப்பான்?'' என்று நம்ப முடியாத அளவுக்குத்தான் இருக்கும். ஆனால், என்ன செய்வது? கூறு கெட்ட யோசனை வந்து விட்டால்.., குடும்பத்தின் பயணம் தடுமாறத் தானே செய்யும்?

இந்தக் குறுநாவலின் இறுதிப்பகுதியைப் பற்றி ஏகப்பட்ட விமர்சனங்கள்.

அந்த விமர்சனங்கள் நியாயம்தானா என்று ரொம்ப யோசிக்க வேண்டியிருக்கிறது.

கிராமங்கள் என்பது நொம்பலங்களும் சகிப்பும் மட்டும் கொண்டதல்ல... எதிர்ப்பும் போராட்டமும் கொண்டதுதான்.

அதன் பிரதிபலிப்புதான் 'சிட்டு' பதிப்பகத்துக்காகப் புதிதாக எழுதிய 'மரம்'. மூன்று தடவை சிறை சென்ற எனது அனுபவங்கள் இக்கதையை எழுத உதவின.

சம்சாரிகள் சாதுவான மக்கள்தான். வெகுண்டால் நாடு தாங்காது.

அது தெரியாமல் சம்சாரிகளை நாலாபக்கமும் போட்டு நெருக்குகிறார்கள். மனம் போனபடியெல்லாம் கொள்ளையடிக்கிறார்கள். அரசும், வியாபாரிகளும் சம்சாரிகளை வாங்க வந்த நேரத்திலும் விற்க வருகிற சமயத்திலும் வளைத்துப் போட்டு நறுக்குகிறார்கள்....

மரம் சும்மாயிருந்தாலும், காற்று சும்மா இருக்க விடாது என்ற புகழ் மிக்க மாசேதுங்கின் கவிதை வரிகள் உண்டு.

இது போக சில சிறுகதைகள், பதிப்பகத்திற்குக் கொடுப்பதற்காக இப்போது ஒரு தடவை படித்தேன். 'கட்டிப்புரளு' கதையை வாசிக்கிற போது குமுறியழுது விட்டேன். மனசெல்லாம் எப்படியோ ஆகிவிட்டது.

காரணம், அது முழுக்க முழுக்க என்சொந்தக்கதை, சோகக்கதை.

இந்தக் கதைகளின் விஷயத்துடன் இப்போதும் எனக்கு முழு உடன்பாடு உண்டு. ஆனால் நடை...?

இப்போது இந்தக் கதைகளை எழுதினால் வேறு மாதிரி எழுதியிருப்பேன் என்று உணரமுடிகிறது.

அதற்கு என்ன செய்ய முடியும்?

அந்தந்தக் காலத்து 'நான்' அதில் பதிவாகியிருக்கிறேன்.

இந்த நூலை வெளியிட ஆர்வத்துடன் முன் வந்த சிட்டு பதிப்பகத்தாருக்கு எனது நன்றிகள்.

நீங்களும் இந்த நூலைப் படித்துப் பாருங்கள். வாசித்து முடிந்த பிறகு சும்மாயிருந்து விடாமல்..... உங்கள் மனசில் பட்டதை எனக்கு நாலுவரி எழுதுங்கள்.

அந்த நாலுவரிகள்தான் என்னை வளர்க்கும்; உசுப்பும்; செதுக்கும்; வார்க்கும்.

நன்றி

என்றும் உங்கள்
மேலாண்மை பொன்னுச்சாமி

1. மரம் 1
2. அந்நியம் 61
3. பலிபீடம் 107
4. கறிவேப்பிலை 123
5. கட்டிப்புரளு 143

---

## சமர்ப்பணம்

உலகின் முதல் பொதுவுடமை நாடு என்றும், இந்தியாவின் நட்பு நாடு என்றும் புகழ் பெற்ற சோவியத் யூனியனில்.... வரலாற்றின் சாபக்கேடாகவும் தனியுடமை இருட்டாகவும் வந்து கவிந்த துரோகி யெல்ட்ஸின் எனும் சர்வாதிகாரக் கும்பலை எதிர்த்து....

லெனின், ஸ்டாலின் படங்களோடும், மனித நேயக் கனவுகளோடும் பனி குவிந்த தெருக்களில் இறங்கி வீரதீரமாகப்போராடிக் கொண்டிருக்கிற துணிச்சல் மிக்க ரஷ்ய உழைப்பாளி மக்களின் லட்சக்கணக்கான பாதங்களுக்கு...... !

# மரம்

காவல் நிலையத்தின் சுற்று வளாகம். வேப்ப மரநிழலில் கும்பல் கும்பலாய் கைதாகி உட்கார்ந்திருப் பவர்களில் நம்ம பேப்பர் சம்முகம். அவனுக்கு 'வெறுக், வெறுக்' கென்றிருந்தது. ரத்தமயமான கட்டிடமும், ரத்தமயமான கதைகளும் சேர்ந்து, சூழலையே ஒருமாதிரி பயங்கரமாக்கியிருக்கிறது.

சம்முகத்திற்கு மனசு கிடந்து 'திக் திக்' கென்று அடித்துக் கொள்கிறது. போலீஸ்காரர்களைக் கண் டாலே குடை கண்ட காளைமாடாக வெருளுகிறது.

கனத்த பூட்ஸ்கள் 'நெறுக், நெறுக்' கென்று கர்ஜிக்க குறுக்கும் நெருக்குமாய் வந்து போகிற போலீஸ்காரர்கள்.

கீழே தூக்கிப்போட்டு இந்தப் பூட்ஸ்காலால் ஒரு மிதி மிதித்தால்... என்ன ஆகும்? நெஞ்சுக் கூடு நொறுங்கி ரத்தம் கட்டிப்போகும், சாவுதான் மிஞ்சும்.

அவனுக்குள் குலை பதறுகிறது. மனசு முழுக்க பயம் ஜில்லென்று ஓடிப்பரவி, அடிவயிற்றில் 'பகீர்' என்கிற நடுக்கம்.

# 2

வலையில் சிக்சிக் கொண்ட மைனுக்குஞ்சாக 'விலுக், விலுக்' கென்று முழித்துக் கொண்டிருந்தான். அங்கும் இங்குமாய் பறவையாட... தவித்துக் கொண்டிருந்தான்.

அவன் வம்சத்தில் யாரும் போலீஸ் ஸ்டேஷனின் திசையைப் பார்த்ததில்லை. இவனும் இப்பத்தான்... போலீஸ்காரர்களை இத்தனை கிட்டத்தில் பார்க்கிறான். தடதடத்து வந்து மூச்சடங்கிய மோட்டார்பைக். இறங்கி 'டக், டக்' கென வருகிற இன்ஸ்பெக்டர். சுமுகமாக இருந்த போலீஸ்காரர்கள் அவர் வாடையை நுகர்ந்த வுடன் பரபரப்பான வேகம். விறைத்த நிலையில் சல்யூட் அடித்த தடதடப்பு.

அதைப் பொருட்படுத்தாமல், அலட்சியமாய் தொப்பியை எடுத்து, கைக்குட்டையால் முன்வழுக் கையை துடைத்துக் கொள்வது...

ஏதோ ஒருமாயாலோகமாகத் தோன்றியது சம்முகத் துக்கு. பயத்தில் நெஞ்சு திணறியது. மூச்சடைப்பது போலிருக்கிறது.

நம்மஊர் நல்லசிவம் கொஞ்சம் கூட பயமில்லாமல் அந்தப் பெரிய ஆபிஸரை நெருங்குகிறானே. சிரிப்புடன் 'விஷ்' பண்ணுகிறானே.

''என்ன தலைவரே ... மறியலெல்லாம்முடிஞ்சதா?''

''ம்... முடிஞ்சிருச்சு சார்?''

''எத்தனைபேர் அரெஸ்டாகியிருக்கீக?''

''எழுபத்தேழு, சார்''

''ம்... அப்படியா! வெரிகுட்''

''சார் ... ஒரு சின்ன விஷயம்''

''சொல்லுங்க''

''மறியல்லே அரெஸ்ட் ஆகியிருக்கிற எங்க ஆளுக பூராவும் கிராமத்து ஜனங்கள். வஞ்சகமில்லாத உழைப் பாளிங்க. அவுகளுக்கு மதியச் சாப்பாடு கொஞ்சம் கணிசமா இருக்கணும்''

''அதெப்படி தலைவரே? சர்க்கார்லே ஒதுக்கியிருக் கிற ரேசனைத்தானே நாங்க குடுக்கமுடியும்?''

''அது ஒருகோழிக்குஞ்சுக்குக் கூட பத்தாது சார்''

''வாஸ்தவந்தான். நாங்க சர்க்கார் நிர்ணயிச்சிருக் கிற படிக்காசை உங்ககிட்டே குடுத்துடுறோம், நீங்களே சாப்புட்டுங்கங்க''

''அதெப்படி? இன்னிக்கு நாங்க எல்லாரும் உங்க விருந்தாளிங்க. நீங்கதான் உபசரிக்கணும்''

''மேற்கொண்டு ஆகுற செலவை யாருகுடுக்குறது''

''நீங்கதான் எப்படியாச்சும் சமாளிக்கணும்''

இன்ஸ்பெக்டர் சிரித்தார். அது ஒரு வகையான நமுட்டுச்சிரிப்பு. அவரது கருத்த உதடுகளில் மெல்லிய பரிகாசம்.

''கைதிகளோட ரேசனே உயர்த்தணும்னு நீங்க தனியா ஒரு போராட்டம் நடத்தலாமே''

நல்லசிவம் தயக்கமில்லாமல் சட்டென்று பதிலைச் சொன்னான்: ''சார், ரேசன் குறைவாயிருப்பதாலே நிஜத்துலே சிரமப்படுறது நீங்கதானே சார்? நீங்க போராட்டம் நடத்துங்க. நாங்க தார்மீக ஆதரவு தர்றோம்''

இன்ஸ்பெக்டர் பெரிதாகச் சிரித்தார். ஏதோ ஜோக் கைக் கேட்டுவிட்டவரைப் போல அவருக்குச் சிரிப் பாணி பொத்துக் கொண்டு வந்தது.

'அடேயப்பா..! அசந்தா... எங்ககிட்டேயே கொடியை குடுத்து, கோஷம் போட வைச்சிருவீக போலிருக்கே!'

சம்முகம் இதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு ஆச்சர்யம் தாங்கமுடியவில்லை. ஏதோஅதிசய த்தைக் கண்டவனைப் போல மலைத்துப் போய்க் கிடந் தான்.

போலீஸ்காரார்களே மயிலைக் கண்ட சர்ப்பமாக பம்மிப் பதுங்குகிறார்கள். வியர்த்து, மூச்சுக்கு முந்நூறு 'ஐயா'போடுகிறார்கள். அப்பேற்பட்ட ஆபீஸரிடம்போய் தைர்யமாக நின்று, சரிசமதையாகப் பேசுகிறானே நல்ல சிவம்! அதுவும் எத்தனை சர்வசாதாரணமாக! ஏதோ பக்கத்து வீட்டுக்காரனிடம் பேசுகிற மாதிரிபேசுகிறானே கெட்டிக்காரன்தான்!

அவரும் இவனைத் 'தலைவரே' என்கிறாரே....

நல்லசிவம் ஊரில் ஒரு சின்ன விவசாயி. வீடு முழுக்க கடன். எந்நேரமும் டைரியும் பையுமாக ஊர்வழி போய் வருகிற அவனைப் பார்த்து, 'வேலையத்தவன்' என்றுதான் ஊரில் எல்லோரும் நினைத்துக்கொண்டிருக் கிறார்கள்.

'பொதுச் சோலி', 'கட்சிச் சோலி' என்று பொழுதுக் கும் ஊர் ஊராய் அலைகிறானே இவனெல்லாம் எங்கே உருப்படப் போகிறான்' என்றுதான் சம்முகம் கூட பல தடவை நினைத்திருக்கிறான்.

இங்கு பார்த்தால்.... கதை வேறு மாதிரியாகத் தெரிகிறதே!

இவனுக்கு இத்தனை அத்தாரிட்டி இருக்கிறதே... அடேயப்பா, சின்னவனாக இருந்தாலும், — இத்தனை மரியாதை செல்வாக்கு இருந்தாலும்— அடக்கமானவனாக இருந்திருக்கிறானே ....

சம்முகத்துக்குள் ஒரு மகிழ்ச்சியான பிரமிப்பு, 'நம்ம ஊர்லேயும் இப்படியோரு பையனா' என்று ஆச்சர்யம் என்றால் ஆச்சர்யம், அப்படி ஆச்சர்யம்.

ஸ்டேசன் வளாகத்திற்குள்ளேயே, இடதுபக்கத்தில் ஒரு கீற்றுக் கொட்டகை. கீழே சிமென்ட் தளம். அதில் ஒரு மேசை போட்டு. நீளப்பெஞ்ச்சில் ஒரு போலீஸ்காரர்

மறியல் கைதிகளை ஒரு பேரேட்டில் பதிந்துகொண்டிருகிறார். இன்னொரு போலீஸ்காரர், கைதிகளை விசாரித்துக் கொண்டும், சட்டையை கழற்றச் சொல்லி அங்க அடையாளங்களைப் பார்த்து தேடிக் கொண்டும், பதிகிறவருக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்.

''நெக்ஸ்ட்''

''ம்''

''இது நம்பர் எத்தினி?''

''டொன்டி செவன் போடுங்க.''

''சரி. பேரு?''

''ராமசாமி''

''தகப்பனார் பேரு?''

''முத்தையா. வடக்குத்தெரு. ஆமர்நாடு.''

''மச்சம் இருக்கா?''

''நெத்தியின் இடது புறம் ஒரு நீளத் தழும்பு. வலது புஜத்தின் பின் இறக்கத்தில் ஒரு மச்சம்''

''வேற திங்க்ஸ்?''

''ஒரு வேட்டி, சட்டை, பனியன், டிராயர்''

''வாட்ச், மோதிரம்?''

''நத்திங்.''

''ரைட். ராமசாமி யாரு? இதுலே ஒரு கையெத்ழுதுப் போடும். போடத்தெரியுமா, கை நாட்டா?''

''போட்டுருவேன்.''

''ம். சரி. போடும். இந்தாரும் பேனா. இதுபேனா. கலப்பையில்லே. மெதுவா. ஒடிஞ்சிராம. இது தான் கையெழுத்தா? மெட்ராஸ்லே கிளம்பி, கொல்லத்துலே வந்து நிக்குதே. ரைட்' நெக்ஸ்ட்''

பெயர் பதியப்பட்டவர்கள் கீற்றுக் கொட்டகைக்குள் உட்கார்ந்திருந்தனர். அங்கே, ஏகமாய் தளவாடச் சாமான்கள். உடைந்த சைக்கிள்கள்.

சம்முகமும் சட்டையைக் கழற்றிக் கொண்டான். சொல்வதற்கு மச்சத்தை தேடிக் கண்டு பிடித்துக் கொண்டான்.

பெயர் பதிகிற பேரேடு ரொம்பப் பெரிசு. கேட்கிற விபரங்கள் நிறைய. மனைவி, குழந்தைகள் உட்பட விசாரித்துப் பதிவு செய்கிறார்கள். பதிகிற தடபுடலைப் பார்த்தால்... மனசு படபடக்கிறது.

பலமான அஸ்திவாரமாகத் தெரிகிறது.

சாயங்காலம் விடுதலை செய்யப் போவதற்கு, எதற்கு இத்தனை தடபுடல்? விடமாட்டார்களோ ....

ஜெயிலில் கொண்டு போய் அடைத்து விடுவார்

களோ .... மாதக் சணக்கில் போட்டுத் தள்ளி விடுவார்....

ஸ்டேசன் முன் ஒரு ஜீப். அதற்குப் பின்னால், வெள்ளைப் பூதமாய் நிற்கிற பெரிய வேன்.பஸ் மாதிரி, அதில் அள்ளிப்போட்டுக் கொண்டு போய்விடுவார்களோ...

பயத்தில் மனசு உலர்ந்தது. நா வறண்டது தண்ணீர் குடிக்க வேண்டும். சிவப்பான மண் குடத்தில் தண்ணீர் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் மேஜைப் பக்கமாய் இருக்கிறது. எல்லோரும் போய் குடிக்கிறார்கள்

ரொம்பத் தயக்கத்திற்குப் பிறகு சம்முகம் மெல்ல பூனைபோல போனான். தண்ணீர் குடித்தான். தெற்குப் பக்கத்தில் லாக்கப் ரூம். உள்ளே—

கறுத்த மனிதன் கிடந்தான். கறுத்த கைலி தவிர உடம்பில் வேறு துணியில்லை. அடி நிறைய வாங்கிய உடம்பு. சதை பிடிப்பான இடமெல்லாம் தடிப்புதடிப்பாக வீக்கம்.

கிழக்குப் பக்கம் ஒரு அறை. அலமாரி நிறைய அழுக்குப் பேரேடுகள். பேப்பர் கற்றைகள். வயர்லெஸ் அலறுகிறது ...

''ராஜபாளையம் தாலுகாபீஸ் முன் மறியல். கைது அறுபத்திமூன்று. தலைமை ரவி. விருதுநகர் கைது ஆனவர்கள் எம்பத்தி நாலு. தலைமை பெருமாள். ஓவர்.''

சரி கதை முடிந்தது. எல்லா இடங்களிலும் இதே கூத்துத் தானா? அப்போ.... இன்னக்குச் சாயங்காலம் நிச்சயமாக விடப்போறதில்லை. மத்திய ஜெயிலில் தான் நாளைப் பொழுது விடியப் போகுது.

நாறிப் போய் விடும் பிழைப்பு...

## 8

இன்ஸ்பெக்டருடன் பேசி விட்டு வருகிற நல்ல சிவத்தைப் பார்த்தான், சம்முகம். அவன் முகம் இருண்டு கிடக்கிறது. கண்ணில் ஒரு தர்மசங்கடம்.

இது நல்ல அறிகுறி இல்லை. சம்முகம் மனசுக்குள் கூடுகட்டுற சந்தேகத் தேனீக்கள். சஞ்சலச் சிலந்திகள், கூட்டுக்குள் ஏகமாய் இருட்டு.

நழுவிக் கொண்டு ஓடுகிற நினைவுகள்.

# 2

சம்முகத்திற்கு எந்தக் கட்சியிலும் ஈடுபாடு கிடையாது. எல்லாக் கட்சிகளையும் சகட்டுமேனிக்கு விமர்சிப்பான். நல்லது என்று தெரிந்தால் பாராட்டு வான். ரொம்பப் பொதுவான மனிதன்.

அவனுண்டு, அவன் பாடுகள் உண்டு. நல்ல சம் சாரி. வெவ்வேறு இடத்தில் துண்டு துண்டாய் ரெண்டு ஏக்கர் புஞ்சை. பம்ப் ஷெட் கிணறு.

பொழுதுக்கும் பாடுபடுவான். அப்பவும் பாடுகள் மிஞ்சிக் கிடக்கு. பொழுது காணாது. எந்நேரமும் காட் டிலும் வீட்டிலும் எதையாவது நோண்டிக் கொண்டே யிருப்பான். கை ஒருநேரம் கூட சும்மாயிருக்காது.

சோம்பிச் சும்மாயிருந்தால், ரத்தம் செத்துப்போகும் என்பான். ரத்தம் சூடாக ஓடிக்கொண்டேயிருக்க வேண் டும். அப்போதுதான் உடம்பும் திடப்படும்; ஆயுளும் கெட்டிப்படும் என்பான்.

அப்படி உழைப்பை நேசிக்கிறவன் சண்முகம். வியர் வை நாற்றத்தில் சுகம் காண்கிறவன், மண்ணைமிதித்து உயிரைச் சிந்தினால்.... ஒன்றுக்கு ஆயிரமாக அள்ளித் தரும் என்று நம்புகிறவன்.

அப்பேற்பட்ட சம்சாரி சம்முகத்துக்கு சாஸ்வதமாய் ஒரு மனக்குறை தீராதமனக்குறை.

இந்தச் சம்சாரிகளை நம்பித் தான் நாடு. இவன் சாட்டைக் குச்சியை வீசிச் சுழற்றினால் தான், தேசச் சக்கரம் சரியாக உருளும்.

சம்சாரி சலித்துப் போய், ஏர்க்கலப்பையை மூலையில் சாத்தி விட்டால்.... நாடு எதைத் தின்று உயிர் வாழும்? மாத்திரையை உண்டு, மனுசன் ஜீவிக்க முடியுமா?

சம்சாரி என்ன லட்சணத்தில் இருக்கிருனோ, அப்படித்தான் நாடும் இருக்கும். இவன் வாழ்ந்தால் வாழும்; வீழ்ந்தால் வீழும்.

இப்பேற்பட்ட சம்சாரிகளை நாட்டில் சீந்துவார் உண்டா, ஏந்துவாருண்டா?

மத்தளத்துக்கு இரு பக்கம் இடி. சம்சாரிகளுக்கு திரும்பிய பக்கமெல்லாம் இடிகள் தான்.

ரூபாயை நீட்டி சரக்கு வாங்க எந்தக் கடையில் போய் நின்றாலும் இடி தான். பாடுபட்டு விளைய வைத்த பருத்தி, மிளகாய் வற்றலை விற்று ரூபாய்க்கு போனுல் .... பேரிடி, கரண்டு ஆபீஸ்க்குப் போனுல் இடி. கடன் வாங்க கூட்டுறவு சங்கத்துக்குப் போய் நின்றால், கிடைப்பது இடிகள்தான். தாலூகாபீஸ் போனாலும் அது தான் கதை.

இடிவிழாமல் இவன் என்றைக்குத் தப்பியிருக்கிருன்?

இத்தனை இடி பாடுகளில் இடுப்பொடிந்து கிடக்கிற சம்சாரிகளுக்காக கை தூக்கி விட ஒரு கையாவது நீண்டது உண்டா? ஊஹூம், ஒரு குஞ்சு கூட கிடையாது.

நாதியற்றுக் கிடக்கிற இவனின் துன்பங்கள்— துயரங்கள்— இழப்புகள்— கொஞ்சமா, நஞ்சமா? சொல்லி மாளுமா? எழுதித் தீருமா? எழுதிக் குவித்தால், அந்த இமயமலையே மூழ்கிப் போய் விடுமே ...

நல்லதங்காள் கதையெல்லாம், இவன் படுகிற சோகத்தின் கால் தூசி பெறுமா?

தொழில் நடத்துகிற முதலாளிமார்களுக்கு கவலையில்லை. சர்க்காரே காவல். தொழிலாளிகளுக்கும் வெள்ளைச் சட்டை உத்யோகஸ்தர்களுக்கும் என்னென்னவோ சங்கம் இருக்கிறது; கட்சிகள் இருக்கிறது.

சம்சாரிகளுக்கு அப்படி யார் இருக்கிறார்கள்?

சம்சாரிகளிடம் குற்றம் குறைகள் இல்லையா? இருக்கத் தான் செய்கின்றன.

சாதிச் சங்கக் கூட்டங்களில் தவறாமல் போய் உட்கார்ந்து சவடால் அடிப்பதற்கு சலிக்காத சம்சாரி, சம்சாரிகள் சங்கத்தில் கூப்பிட்டாலும் வந்து உட்கார்வது இல்லையே....

கையகலப் பொழிக்காக சண்டை சச்சரவு போட்டு வம்பு வழக்கு பண்ணி, போலீஸ் ஸ்டேஷன் போய் வசவு வாங்கி, பகையைப் பொத்திப் பொத்தி அடைகாக்கிற இவன், சம்சாரிகள் கடனாளியாகி, காலம் காலமாய் சீரழிவதற்கு என்ன காரணம் என்று யோசிப்பதற்கு ஒரு இடத்தில் ஒற்றுமையாகக் கூடுவதில்லையே....

இவனுக்கு யார் கற்றுத் தருவது? திருத்துவது? இவன் உருப்படாமல்.... நாடு மட்டும் எப்படி உருப்பட்டு விடும்?

சம்முகம் தினசரி டீக்கடைக்கு வருவான். டீயும்

குடிப்பான். டீ குடித்தாலும் குடிக்காவிட்டாலும், நிச்சயமாகப் பேப்பர் பார்ப்பான். பத்திரிக்கைகளை ஒரு வரி விடாமல் வாசிப்பான்.

சகல செய்திகளையும் மேய்ந்து அசை போடுவான். அதனால் அவனுக்கு ஊரில் பட்டப் பெயரே, 'பேப்பர் சம்முகம்.'

பத்திரிக்கைகளில் என்ன இருக்கிறது? நிறைய கொலைகள் விழுகின்றன. சிறுமிகள் கற்பழிக்கப்படுகிறார்கள். ரிக்ஷா ரெங்கன்கள் தோன்றுகிறார்கள். லாட்ஜ்களில் 'அழகிகள்' பிடிபட்டு, கண்ணீர்க்கதை வடிக்கிறார்கள்.

சம்சாசரி வாழ்க்கையைப் பற்றி ஒரு வரிச் செய்தி கூட வந்ததுண்டா? சம்சாரி வாழ்க்கையை உயர்த்துவதற்காக எந்தக் கட்டுரையாவது கவலைப்பட்டதுண்டா?

ஞாபகமேயில்லை... படித்ததாக.

ரெண்டு வருஷத்துக்கு முந்தித்தான் உருப்படியாக ரெண்டு தகவல்கள்.

விவசாயிகளுக்கு பத்தாயிரம் கடன் தள்ளுபடி என்ற செய்தியை ஒன்று விடாமல் வாசித்தான். உற்சாகமாக வாசித்தான்.

எப்போ மூவாயிரம் ரூபாய் வாங்கிய கடன், வட்டி; தவணை கடந்த வட்டி, அபராத வட்டி என்று எல்லாம் கூட்டுச் சேர்ந்து ஏழாயிரத்துச் சொச்சமாயிருந்த கூட்டுறவுக் கடன் ரத்து செய்யப்பட்டது.

அதே போல்.... பம்ப் ஷெட்டுக்கு இலவச மின் சாரம்.

சம்சாரியையும் மதித்துச் சலுகைகளா? ஆச்சர்ய மான சந்தோசம் தான். மடத்து வாசலில் உட்கார்ந்து கொண்டு, இதைப் பற்றியே வாய் குளிரப் பேசுவான். பாராட்டுவான்.

இந்தத் தேர்தலில் கூட சலுகைகள் கொடுத்த கட்சிகளுக்குத்தான் ஓட்டுப் போடுவதாக இருந்தான். நல்லசிவத்தை தெருவில் பார்த்தால் நட்புடன் ஒரு சிரிப்பு சிரிப்பான்.

நல்லசிவம் அந்தக் கட்சிகளுக்கு கூட்டணிக்காரன்.

அப்பத்தான் அந்தப் பேரிடி. உலகமே உடைந்து நொறுங்கி தலையில் விழுந்த மாதிரி, அந்தச் செய்தி.

தமிழ் நாட்டுக்கு ஓட்டுக் கேட்டு வந்த அந்தப் பெரிய்ய தலைவரை வெடிகுண்டு வைத்துக் கொன்று விட்டார்கள், பாவிகள்.

நம்பிக்கையோடு கையேந்தி வந்த தலைவரைக் கொள்வதற்கு எவனுக்காவது மனசு வருமா? வந்திருக் கிறதே ....

அந்தத் தலைவர் துண்டு துண்டாய் பிய்ந்து போய்க் கிடந்ததை பஞ்சாயத்து டி.வி.யில் பார்த்த மனசுகள் எல்லாம் பதறியது. தேகம் நடுங்கியது. காணச் சகியாத மாபாதகம்.

தானே அங்கு உடல் சிதறிக் கிடக்கிற மாதிரி ஒரு பதைப்பு, சம்முகத்துக்கு.

போதாக் குறைக்கு, இந்த வங்கொடுமையான கோலத்தை பெரிய பெரிய போஸ்டராக்கி, மூலை முடுக் கெல்லாம் ஒட்டி விட்டார்கள்.

பார்க்கப் பார்க்க மனசு பதைக்கிறது.

வாடிய பயிர் கண்டு, மனசு கருகிப் போய் ஓடி ஓடி நீர் பாய்ச்சுகிற ஈர மனசுக்காரன், சம்சாரி. கையேந்தி நின்றால் எந்த அந்நியனுக்கும் உள்ளதைக் கொடுத்து, முகம் குளிரச் செய்கிற சம்சாரி.

கேட்க வேண்டுமா?

தேர்தல் அன்றைக்கு க்யூவில் நின்று கொண்டிருந்த இவனை, குறுக்கும் நெடுக்குமாய் ஓடியலைந்த நல்ல சிவம் ஒரு எதிர்பார்ப்போடு பார்த்தான். மின்னலாய் ஒரு புன்னகையை வீசினான்.

சம்முகமும் சிரித்தான். உதட்டில் ஒட்டிருந்தது, ஏளனம். 'போங்கடா ... வேலையத்த பயல்களா' என்பதைப் போல. உள்ளே போனான்.

மடிந்த தலைவரின் மடியில் ஓட்டைப் போட்டு விட்டு வந்தான்.

இப்போது ... என்னாயிற்று?

ஊமையன் கண்ட கெட்ட கனவாகிப் போயிற்று. யாரிடம் சொல்ல முடியும்? எப்படிச் சொல்ல? என்னத்தைச் சொல்ல?

உர உப்புமூடை விலை கூடிப்போய் விட்டது.

கொஞ்சமா? மூடைக்கு எழுபது ரூபாய் கூடுதல். பூச்சி மருந்து தாறுமாறாக விஷமாய் விலை ஏறி விட்டது.

சம்சாரி.... சர்வநாசம் தான்.

தேசத்தின் மதிப்பைக் குறைப்பதைப் போல பண மதிப்பைக் குறைத்து விட்டார்கள். மானத்தை ஏலம் போட்டு கூவி விற்கிற மாதிரி.... தங்கத்தை அள்ளிக் கொண்டு போய் விற்று விட்டார்கள்.

பீடி விலை கூடுதல். சிகரெட் விலை கூடுதல். சகல பொருளும் விலைகூடுதல். இன்னும் கூடும். முடிவில்லா மல் கூடும்.

அனுதாபப்பட்ட சம்சாரிக்கு, இப்போது யார் அனு தாபப்படுவார்கள்?

சம்முகத்துக்கு பேப்பர்களை வாசிக்க வாசிக்க மனசு கொதித்தது. யார் மீது கோபப்பட?

நாமே நமக்கு தீ வைத்துக் கொண்டு, 'எரிகிறதே, எரிகிறதே' என்று கத்திக் கதறிஞல்....யார் என்னசெய்ய முடியும்? யாரைக் குற்றம் சொல்ல முடியும்?

உரலுக்குள்ளே தலையைக் கொடுத்தாகி விட்டது. உருவிக் கொள்ள இனி முடியாது. உலக்கைக்குப் பயந் தால்.... என்ன ஆகும்?

சம்சாரி மண்டை நொறுங்கிச் சாக வேண்டியது தான்.

சம்முகம் உள்ளுக்குள் வெதும்பினான். ரொம்பப் புழுங்கினான்.

பேப்பரைப் படித்த இளவட்டங்கள், பட்ஜெட்குறித் து பலதும் பேசிஞர்கள். அப்படியும் இப்படியுமாகக் கத் திக் கரைந்தார். மறுத்தும் ஆதரித்தும் இரைந்தார்கள்.

சம்முகம் வெறுப்போடு அவர்களைப் பார்த்தான். ஒன்றும் பேசத் தோன்றவில்லை. என்ன பேச யோக்ய தை இருக்கிறது? என்ன நியாயம் இருக்கிறது? பேசித் தான், என்ன ஆகப் போகிறது? நாமே வைத்த தீ. பற்றிக் கொண்டு எரிகிறது. கத்திக் கதறி ஆகப் போவ தென்ன?

சம்முகம் மனம் வெம்பிப் போயிருந்தான்.

# 3

அப்போது தான்—

நல்லசிவம் அந்த நோட்டீசை நீட்டினான். உழவர்களை வாட்டி வதைக்கிற பட்ஜெட்டை எதிர்த்து மாநிலம் தழுவிய மாபெரும் மறியல் போராட்டமாம். சம்முகம் நிமிர்ந்து பார்த்தான்.

நல்லசிவம் முகத்தில் அதே சிரிப்பு. கோதுமை முகத்தில் மெல்லிய புன்னகை. கபடமில்லாத புன்னகை. காரித்துப்பினாலும் துடைத்துக் கொண்டு, சிந்துகிற அதே புன்னகை.

நல்லசிவம் கட்சிக்காரர்களே, ஒரு டைப்புதான். ஊருக்கு நாலுபேர்தான் இருப்பார்கள். உடும்புப்பிடியா இருப்பார்கள். தோற்றாலும், ஜெயித்தாலும், என்றும் போல் என்றைக்கும் மக்களுக்காக போராடிக் கொண்டேயிருப்பார்கள்.

பலனைப் பற்றிக் கவலைப்படாமல், கர்மத்தைச் செய்து கொண்டேயிருக்கிற கர்மயோகிகள். நல்ல பையன்கள்.

''என்னா நல்லசிவம்?''

''படிச்சுப் பாருங்க.''

''படிச்சிட்டேன். தேர்தல்லே தான் ஜனங்க, உங்களை மொட்டையடிச்ச மாதிரி ஆக்கிட்டாங்களே, அப்புறமும் எதுக்கு இதெல்லாம்....?''

''சிலுவையிலே அறைபட்டு சாகக் கிடக்கிறப்போ கூட ஏசுநாதர் என்ன சொன்னரு? 'இன்ன தென்று அறியாமல் பாவம் செய்கிறார். கர்த்தரே, இவர்களை மன்னித்து இரட்சியும்' ன்னாரு.''

''அப்போ... நீங்க ஏசுநாதர் மாதிரியா?''

''இல்லே. நாங்க போற பெரிய பயணத்துலே இடையிலே வர்றதுதான் தேர்தல். தேர்தல்லே ஜெயிக்கிறது மட்டும் எங்க கடைசி லட்சியம் இல்லே.''

''அப்புறம்?''

''இந்தத் தேசமே புதுசா மாறனும். ஏழை பணக்கரான்வித்தியாசமில்லாம, எல்லா இந்தியனும் அண்ணன் தம்பிகளா அன்போட வாழணும். இந்த மண்ணுலே அன்பு ஒன்னு தான் பூக்கணும், காய்க்கணும் கனியணும்.''

''அதுக்கு?''

''அன்புக்கு இடமில்லாம, மனுசனை மிருகமா மாத்துற இந்தச் சமுதாயத்தை மாத்தணும். அப்படி மாத்துற சக்தி யார்கிட்டே யிருக்கு? தலைவர்களாலே மட்டும் முடியாது. ஜனங்க தான் சரித்திரத்தை மாத்தி புதுசா எழுத முடியும்.''

''அந்த ஜனங்கதான் உங்களைக் கண்டு காத தூரத்துக்கு ஓடுறாங்களே. கிட்ட வர மாட்டேங்கிறாங்களே?''

''வருவாங்க. இன்னிக்கு அல்லது நாளைக்கு, நிச்சயமா வருவாங்க. அவங்க வாழ்க்கையை மாத்தியமைக்க வேண்டிய அவசியத்தை அவங்களே உணருவாங்க.''

''அதுவரைக்கும் அவுகளுக்காக நீங்க போராட்டம் நடத்துவிகளாக்கும்?''

''அதுக்குப் பிறகும் தான்.''

சீந்துவாரற்ற சம்சாரிகளுக்காக போராடுகிற கர்மயோகிகள் இவர்கள். இவர்களைச் சீந்துகிற சம்சாரிகளும் இல்லை. நல்ல கூத்துதான், இது!

''சரி... இப்ப என்ன விஷயம்?''

''அதான், பாத்திகளே.... உர உப்பு விலை ஏறியிருக்கு. பூச்சி மருந்து விலை கூடியிருக்கு. எல்லாப் பொருளும் ஏறுது. சம்சாரிகளைச் சக்கையாகப் பிழியப் போகிற இந்தப் பட்ஜெட்டை கண்டிச்சு, மறியல் போராட்டம் நடத்தப் போறோம்.''

''சரி.... கட்சிக்காரங்க போராடுறீங்க. சம்சாரிக மறியலுக்கு வாராங்களா?''

''வர்ற மாதிரித் தெரியலே. ஞாயமா பாத்தா நம்ம ஊரு சம்சாரிக எல்லோரும் வரத்தான் செய்யனும். வரலியே. அந்த அளவுக்கு சுரணையிருக்குற சம்சாரி, யாரு இருக்காக?''

''ஏய்...இந்தா, சகட்டுமேனிக்கு பிடிச்சு விளாசக் கூடாது. எல்லாருமா சொரணையத்துப் போனாக? நா சம்சாரிதானப்பா? நா வாரேன், மறியலுக்கு,''

''நெசமாவா சொல்றீக?''

''சம்சாரி பிரச்சனைக்கு சம்சாரி வரலைன்னா ... எப்படி? நா வரேன்''

''ரொம்ப சந்தோசம்''

''ஆனா ஒன்னு, மறியல் போராட்டம்னா, மாசக் கணக்குலே ஜெயில்லே போட்டுட்டா...என்ன செய்றது? இங்கே வேலை ஜோலிக கிடக்குதே. ஆளில்லாம நாறிப் போகுமே.''

''அதெல்லாம் அடைக்கமாட்டாங்க. நாங்களும் ஏழெட்டு தடவை மறியலுக்குப் போயிருக்கோம். காலை யிலே பிடிச்சு சாயங்காலம் ரிலீஸ் பண்ணிருவாக.''

''சரி, இந்தத் தடவை அடச்சிட்டா?''

''செய்ய மாட்டாங்க. தமிழ்நாடு பூரா லட்சக்கணக் குல அரெஸ்ட்ஆவாங்க. அத்தனைபேருக்கும் பானைஞ்சு நாளைக்கு சோறுபோட்டுப் பராமரிக்க... எம்புட்டு செல வாகும்? வீணா செலவழிக்க சர்க்காருக்குக் கிறுக்கா புடிச்சிருக்கு?''

''அப்ப நா...வரேனப்பா. நா உங்க கட்சி கிடை யாது. சம்சாரிங்கிற முறையிலே வாரேன்''

நல்லசிவத்துக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. ஒரு குழந்தையப் போல கபடமில்லாமல் கும்மாளமிட் டான். குதூகலித்தான். எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி பூரித்தான்.

மாரியமமாள் எம்புட்டோ தடுத்துப் பார்த்தரள்.

''உங்களுக்கென்ன கிறுக்குப் பிடிச்சுப் போச்சா? தலையிலே சனியன் ஏறிக்கிட்டானா? ஜெயிலுக்குப் போனா கேவலமில்லே? ஊர்ல கைகொட்டி சிரிக்க மாட்டாகளா?''

சம்முகம் ரொம்பத் தைர்யமாக அவளை மறுத்தான்.

''நீ சும்மா கிட. ஒனக்கு என்ன தெரியும்? கொலை பண்ணி, களவு செய்ஞ்சு ஜெயிலுக்குப் போனாத்தான் கேவலம். இதுல என்ன கேவலம் இருக்கு?''

,,அப்புறம், மாலை போட்டு மரியாதை பண்ணப் போறாகளாக்கும்? பேசாம.... காட்லே உண்டான வேலே யைப் பாருங்க. கூறுகெட்டுப் போய்த் திரியாதீக.''

''இந்தப் பேப்பர் சம்முகமா, கூறுகெட்டுத் திரியப் போறான்? நல்ல கூத்துதான். நல்லசிவம் சொல்லி யிருக்கான். காலையிலே போய்ட்டு சாயங்காலம் வந்துரலாம்''

இப்படி வந்து மறியலில் கலந்தவன்தான் சம்முகம். அரெஸ்ட் ஆகி காவல் நிலையத்துக்கு வந்தாயிற்று, இப்போது என்னடா என்றால் நிலைமை ஏடா கூடமாகிறது.

கீற்றுக்கொட்டகையில் பெயர் பதிகிற மும்முரம்.

''நெக்ஸ்ட்''

''ம்''

''சீரியல் நம்பர்?''

''தேர்ட்டிஎய்ட்''

எழுதிக்கொண்டிருந்த போலீஸ்காரர் அயற்சியுடன் நிமிர்ந்தார். கழுத்தை அங்கிட்டும் இங்கிட்டுமாய் சுழற்றி சொடுக்கெடுத்தார். விரல்களில் சொடுக்குப் போட்டுக்கொண்டார்.

''நம்ம நைனாவைக் கூப்பிடுங்க, அவர் கொஞ்சம்

எழுதட்டும்.''

''எந்த நைனா?''

''அவருதான். டென் எய்ட்டி தங்கராசு''

''இன்ஸ்பெக்டரய்யா சத்தம் போடுவாரு''

''அடக்கூப்பிடுமய்யா. இங்க மனுசனுக்கு உசுர் போகுது, கையெல்லாம் வலிக்குது.''

ஆள்மாற்றிக்கொண்டு பதிகிறார்கள். வலுவான அஸ்திவாரம்தான், சந்தேகம் இல்லை, ஜெயில்க்கஞ்சி குடிக்கத்தான் விதியோ....

இன்ஸ்பெக்டரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருகிற நல்லசிவம் முகத்தில் களையில்லை. உயிரில்லாமல் வந்த அவன் கண்ணில் ஒரு குற்ற உணர்ச்சி, அவன் முகத்தில் வருத்த நிழல் வெட்டப்பட்ட செடியாக வாடிக் கிடந்தான்.

பார்க்கவே பாவமாக இருக்கிறது.

''என்ன நல்லசிவம், ஒருமாதிரியிருக்கே?''

''ஒண்ணுமில்லே, நிலைமை தலைகீழாத்தெரியுது''

''என்ன தெரியுது?''

சாயங்காலம் கோர்ட்டுக்கு கொண்டு போற ஏற்பாடு இருக்கு. ரிமாண்ட் பண்ணுகிற மாதிரி ஒரு சூழ்நிலை தெரியுது. அதுதான் கவலையாயிருக்கு''

சம்முகத்துக்குள் 'பகீர்' என்றது. எதிர்பார்த்துப் பயந்து கொண்டிருந்த இடி, வந்து விழுந்தே விட்டது. வெறுமனே அவனைப் பார்த்தான்.

''எங்களைப் பத்திக்கவலையில்லே. ஏற்கனவே மூனுதடவை ஜெயிலுக்குப் போய்ட்டு வந்திருக்கேன். ஆனா, உங்களை நெனைச்சாத்தான் வருத்தமாயிருக்கு, ஜெயில் உங்களுக்குப்புதுசு. அதுலேயும், காடு கரைன்னு பொழுதுக்கும் பாடுபடுகிற மனுசர் நீங்க''

வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. இனி, சாண் என்ன, முழம் என்ன ! இந்தப்பொடியன் நல்ல சிவத்துக்கு நாம் என்ன குறைச்சல்? கோழையா? அவன் என்ன பதினோரு மாசமா? நாம் என்ன ஒம்பது மாசமா?

''எதுக்கு நீ வருத்தப்படணும்? உனக்கு உள்ளது எனக்கும். மிஞ்சிப்போனா... பதினைஞ்சு நா உள்ளே போடுவாகளா? போடட்டுமே. நம்ம வீட்லே ஒரு 'நல்லது பொல்லது'ன்னா வேலை ஜோலிகளைப் போட்டுட்டு பத்துநாளைக்கு அலையுறதில்லே? அப்படி நெனைச்சுக் கிடுவோமே.''

சம்முகம் தைரியம் சொல்லி, தைரியம் பெற.... அதையும் நல்லசிவம் உணர்ந்து கொண்டான். ரொம்பக் கவலைப்பட்டான். அவனது மனதில் வே று வே று அச்சம்.

'சும்மா ஒரு தோரணையிலே இப்பப் பேசுறாரு. நெசமாவே ஜெயில் வாழ்க்கையைத் தாங்கிருவாரா? பயந்து போயிருவாரா? மன்னிப்பு எழுதிக்கொடுத்துரு வாரோ நம்ம மொத்த இயக்கமே கே வ ல ப் ப ட் டு ப் போகுமோ '

நல்லசிவம் சஞ்சலப்பட்டான். உள்ளுக்குள் மருகித் தவித்தான். ஆழ்ந்த நெடுமூச்சு விட்டான்.

# 4

அந்த வெள்ளை வேன், எழுபத்தேழு இதயங்களின் தவிப்புகளை சுமந்து கொண்டு பிசாசாய் விரைந்தது. திருமங்கலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

எஸ்க்கார்டாக வந்திருந்த போலீஸ்காரர்கள் ரொம்ப ரிலாக்ஸா உட்கார்ந்திருந்தனர். தொப்பியைக் கழற்றி விட்டனர், சட்டைப்பட்டனைக்கழற்றி விட்டிருந்தனர்.

அதில் ஒரு போலீஸ்காரர், நல்லசிவத்திடம் ஆர்வமாய்க் கதை சொல்லிக் கொண்டு வந்தார். போலீஸ் போராட்டம் நடந்த காலத்தில்... போராட்டத்தில் கலந்து கொண்ட பிறர், மனம் கலங்கித் தவித்ததை காட்சிகாட்சியாகக் கூறினார். தொப்பியைப் பிடுங்கிக் கொண்டு தெருவில் துப்பிவிடுவார்களோ என்று பயந்து பயந்து செத்ததை விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சம்முகம் நல்லசிவம் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தான். அதைக் கேட்டும் கேளாமல் இருந்தான். பாதி மனசு வீட்டுக்குப் போய்விட்டது.

மாரியம்மாளை நினைத்தான். மகள் காமாட்சியை நினைத்தான். பத்து வயசிருக்கும் இளையமகன் கதிர்வேலைப் போலில்லை, அவள்.

காமாட்சி, அய்யா பிள்ளை. படுக்கும் போது அய்யா கட்டிக்கொண்டு படுத்தால்தான் அவளுக்கு உறக்கம் வரும்.

ஏதாகிலும் வேலையாய் வெளியூர் போயிருந்தால், சாமக்காட்டில்தான் வீடு திரும்புவான் சம்முகம். வந்த வுடன் மாரியம்மாள் காமாட்சி பற்றிய புகார்களைத்தான் கொட்டுவாள்.

அய்யா இல்லாமல் அவள் உறங்க மறுத்து சிணுங்கிச் செய்த சேட்டைகளை ஒருமூச்சு சொல்லித் தீர்ப்பாள். எரிச்சலோடு வார்த்தைகளை எறிவாள்.

''புள்ளையா, அது? கொரங்கு. என் உசுரைப் புடுங்க வந்துருக்கிற யமன். அப்பனைக் கட்டிக்கிட்டே ஒறங்கணுமாம். இப்படியும் ஒரு புள்ளையா? கூத்துத் தான்''

அது, இவனுக்குத் தேனாமிர்தமாய் இனிக்கும். சந்தோஷத்தில் மனசு கிடந்து உருகிக்கசியும். விரலைச் சூப்பிக்கொண்டு தூங்குகிற மகளை பெருமிதமாய்ப் பார்ப்பான்.

இவன் சாப்பிட்டுவிட்டு படுத்துவிடுவான். விடியற் காலம் முழித்துப் பார்த்தால்... கழுத்தைக்கட்டிக் கொண்டு பக்கத்தில் கிடப்பாள், காமாட்சி. அவளது பிஞ்சுக்கால் இவனது வயிற்றில் குறுக்காகக் கிடக்கும்: அவள் வடிக்கிற எச்சில் இவனது தோள்பட்டையில் பிசுபிசுத்துக் கிடக்கும்.

மனசு நிறைந்து ததும்பும், சம்முகத்துக்கு.

காமாட்சி முழுக்க இவனது அம்மாவின் அச்சு. கண், மூக்கு, முக அமைப்பு, சுபாவம் எல்லாமே அம்மாதான். அம்மாவே மறுபிறப்பாக வந்து பிறந்து விட்ட மாதிரி

ஒரு பிரமை. சம்முகத்துக்குள் ஆழத்தில் இனம் புரியாத ஒரு பரவசம் பற்றிப்படரும்.

இப்போது காமாட்சி என்ன செய்கிறாளோ? எப்படி அழுது ஏங்கித் தவிக்கிறளோ...

''அய்யாவை எங்கேம்மா? அய்யாவை எங்கேம்மா?'' என்று ஓயாமல் மாரியம்மாளிடம் நச்சரிப்பாள். புருஷன் மீதுள்ள கோபத்தில் குமைந்து கிடக்கிற மாரியம்மாள், இந்த நச்சரிப்பு தாங்காமல் அவளைப் போட்டு அடிப்பாள்.

பாவம்....அந்தப்பூ!

சட்டென்று வேனுக்குள் ஒரு தடபுடல். ஒரே கூட்டுக்கோஷங்கள்.

''உரவிலையை உயர்த்தாதே!''

''உலகவங்கிக்குப் பணியாதே!''

''சுதந்திரத்தை அடகு வைக்காதே!''

''விவசாயிகள் வயிற்றில் அடிக்காதே!''

''மறியல் போராட்டம் வெல்க!''

இப்படிக் கோஷங்கள். தொண்டை கிழிய கோஷங்கள். நரம்புகள் விம்மித் தெறிக்க கோஷங்கள்.

ஒரு ஊரைத் தாண்டுகிற போதெல்லாம்-தெருவில் மக்கள் தட்டுப்பட்டு விட்டால் போதும் - கோஷங்கள் தூள்பறக்கும். வேன் கலகலக்கும். வீதியில் போகிற மக்கள், விரைந்தோடுகிற வேனை ஒரு ஆச்சர்யமாய்ப் பார்ப்பார்கள்.

பக்கத்தில் உட்காாந்திருக்கிற நல்லசிவத்திடம் முகத்தைக் காட்டக்கூடாது. முகத்தில் மனசைக்காட்டி விடக்கூடாது. தைரியமாக இருப்பது போல சுமுகமாகத் தோற்றமளிக்க வேண்டும்.

பாவம், அவன் வேறு கலவரப்படுவான்.

நல்லசிவம் சோதனைக்காகவாவது அடிக்கடி சம்முகத்தையே பார்ப்பான். கண்களுக்குள் ஊடுருவிப் பார்ப்பான், மனசை எட்டிப் பார்க்கிற மாதிரி... அப்படி யோர் பார்வை.

பயல் இளவட்டமாக இருந்தாலும், விவரமான பையன்தான், துடியாகவும் இருக்கிறான். பெரிய மனிதத் தோரணையாகவும் இருக்கிறான். உணர்வறிந்து நடந்து கொள்கிறான்.

பார்த்தால் பசுபோல இருக்கிறான், கொதித்து விடாமல் என்னமாய் கர்ஜிக்கிறான். இளங்கன்று பயம் அறியாது என்பார்களே, அது நிஜம் தான்.

மதியம் வரைக்கும் இன்ஸ்பெக்டரோடு அத்தனை சுமுகமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவன், சாயங் காலம் என்னமாய் சண்டைக்குப் போய் விட்டான். பய மில்லாமல், காட்டுக்கத்தலாய் கத்திவிட்டானே!

''காலையிலேதான் இனி கோர்ட். எல்லாரும் லாக்கப்லே தங்குங்க'' என்றார் இன்ஸ்பெக்டர், அவ்வளவுதான்.

நல்லசிவம் முகமெல்லாம் சினக்க, 'பிலு பிலு' வென்று மல்லுக்குப் போய்விட்டான்.

''ஒன்று எங்களை சென்ட்ரல் ஜெயிலுக்குக் கொண்டு போங்க, இல்லேன்னா.... ரிலீஸ் பண்ணுங்க.''

''அதெப்படி முடியும் மிஸ்டர் நல்லசிவம்? கோர்ட் டயம் முடிஞ்சு போச்சு.''

''அது எங்களுக்குத்தெரியாது. இந்த நாத்தமெடுத்த லாக்கப்லே நாங்க எழுபத்தேழு பேரும் எப்படித் தங்க முடியும்? நாங்க என்ன சாக்கடைப் பன்னிகளா? அரசியல் கைதிகள்.''

''அதுக்கு என்ன? நாங்க என்ன பண்ண முடியும்? இப்ப ஒண்ணும் செய்ய முடியாதே. இம்பாஸிபிள்''.

''அதையும் பாத்துருவோம். இந்த நிமிஷத்தில் இருந்து உண்ணாவிரதம்.''

''மிஸ்டர் யோசிச்சு முடிவு செய்யுங்க. அப்புறம் சங்கடப்படுவீக.''

''அதைப்பத்திக் கவலையில்லே, சார். ஜனங்களுக்காகப் போராடி ஜெயிலுக்குப் போறதுக்கு துணிஞ்ச எங்களை... சும்மா மிரட்டிப்பாக்காதீங்க, சார்.''

''போங்க, லாக்கப்புக்கு.''

''முடியாது. உண்ணாவிரதம்தான்.''

நல்லசிவத்துக்குள் இப்படியோர் ருத்ரசிவமா? அனல் பறக்க கோஷமிட்டான். எல்லோரும் அதையே எதிரொலித்தனர்.

ஸ்டேஷனுக்கு வெளியே கூட்டம் கூடிவிட்டது.

சம்முகம் பதறிப்போனான். உள்ளுக்குள் நடுக்கம்.

மதியத்தில் 'தலைவரே' என்ற இன்ஸ்பெக்டர், இப்போது 'மிஸ்டர்' என்று சீறுகிறாரே!

நிலைமை எக்கச்சக்கமாகி விட்டது. ஸ்டேஷன் முழுக்க கோபவெக்கை. லத்தி சார்ஜ் துவங்கிடுமோ.... கைகால் முறியுமோ ...

விறைப்பாக அணிவகுத்துவிட்ட போலீஸ்காரர்களை மிரட்சியுடன் பார்த்தான் சண்முகம்.

வெளியே கூடிய கூட்டத்தை கடுப்புடன் பார்த்தார் இன்ஸ்பெக்டர். அவர் முகத்தில் அனல் பறந்தது. நல்லசிவத்தை எரிப்பதுபோல பார்த்தார்.

எரிச்சலோடு ஃபோனை எடுத்தார். விருட் விருட் டென்று இழுத்தார். யார்யாருடனோ பேசினார். கத்தினார். கெஞ்சினார்.

அப்புறம் -

''சரி... கோர்ட்டுக்குக் கிளம்புங்க.''

விசேஷச் சூழ்நிலையில் நேரம் கெட்ட நேரத்தில் கோர்ட் உயிர் பெற்றது. ஐந்தரை மணிக்கு மாஜிஸ்ட்ரேட் சிறப்பு வருகை செய்தார். குட்டையான கனத்த ஆள்.

ஒரு வரியில் வேலை முடிந்தது! ''பதினைந்து நாள் ரிமாண்ட்.''

அப்புறம், ரிக்கார்டு வேலைகள், பதிவு வேலைகள், எஸ்கார்ட், படிக்காசு என்று சர்ச்சைகள்.

கோர்ட்டுக்கு வெளியே கூடிய கட்சிக்காரர்கள், மறியல் வீரர்களுக்கு வடை, டீ எல்லாம் சப்ளை செய்தார்கள். பீடி, சிகரெட், வெற்றிலை, பாக்கு எல்லாம் தாராளமாய்ப் புழங்கியது.

உற்சாகமாக வார்த்தைகள் சொன்னார்கள். வாழ்த்து கோஷம் முழக்கினார்கள்.

சம்முகம் உள்ளுக்குள் நொறுங்கி நைந்து போனான். நனைந்த காகிதமாகிவிட்டான்.

வம்பில் வந்து மாட்டிக் கொண்டோமோ என்று தோன்றியது. வழியில் போய்க்கொண்டிருந்த சனியனை தோளில் ஏற்றிக் கொண்டோமோ.... என்ற நமைச்சல், மனசுக்குள் நெருஞ்சிமுள், முட்கள், உறுத்தின, குத்தின.

எதையும் கவனிக்க இயலவில்லை. மனசு எதிலும் ஒட்ட முடியாமல்... சூறைக்காற்றுத் துரும்பாய் அலைந்தது.

ஆனால்.... வெளியே கூடி நின்று வாழ்த்தியவர்களில் பேங்கில் வேலை செய்கிறவர்கள், பேராசிரியர்கள், டாக்டர்கள் இவர்களெல்லாம் இருந்தது. சம்முகத்துக்கு ஆச்சர்யமாக இருந்தது.

நல்லசிவம் கட்சிக்கும் இப்படி செல்வாக்கு இருக் கிறதோ என்று ஒரு பிரமிப்பு!.

ஏழு மணிக்கு மத்திய ஜெயில், அங்கும் வரிசையில் உட்கார்ந்து, பெயர் பதிவு, மச்சம் பார்த்தல் எல்லாச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் முடிந்து உள்ளே நுழைய மணி எட்டாகி விட்டது.

ஆளுக்கொரு மம்பட்டியான் ஜமுக்காளம், அலுமினி யத்தட்டு, அலுமினியக்குவளை வழங்கப்பட்டது.

உள்ளே போனால்

ஜெயில். அது ஒரு தனி உலகம்.

# 5

ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மறியல் வீரர்கள் அத்தனை பேரும் இந்த ஜெயிலில் தான். இரண்டாயி ரத்துக்கும் மேல் ஆட்கள். 'ஜே, ஜே' என்று கூட்டம்.

உள்ளே வந்து பார்த்தால், ஜெயில் மாதிரித் தோன்றவில்லை. ஏதோ மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்த மாதிரியிருந்தது.

ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவருக்கொரு வர் அறிமுகமானவர்கள். வரவேற்பும் உபசரிப்புமாக கலகலத்தது. கேலியும் கிண்டலும் தோழமைச் சிரிப்பு மாய்... பெரீய்ய கல்யாண வீடு போல இருந்தது.

மாமரத்துக் குவாரைண்டனும், புளியமரத்துக் குவா ரைண்டனும் போதவில்லை. இரண்டுக்கும் இடையில் உள்ள கதவைத் திறந்து விட்டார்கள்.

கிரிமினல் குற்றவாளிகளை அடைத்துப் பூட்டுவ தற்கு ஒரு பெரிய அறையை மட்டும் ஒதுக்கி விட்டு, மீதியெல்லாம் இவர்களுக்குத்தான்.

ராத்திரிச் சாப்பாடு வந்தது. ஒரு சதுரமான— கனத்த— இரும்புத்தகடு. அதன் முன்னும் பின்னுமாய் நீட்டிக் கொண்டிருந்த நான்கு கம்பிகள்.

அந்தத் தகட்டில் மலையடுக்குகள் போல சோற்றுக் கட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. அதை இரண்டு தண்டனைக் கைதிகள் வேர்க்க விறுவிறுக்க சுமந்து வந்தனர். சுமக்க முடியாமல் அவர்கள் திணறிய திணறல், அவர்கள் விட்ட ஆயாசப் பெருமூச்சில் இரைந்தது.

குத்தண்டா மாதிரி உயர்ந்த இரும்புச் சட்டி. இதில் இரண்டு கைப்பிடி வளையம். அதற்குள் கனத்த மூங்கிலைக் கொடுத்து, தோளில் போட்டு சுமக்க முடியாமல் சுமந்து வந்தனர். அவர்களும் தண்டனைக் கைதிகள் தான்.

அந்தச் சட்டியின் இடுப்பில் 'மாமரம்' என்று சாக்பீஸால் எழுதியிருந்தது. அது நிறைய சாம்பார். தண்டுக் கீரையும் முள்ளங்கியும் மிதந்தன.

பரிமாறப்பட்டது. எல்லோரும் வரிசையில் வந்து வாங்க வேண்டும். மேற்பார்வைக்கு கன்விக்ட் வார்டர்கள் வந்து நின்றனர்.

பயங்கரக் குற்றவாளிகள், பெரிய தண்டனைகள் அடைந்து, நாளாவட்டத்தில் நன்னடத்தை காரணமாக வார்டர்கள் ஆனவர்கள்.

வெள்ளை வெளேர் என்று யூனிபார்ம். விசில். தொப்பி. கையில் ஒரு உருட்டுத் தடி.

சம்முகமும் வரிசையில் வந்தான். அவன் வட்டிலில் ஒரு சோற்றுக் கட்டி. ஒரு அகப்பை சாம்பார். ஒரு கடலை உருண்டை.

''ம்.... அம்புட்டுத்தான்'' என்று உறுமினான்.

அந்தப்பயங்கர முகத்தை மிரட்சியோடு ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்தான் சம்முகம்.

மாமரத்துக்கு அடியில் போய் உட்கார்ந்தான். சாப்பாடு முழுக்க கல், 'நெறு, நெறு' என்கிற பொடிக் கற்கள். சாம்பாரும் என்னவோ மாதிரியிருந்தது. வாய்க்கே விளங்கவில்லை.

'அச்சடிச்ச களியும்

அவுன்ஸ் கிளாஸ் சாம்பாரும்

வெண்ணெய் எடுக்காத மோரும்

வேப்பமரத்து நிழலும்,' என்று ஜெயில் சோறு பற்றிப் பெருமையாகப் பாட்டுப்பாடுவார்களே, இது என்ன இப்படி இருக்கிறது? ருசியில்லாமல் - சுத்தமில் லாமல், சே!

இதை மனுசன் தின்ன முடியுமா?

சம்முகத்துக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. வட்டிலை வெறித்துப் பார்த்தான். அப்படியே கீழே கொட்டி விடலாமா? என்று ஒரு கணம் யோசித்தான்.

நிதானித்தான். இன்னும் பதினைந்து நாட்கள், சனியன் பிடித்த இந்த நரகத்தில் கிடந்தாக வேண்டும். வயிற்றைக் காயப் போட முடியாது. நிரந்தரமாக பட்டினி கிடக்க முடியாது.

பல்லைக்கடித்துக் கொண்டு சகித்துக் கொண்டான். சாப்பிட முயன்றான்.

சாப்பிடுகிற அழகைப் பார்ப்பதுபோல ஒரு எதிர் பார்ப்போடு உட்கார்ந்திருக்கிற மாரியம்மாள் இல்லை. சாப்பிட்டுக் கொண்டே கொஞ்சலும் கெஞ்சலுமாய் சள சளக்கிற மகள் காமாட்சி இல்லை. அம்மாவிடம்

அக்காவைப் பற்றிப் புகார் சொல்லிக்கொண்டே போகிற கதிர்வேலு இல்லை.

சம்முகம் கண்ணுக்குள் உறுத்தல். முட்டிக்கொண்டு வருகிற ஏக்கம். மனசுக்குள் கசாமுசா. அழ வேண்டும் போலிருந்தது.

சுற்றிலும் ஆட்கள். தட்டும் குவளையும், ஜமுக் காளமுமாய் லாந்துகிற ஆட்கள். சம்முகத்துக்குள் வெறுமை. சூன்யத்திற்குள் விடப்பட்ட மாதிரி ஒரு பிரமை.

விழிக்கடையிலிருந்து ஒரு துளி உதிர்ந்து, வட்டி லில் விழுந்தது. சோறு தொண்டைக்குள் இறங்க மறுக் கிறது.

ராத்திரியே கூட்டம் கூடியது. இரண்டாயிரத்துக் கும் மேற்பட்ட மறியல் வீரர்கள் சகலரும் மாமரத்து மைதானத்தில் கூடினர். பலவித மனிதக் குரல்கள். சந்தை இரைச்சல்.

சாப்பாடு பற்றிய புகார்க்கூச்சல். கக்கூஸ் பற்றிய குற்றச்சாட்டுகள். தண்ணீர்த் தட்டுப்பாடு பற்றிய கூப் பாடுகள். ஏகமாய்ச்சளசளப்பு. பலவித கோபக்குரல்கள் முடிவில்லாத குமுறல்கள்.

கடைசியில், ஒரு தலைவர் திண்ணையின் மேல்ஏறி நின்று கோஷம் கொடுத்தார். எதிர்பார்ப்பு நிறைந்த கனத்த அமைதி.

அவர்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கிற கம்யூன் பற்றி-அமைச்சரவையைப் பற்றிக் கூறினார். நல்லசிவம், கலாச்சாரத்துறை அமைச்சர்.

மந்திரிகளின் கடமைகள் பற்றி விளக்கினார்.

சிறை நிர்வாகம் - சீர் கேடுகள் - கைதிகளுக்குரிய சலுகைகள், வசதிகள் மறுக்கப்படுகிற அநீதி பற்றி யெல்லாம் பேசிய அவர், இந்தச் சீர்கேடுகள் நீங்கும் வரை, 'உண்ணாவிரதப் போராட்டம்' என்று உற்சாக மாக பிரகடனம் செய்தார்.

சம்முகம் திடுக்கிட்டான். 'இங்கும் போராட்டமா?'

சிறைச்சாலைக்குள் நடத்துகிற போராட்டம், வெளியே யாருக்குத் தெரியும்? உள்ளே வைத்து எல்லாரையும் அடித்து நொறுக்கினால், என்ன செய்வது? யார் வந்து தடுக்க முடியும்?

இதென்ன...புதுவம்பாக முளைக்கிறது?

கூட்டம் முழுக்க அலை அலையாகக் கரைபுரளுகிற உற்சாகம். 'ஓங்குக, ஓங்குக' என்கிற காட்டுக்கத்தல்.

சம்முகத்துக்கு அடிவயிற்றை கலக்கியது.

அடிபட்டு முறிந்த காலோடு ஆஸ்பத்திரியில் கிடக்கிற சம்முகம். வலி பொறுக்காமல் கதறுகிறான். ''இந்தக் கொடுமையும் உண்டுமா?'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுகிற மாரியம்மா. ''அய்யா, அய்யா'' என்று கதறிக் கரைகிற காமாட்சி....

மனசுக்குள் தெரிந்த கற்பனைக் காட்சி. அவனுக்குள் நடுக்கம். திசையறியாமல் வந்து சிக்கிக்கொண்ட பயம். விதம் விதமான மனக்காட்சிகள்... கிலி, திகில்.

உறக்கம் கண்ணில் ஒட்டவே இல்லை.

மொய்யிடுகிற கொசுக்கள். இந்த ஆடிமாசத்திலும் கொசுவா! அடேயப்பா, 'எந்தத் தண்டியாக' இருக் கிறது! ஒரு ஈயைப்போல.

மாமர அடர்த்திக்குள் பறவைகளின் ராத்திரி ரகசிய மொழிகள். சின்னச் சின்னச் சண்டைகள்.

நள்ளிரவிலேயே மந்திரிசபை கூடியது. ஜெயில் சூப்பிரண்டெண்ட் அழைத்தால்.... பேச்சு வார்த்தைக்கு யார் யார் போவது? எப்படிப் பேசுவது? எதை எதைக் கோருவது? எது ஏதற்கு ஒப்புக்கொள்வது?

நல்லசிவம் வந்து விபரம் எல்லாம் சொன்னான். சம்முகம் 'உம்' கொட்டினான். ஒன்றும் பேசவில்லை. எதைப்பேச? அரண்டு போய்க் கிடந்தான்,

'விடிஞ்சா.... என்ன நடக்கப் போவுதோ' என்கிற திகில், கிலி பிடித்த மனசில் உறக்கம் வந்து ஒண்ட முடியுமா?

# 6

சம்முகம் வெறுமனே புரண்டு கொண்டிருந்தான். மகள் காமாட்சி ஞாபகம், புண்ணில் வந்து மொய்க்கிற ஈக்களாக, மீண்டும் மீண்டும்.

இன்னும் விடியவில்லை. சாரல் மேகத்திற்குள் தேய்பிறை நிலா, ஒளி செத்துக் கிடந்தது. கூதலடிக் கிறது.

நாலரை மணி இருக்கும். ஜெயிலின் சகல ஜீவ ராசிகளும் கதிகலங்கிப்போகிற மாதிரி, ஒரு சைரன் இரைச்சல். காது ஐவ்வுகளைக் கிழிக்கிற இரைச்சல்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், வார்டர்கள் பேரேடு களோடு வந்து விட்டனர்.

''ஃபைல் ... ஃபைல் ஃபைலுக்கு நேரமாச்சு எல்

லாரும் எந்திருச்சு வாங்க. ஃபைல்.''

சம்முகத்துக்கு ஒன்றும் புரியவில்லை. வைகறை மயக்கத்தில் லயித்துக் கிடந்தவர்கள், கெட்ட கனாக் கண்டவர்களைப் போல திடுக்கிட்டு முழித்தனர். ஒன்றும் புரியவில்லை.

நல்லசிவம் எல்லாரையும் எழுப்பிவிட்டான்.

''ஃபைலுக்கு நேரமாச்சு. ம். வாங்க, வாங்க.''

நாலு நாலு பேராக, வரிசையாக உட்காரவைக்கப் பட்டனர். உறங்கியவர்கள், கக்கூஸ் போனவர்கள் எல்லாரும் வந்து சேர.... வரிசை அமைய தாமதமாயிற்று.

வார்டர்கள் பொறுமையிழந்து முணங்கினர்.

மாமரப்பறவைகள் சப்த அதிர்வில் மிரண்டுபோய் கீச்சிட்டன.

தூக்கச்சடவு நீங்காத முகங்களை முழங்கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டு, கோழித்தூக்கம் போட்டனர்.

இரண்டு வார்டர்களும் மாறி மாறி வரிசையை எண்ணினர். பேரேடுகளிலுள்ள கணக்குடன் ஒப்பிட்டனர். 'மாமரத்தில் எத்தனை' 'புளிய மரத்தில் எத்தனை' 'டோட்டல் எவ்வளவு' 'சரியாப் போச்சா?' 'செக்கப் பண்ணுங்க' 'ஓகே.'

ஒரு வார்டர் பலமாகக் கத்தினார் ''ரைஸ்!''

எல்லோரும் மொளோரென்று எழுந்தனர். கக்கூஸ் பக்கம் ஓடியவர்கள் சிலர். விட்ட இடத்திலிருந்து தூக்கத்தைப் பிடிக்கப் போனவர்கள் பலர்.

சம்முகம் மாமரத்தடியில் வந்து சாய்ந்து கொண்டான். பசிக்கிற வயிற்றைத் தடவிக் கொண்டான்.

பறவைகளின் உலகமும் விழித்துக் கொண்டது. காகங்கள் கரைந்தன. மைனாக்கள் 'கிச்சட்டி, கிச்சட்டி' என்று கொஞ்சிக் கொண்டன.

சம்முகம் மனசுக்குள் ஊர் வந்தது. உழுது கொண்டு

இருக்கிற புஞ்சையில் ஈரமண்ணில் மைனாக்களும். கரிச்சான்களும் வந்து குதித்துக் குதித்து புழுக்களைப் பொறுக்கும் காட்சி, ஞாபகத்தில் உரசியது.

ஆடி மாசம். தேடிக்கிடைக்காத ஆடிப்பட்டம். கிராமத்து சம்சாரிகள் தூசியும் துப்பட்டையுமாய் அலைவார்கள். ராத்திரியிலும் வேலைகள்தான்.

கம்மங்கதிர்களை அறுக்கணும். களம் சேர்க்கணும்.

காவல் காத்து, காய வைத்து, அடித்து, தூற்றி, மூடையாக்கி வீடு கொண்டு வந்து சேர்க்கணும்.

அறுத்துக் காயப் போட்ட கம்பந்தட்டைகளைக் கட்டணும். வண்டியில் பாரம் ஏற்றணும். கொண்டு வந்து சேர்த்து படப்பாக அடுக்கணும்.

நிலத்தை உழணும். குப்பையடிக்கணும். மண்ணடிக்கணும். மிளகாய் நாற்றங்கால் போடணும்.

சமையலுக்கு அமைகிற பக்குவத்தைப்போல, சம்சாரிக்குப் பருவம். அமைகிற பருவத்தில் உரியதைத் தவறாமல் செய்யணும். தவறவிட்டுவிட்டால் ... வருஷ வெள்ளாமையே தவறிப்போகும்.

முதல்கோணல் முழுக்கோணல் ஆகிவிடும். வெள்ளாமையைத் தவறவிட்டு விட்டால்.... வாங்கிய கடன்காரனுக்கு எப்படி நல்ல பிள்ளையாவது? எதை வைத்துக் கடன் அடைப்பது? கஞ்சிக்கு எங்கே போக? சத்திரம் சாவடிக்கா? திருவோடு எடுத்துக்கொண்டா?.

உழுகிற காலத்தில் ஊர் சுற்றுகிறவன், அறுக்கிற காலத்தில் அரிவாள் தேடவேண்டாம் என்று சொலவடை சொல்வார்கள். நியாயந்தானே!

ஜெயிலில் இருந்து விட்டு ஊர் போனால், வெள் ளாமை வீடு வந்தா சேரும்?

மாரியம்மா படித்துப் படித்துச் சொன்னாளே....

'உண்டான ஜோலியைப் பாருங்க' என்றாளே....

வீராப்பாகப் பேசிவிட்டு வந்து, என்ன ஆயிற்று? ஒன்று நினைக்க, வேறொன்றாக முடிந்து விட்டதே. 'சாயங்காலம் திரும்பி விடலாம்' என்ற நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டார்கள் பாவிகள்!

காடு அங்கே. மாலைக்கு ஏங்கும் கன்னிப் பெண்ணைப் போல, வியர்வைக்கு ஏங்கும் புஞ்சை. வாழா வெட்டியைப் போல கண்ணீர் சிந்துகிற தோட்டம்.

ச்சே! நான் வந்திருக்கக்கூடாது. ஒதுங்கியிருந் திருக்கணும். நான் வந்ததினால்.... இங்கு என்ன கிழிந்து விட்டது?

இங்க நடத்துகிற போராட்டமும், போடுகிற கோஷ மும் டெல்லிக்கா கேட்டு விடப்போகிறது? பயந்து போய் உர விலையெல்லாம் 'மளமள' வென்று சரிந்தா போய்விடும்?

எல்லாம் வெற்று வேலை. விரையம். கூறு கெட்ட மனப்பிரமை. வந்தது தப்பு.

மாரியம்மா தவிப்பு, காடுகரை சேதாரம். இந்த வருஷ வெள்ளாமையே நாசம். காமாட்சி....

ஊகும்.... நாம வந்தது முட்டாத்தனம். ஒதுங்கி யிருந்திருக்கணும். நல்லசிவம் கூப்பிடவா செய்தான்?

நானாக அல்லவா முந்திரிக்கொட்டை மாதிரி 'நா வாரேன்' என்று உளறித் தொலைத்தேன்?

நாக்கில் சனி. நாவில் உட்கார்ந்திருந்த சனி, வழியில் போன சனியனை 'வா'வென்று கூப்பிட்டுக் கொண்டது. ரெண்டு சனியன்களும் சேர்ந்து கொண்டு, புத்தியைச் சீரழித்துப் பிழைப்பைக் கெடுத்துவிட்டது.

வருஷம் பூராவும் மாரியம்மா பிய்த்துப் பிடுங்குவாள். முள்ளாய்க் குத்துவாள். ''இப்படி கூறு கெட்ட மனுசரும் ஒலகத்துலே இருப்பாகளா? ஊரைக் காப்பாத்த ஜெயிலுக்குப் போய்... வீட்டை நாசம் பண்ணுகிற ஆம்பளையை எங்காச்சும் பாக்க முடியுமா?''

குத்திக் குத்தி வாங்குவாள். கொத்திக் கொத்திப் பிடுங்குவாள். கேட்டுத்தான் ஆக வேண்டும். சகித்துத் தான் ஆகவேண்டும். செய்த தப்புக்குத் தண்டனை அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? வேறுவழி?

போதாக்குறைக்கு —

இங்கு வேண்டாத வம்புதும்புகள். உண்ணாவிரதப் போராட்டமாம்! நல்ல கூத்து!

திமிர் ஏறிப்போய்க் குற்றம் செய்கிறவர்களை ஒடுக்குவதற்காக கொண்டு வந்து அடைக்கிற இடம், ஜெயில். இங்கேயும் போராட்டமா? விடுவார்களா?

இன்றைக்கு சகலரையும் அடி பின்னியெடுத்து விடுவார்கள். கால் போச்சு, கை போச்சு என்று ரத்தக் காயத்தோடு புலம்ப வேண்டியதுதான்.

அதுதான் நடக்கப் போகிறது....

காலை உணவு வந்து சேர்ந்தது. சோளத்தில் செய்த உப்புமா. கோழிகூட திங்காது.

இரண்டு குவா ரைண்டினிலும் வந்த உப்புமா, சீந்துவாரில்லாமல் வெயிலில் காய்ந்தது. ஈக்கள் மட்டும் தான் மொய்த்தன.

மதியச்சாப்பாடும் வந்தது. அரிசிச் சோற்றுக்கட்டி, கோதுமைக்களி, மோர்...

யாரும் போய் வாங்கவில்லை. சம்முகத்துக்குள் 'திக், திக்'கென்று பயம். அடிக்கொரு தரம் சிறை வாசலையே பார்த்தான்.

எந்த நிமிஷத்திலும் திமுதிமு வென்று போலீஸ் பட்டாளம் வெள்ளமாய் வரலாம். தடிகளோடு பாயலாம். நரவேட்டை நடக்கலாம்.

12-30க்குப் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு வந்தது. நல்லசிவம் போயிருந்தான்.

டோய்விட்டு வந்தவர்களை அனைவரும் மொய்த்தனர். ஆவல் பரபரப்பு, கூச்சல், சந்தைக்கடை இரைச்சல்.

நல்லசிவம் மகிழ்ச்சிக் கூவலாகக் கூறினான்.

''வெற்றி! வெற்றி! மக்கள் சக்திக்கு மகத்தான வெற்றி!''

சம்முகத்துக்கு ஒரு இழவும் புரியவில்லை. அவன் பயத்தோடு எதிர்பார்த்தது ஒன்று. இங்கு வேறு 'என்னவோ' நடக்கிறது....

'என்னடாயிது.... எல்லாம் ஏறுக்கு மாறா இருக்கு'

தலைவர் மரத்தடித் திண்ணையில் ஏறி நின்றார். பேசினார். கூட்டம் முழுக்க மகிழ்ச்சிக் கோஷங்கள். ஒவ்வொரு முகங்களிலும் சிரிப்பு வெளிச்சம்....

அவர் பேசியது பொய்யில்லை. மறுநாள் உணவு சுத்தமாக இருந்தது. உணவு அமைச்சர் கண்காணிப்பில் தயாரிக்கப்பட்ட உணவு. ராத்திரியிலேயே தடிகளும் தென்னங்கிடுகுக் கட்டுகளும் வந்து குவிந்தன. தற் காலிகக் கக்கூஸ் உதயமாயிற்று. குளிப்பதற்கும், குடிப் பதற்கும் தனித்தனியாக நகராட்சி லாரிகளில் தண்ணீர் வந்தது.

மறுநாள் இரவு, நல்லசிவம் ஏற்பாட்டில் பட்டி மண்டபம்.

'உழுகிறவன் அழுவதற்கு பெரிதும் காரணம், அரசின் கையாலாகாமையா-உழவனின் அறியாமையா'

ஏகக்கலகலப்பு. ஒரே நகைச்சுவை மயம். சிரித்து மாளவில்லை. முழுக்க நையாண்டிகள். நாகரீகம் குன்றாத கேலிகள். வார்டர்கள் நன்றாக ரசித்தார்கள்.

அரசாங்கமும், அதிகாரிகளும் கிழிக்கப்பட்டார்கள். உழவனையும் சும்மா வைக்கவில்லை. சகுனம் பார்க்கிற சம்சாரி-பொழிச்சண்டையில் நிலத்தையே தொலைக்கிற சம்சாரி-சாதிச்சண்டையில் சாகிற சம்சாரி-நல்ல தலைவர் களை இனம் காணத்தெரியாத சம்சாரி....என்று சம்சாரி களும் விமர்சிக்கப்பட்டார்கள்.

சம்முகம் ரொம்ப ரசித்தான். அவன் அடிமனதில் உறைந்து கிடந்த அபிப்ராயங்களே அங்கே பேசப்பட்ட மாதிரியிருந்தது. மனம் விட்டுச் சிரித்தான். அடிக்கொரு தடவை கைதட்டினான்.

அன்றைக்குத்தான் -

அவன் நன்றாக உறங்கினான்.

# 7

சாயங்காலம் 'ஃபைல்' முடிந்தவுடன், மைதானம் முழுக்க ஆட்கள். சடுகுடு விளையாடுகிற கோஷ்டிகள்-தத்துவ சர்ச்சை நடத்துகிற குழுக்கள்-நாடக ஒத்திகைகள் நடத்துகிற கூட்டம்-புதிய பாட்டுகள் கட்டுகிற வேலை - என்று ஆங்காங்கே வேலைகள் மும்முரமாய் ...

சம்முகம் சலிப்பும், வேதனையுமாய் வராண்டாச் சுவரில் சாய்ந்து சரிந்து கிடந்தான்.

நேற்றுப்போல இருக்கிறது, பன்னிரண்டு நாட்கள் மாயமாய் மறைந்து விட்டன. இத்தனை நாளும் மாரியம்மா எப்படி கலங்கிப்போய் கிடக்கிறாளோ .. என்ன என்னவெல்லாம் நினைத்துப் பதறுகிறாளோ...

கழுத்தைக் கட்டிக்கொண்டு செல்லப்பேச்சு பேசுகிற காமாட்சியை நினைத்தால். மனசு வெந்து போகிறது.

காடுகரைகளில் எல்லாம் போட்டது போட்டபடியே கிடக்கும். எத்தனை வேலைகள் காத்துக் கிடக்குமோ ...

ஊரிலுள்ள சம்சாரிகள் எல்லாரும் ஓடிஓடிப் பாடுபட்டு, உரிய பருவத்தில் உருப்படியாகக் காரியம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால்... இவன் இங்கே விரையமாய் - சோம்பிச் சும்மா கிடக்கிறான்.

சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள். உப்புக்கல்லுக்குக் கூடப் பெறாத ஒரு கிறுக்குப் பயல்கூட இவனைக் கேலி பண்ணுவான். கிண்டல் அடிப்பான். நமுட்டுச் சிரிப்பு சிரிப்பான்.

நினைத்தால்.... ரொம்பக் கேவலமாக இருக்கிறது. மனசை அறுக்கிற அவமானச்சோகம்.

இல்லை.... நான் வந்திருக்கக்கூடாது. ஒதுங்கி யிருந்திருக்கணும். நண்டு கொழுத்தால் பொந்தில் இருக்காது. நானும் அந்த நண்டு மாதிரித்தான். முட்டாள்தனமாய் வந்து, கேவலப் பொருளாயிட்டேன்.

ச்சே!

சம்சாரி மண்ணை நினைக்கணும். மழையை நினைக் கணும். பருவம் பார்க்கணும், வஞ்சகமில்லாமல் பாடு படணும்.

அரசியல் எல்லாம் சம்சாரிக்கு எதற்கு? அரசியலுக்கு எல்லாம் சம்சாரி வந்தால், அவன் வாழ்க்கை தரிசாகப் போய்விடும்.

உரவிலை, உப்பு விலை கூடினால் சம்சாரிக்கு நஷ்டம் தான். போராடி ஜெயிலுக்கு வந்ததனால் மட்டும், விலை குறைந்தா போய்விடப் போகிறது?

ம்.... வந்தது வந்தாகிவிட்டது. இனிப்புலம்பி என்ன ஆகப்போகிறது? பல்லைக்கடித்துக் கொண்டு, மிச்ச நாட்களையும் சகித்துக் கொள்ள வேண்டியதுதான். இதை ஒரு ஜென்மப் பாடமாய் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

''இந்தாங்க ...''

நினைவுச் சரட்டை அறுத்தகுரல், நல்லசிவம்தான்.

''என்னப்பா?''

''உங்க பீடிரேசன்''

''ம், இன்னிக்குஎத்தினி?''

''எட்டு''

''ம்''

''அது மட்டுமில்லே. கொடைக்கானல் சம்சாரிக நன்கொடையா குடுத்த பேரிக்காய் நாளை வருது. எம்புட்டுத் தெரியுமா? ஒரு லாரி லோடு.''

சம்முகம் வியப்போடு பார்த்தான். நல்லசிவத்தின் கண்களில் உற்று நோக்கினான்.

''என்னப்பா நல்லசிவம்...''

''சொல்லுங்க''

''ஜெயில்லே வந்து சிரமப்படுற மாதிரியே தெரியலியே, இங்கேயும் வந்து.... நீங்க ஒரு ராஜாங்கமே நடத்துறீங்களே! அதுவும் ரொம்பத் தெளிவா நடத்துறீங்களே....''

நல்லசிவம் மென்மையாகச் சிரித்தான்.

''அதான்... இந்த இயக்கத்தோட ஆன்ம பலம், ஒழுங்கு, கட்டுப்பாடு, தோழமை, வீர்யமான செயல்பாடு.''

''ம்''

''சரி இருங்க. நைட்டிலே எல்லா நிகழ்ச்சிகளும் முடிஞ்ச பிறகு, ராசையாவைப் பார்த்துப்பேசப்போறேன். நீங்க வாரீங்களா?''

''ம்...சரி வாரேன்''

நல்லசிவம் அடுத்த பணிக்கு ஓடுகிறவனைப்போல, ஒரு பறவையாகப் பறந்து விட்டான். சம்முகம் அவனது சுறுசுறுப்பையே பார்த்தவன்....மனசுக்குள் திருப்தியாக முணுமுணுத்துக்கொண்டான், 'நல்ல ஆளுகதான்...நல்ல கட்சிதான்'

இந்தப் பன்னிரண்டு நாட்களும் போனமாதிரியே தெரியவில்லை. மாயமாய் மறைந்து விட்டது. அந்த மாதிரி இங்கு ஒரு வாழ்க்கை ஒழுங்கை-அழகை ஏற்படுத்தி விட்டார்களே....

காலை உணவு முடிந்தவுடன் சகலரும் மாமரத்து மைதானத்தில் வந்து கூடி விடுவார்கள். பெரிய மாநாடு தான்.

''ஏறுதே விலைகள் இங்கு விஷமாக

போரிட வாருங்கள் வீதியிலே''

என்று ஒருவர் பாட்டு பாடுவார். அப்புறம் செய்தி வாசிப்பு. செய்தி விமர்சனம். அப்புறம் கருத்தரங்கம்.

''உரமான்ய ரத்தும் உலக வங்கியும்''

''உழவனைப் பிளக்கும் வகுப்புவாதம்''

''உழவனும், ஜாதீய பேதங்களும்''

''வினை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய மறுப்பதன் மர்மம்?''

இப்படிப் பல விஷயங்கள். தினசரி ஒரு தலைப்பு.

சம்முகத்துக்குப் புதுப்புது ஜன்னல்கள் திறந்து கொண்டமாதிரி இருக்கும். உள்ளுக்குள் பலப்பல ஒளிக் கற்றைகள்.

தினசரி இவன் பேப்பர்களில் படித்த செய்திகள் தான். ஆனால் அவற்றுக்குள் ஊடுசரடாக ஓடுகிற இணைப்பை எடுத்துக் காட்டுகிற போதுதான்.... விஷயத் தின் முழுசே விளங்குகிறது.

மதியச் சாப்பாடு. பிறகு விளையாட்டு. விருப்பம் போல செயல்பாடுகள். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, மீண்டும் கூட்டம், முழுக்க கலை இலக்கிய நிகழ்ச்சிகள்.

கவிதைகள், பாட்டுகள், நாடகங்கள்... ஆட்டங்கள் ...

வார்டர்களும் வந்து ஆர்வமாய் ரசிப்பார்கள்.

பார்வையாளர் நேரத்தில்... வெளியேயிருந்து பார்க்க வருவார்கள். பழம், பீடி, சிகரெட், எண்ணெய், சோப்பு என்று ஏராளமாய் பொருட்கள் வரும். வருகிற பொருள் யாவும் கம்யூனில் ஒப்படைக்கப்படும்.

அங்கிருந்து எல்லோருக்கும் சரிசமமாக பங்கிட்டு அன்றாட ரேசனாக விநியோகிக்கப்படும்.

அப்படி வந்ததுதான் இன்று வந்த பீடிகள்.

ராசையா பற்றி நல்லசிவம் சொன்னது நினைவில் உரசியது.

திருட்டு, சந்தேகக்கேஸ்களில் வந்த தண்டனைக் கைதிகள்தான், இந்த அரசியல் கைதிகளுக்குச் சேவகர் கள். மைதானம் மற்றும் சகல இடங்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டியவர்கள்.

அந்தக்கைதிகள், முரட்டுக்கச்சையில் தைத்த பழுப்பு நிற டவுசரும், பனியனும் போட்டிருப்பார்கள். எல்லா-ரும் இயல்பாகவே இருப்பார்கள், கைதேர்ந்த சிறைப் பறவைகள்தான்.

அதில் ஒருவன்தான், இந்த ராசையா. சின்ன வயசு தான். முப்பதுக்குள் இருக்கும். எந்நேரமும் மௌன மாய் இருப்பான். ஒரு வார்த்தைகூட சிந்த மாட்டான். முகத்தில் ஒரு இறுக்கம், வருத்தம், கண்களில் ஒரு அவலம்.

கவனிக்கத்தூண்டுகிற அளவுக்கு சோகபிம்பம்.

பாவம், அவனுக்குள் என்ன கதையோ என்ன அவலமோ....

# 8

சாதிச் சங்கங்கள் வளர்ந்து, முறுக்கேறி, சண்டையாகி இரண்டு கிராமங்களே மோதிக்கொள்ள- அந்த மோதலில் தகப்பனை இழந்து, தாய் இறந்து, மகள் கற்பழிக்கப் பட்டு ஒரு குடும்பமே சிதைந்து சீரழிய.... அப்புறம் உழவர் சங்கம் தலையிட்டு சமரசம் ஏற்படுத்தி, சகலரையும் அண்ணன் தம்பிகளாக மாற்று வதாக... ஒரு நாடகம்.

ஜெயிலுக்குள் கிடைத்த வசதிகளை வைத்துக் கொண்டு, மேக்கப்போட்டு நடந்த நாடகம். சகலரை யும் அசத்தி விட்டது. சம்முகம் மனம் ஒன்றிப் போய் விட்டான்.

கற்பழிக்கப்பட்ட மகள், செத்துக்கிடக்கிற தகப்பன் மேல் விழுந்து கதறுகிற காட்சியில், இவனும் உடைந்து விட்டான். காமாட்சியே அப்படிக் கதறுகிறமாதிரி ஒரு நினைப்பு. மனசெல்லாம் கலங்கி கண்ணீர் கசிந்து விட்டது.

நாடகத்தில் மனசு முழுக்க இழந்து விட்டு, அதையே அசைபோட்ட பிரமிப்போடு படுக்கப்போன சம்முகத்தை நல்லசிவத்தின் குரல் வெட்டியது. ''போவமா?''

அப்போதுதான், ராசையா ஞாபகம் வந்தது.

மனசுமுழுக்க நாடகம். எதுவும் பேசமுடியாத மன நிலை. ''ம்'' என்றான். ஜமுக்காளத்தை மடித்து தோளில் போட்டுக்கொண்டான், புறப்பட்டான்.

புளியமரக் குவாரைன்டைனுக்குள் அந்த லாக்கப் ரூம். அதில்தான் ராசையா அடைக்கப்பட்டிருந்தான். உயர்ந்த கம்பிக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அதற்கு வெளியே நல்லசிவம் உட்கார்ந்தான். உள்ளே -

நிறைய திண்ணைகள் திண்ணைகளிலும் கீழேயுமாக நிறையக் கைதிகள், குறட்டை விட்டனர். அழுக்குச் சுவர்களில் அடர்த்தியாய் மூட்டைப்பூச்சிகளின் மரண அடையாளங்கள்.

இரும்புக்கதவில் முதுகு பதிய ராசையா உட்கார்ந் திருந்தான். கட்டை குட்டையாக வெட்டப்பட்டமுடி. தூக்கம் பார்க்காமல் சிவந்த கண்கள், முகமும் பார்த் திருக்கவில்லை.

நல்லசிவம் பேச்சு கொடுத்துப்பார்த்தான். ராசையா திரும்பி உட்கார்ந்தான். இவனைப்பார்த்தான். இடை யில் சிறைக்கதவு, மௌனத்தை அடைகாத்தான், வெறுமனே பார்த்தான். இறுக்கம் உடைய மறுத்தது.

கண்களில் விரக்தி. 'சொல்லி என்ன ஆகப்போகிறது' என்கிற அவநம்பிக்கை.

நல்லசிவம் விடவில்லை. பண்ணிப் பண்ணிப் பேசினான். துருவித் துருவி கேட்டான். அன்பாக-பாசமாக-பங்கு கொள்கிற அக்கரையாக கேள்விகளைப் போட.... கொஞ்சமாய் நம்பிக்கை வர.... ராசையா மனக் கதவைத் திறந்தான்.

அவன் முகமே மாறியது. நினைவுக்கு வந்த அவல உணர்ச்சி அவன் கண்களின் நீராக மின்னியது.

''எங்க ஊரு சோழவந்தான் பக்கம். சின்ன ஊரு. சுத்தி நல்ல செழிப்பு. வயக்காடு, நெல்லும், கரும்பும் விளையக்கூடிய நல்ல மண்ணு, நீர்ப்பிடிப்பு.

எங்க ஊர்லே எல்லாரும்... அசட்டு ராமையான்னு தான் என்னைக் கூப்பிடுவாக. எந்த வம்புதும்புக்கும் போகமாட்டேன். நா உண்டு, என் பாடுண்டுன்னு ஒதுங்கி யிருப்பேன். ஊர்த்திருவிழாவுலே கூட நிற்கமாட்டேன். நாலுபேரு கூடுகிற எந்தக் கூட்டத்துலேயும் உட்கார மாட்டேன். ஒன்னுகிடக்க ஒன்னாகிப் போகுமோன்னு பயம்.

எங்க ஊருக்குத் தெற்கே ஒரு பெரிய தென்னந் தோப்பு. பன்னெண்டு குறுக்கம். முழுக்க தென்னை தான். பெரிய கிணறு. பம்ப்செட் வற்றாத தண்ணி.

அந்தத்தோப்புக்கு முதலாளி, மதுரையில் பெரிய பணக்காரரு. பெரிய பங்களா, வசதியான குடும்பம். உண்ட கையிலே ஒட்டுன படுக்கையை உதறுனமாதிரித் தான் இந்தத் தோப்பு, அந்த முதலாளிக்கு.

அந்தத் தோப்புக்கு நான்தா காவல், பராமரிப்பு நாய் போல விசுவாசமாக கிடப்பேன். ஒரு மட்டையைக் கூட யாரும் தொட்டுர முடியாது. ஒரு ஈ காக்கை கூட தோப்புக்குள்ளே நுழைஞ்சிர முடியாது. அம்புட்டு கண்காணிப்பு.

ஒரு நேரம்கூட சும்மாயிருக்க மாட்டேன், மாடாய் உழைப்பேன். தென்னம்பிள்ளை யெல்லாம் என் சொந்தப்

புள்ளைக மாதிரி நெனைச்சு, கண்ணும் கருத்துமா பாடுபட்டேன்.

அப்பப்போ மதுரையிலிருந்து டக்கர்லே குப்பை வரும். உரஉப்புவரும். அந்த டக்கர்லேயே தேங்காய் களை ஏத்தியனுப்பிருவேன்.

எப்பவாவது முதலாளி காருலே வருவாரு. சுத்திப் பாப்பாரு. சம்பளம் தருவாரு. செலவுக்கும் பணம் தருவாரு.

''நல்லா பாத்துக்க''ன்னு சொல்லிட்டுப் போயிரு வாரு.

தூரத்துலே அந்தக்காரு மறையுற வரைக்கும் நின்னு பாத்துக்கிட்டிருப்பேன். நெசமாவே, அவரை எங்ககுல தெய்வம் மாதிரித்தான் நெனைச்சுக் கும்புட்டு வந்தேன்.

அவருதானே குடிசைதந்து, வேலையும் தந்து, கஞ்சியும் ஊத்துறாரு? அவருதானே எங்க குலதெய்வம்?

எங்கம்மாவுக்கு கண்ணு தெரியாது. வயசாச்சு, நோய், படுத்த படுக்கையாயிருச்சு. அப்பதான் எனக்கு கல்யாணம் ஏற்பாடாச்சு.

முதலாளிகிட்டே விபரம் சொன்னேன். ரொம்பச் சந்தோஷப்பட்டு ஆசீர்வாதம் பண்ணி, ஆயிரம் ரூபாய் இனாமும் தந்தாரு.

''கல்யாணத்துக்கு வரமுடியாதுடா, வருத்தப்படா தேன்னாரு.''

எனக்கு வாய்ச்ச மகராசி இருக்காளே புண்ணியவதி அவள் எங்குடிசைக்கு வரக்கூடியவள் இல்லே. பெரிய பணக்கார மகராசமார் வீட்டுக்குப் போக வேண்டியவ. அம்புட்டு அழகு.

# 9

செம்பகம் ஒரு தேவதை மாதிரி. சாயங்காலச் சூரியன் மாதிரி ஒரு நிறம். கண்ணும் மூக்கும், முக லட்சணமும் அப்ப் .......ப்படி இருப்பாள்.

கொணமும் அப்படியேவா அமையணும்? குளுந்த தண்ணியிலே அமர்ந்த புஷ்பம் மாதிரி, அழகும் குணமும். ஒன்னுக்கொன்னு பொருத்தமாய்.... அதுவே ஒரு லட்சணமாய்....

எங்க குருட்டுத்தாயாரோட நானும், அவளும் தோப்பிலே இருந்த குடிசையிலேதான் இருந்தோம். வாழ்ந்தோம். ஜென்ம மோட்சம் மாதிரியான வாழ்க்கை. அன்பா - பாசமா - ஒருத்தரிலே ஒருத்தராக் கலந்து- உயிருலே உயிரா கரைஞ்சு-மனசு ஒண்ணாகி - அதுவும் நெறைஞ்சு ததும்பி....

அம்புட்டு அருமையா வாழ்ந்தோம்.

அடுத்த மர்சம் வந்த முதலாளி தோட்டத்தைச் சுத்திப் பாத்தாரு. சம்பளம் குடுத்தர்ரு. செலவுக்கும் பணம் குடுத்தாரு.

"ஏண்டா்.... ஒம் பொண்டாட்டியை ஏங்கண்ணுலே காட்டமாட்டேயா்''ன்னு ஒரு தகப்பனோட உரிமையோட கேட்டாரு. நானும் செம்பகத்தைக் கூப்புட்டேன்.

வெளியே வந்தாள். அந்தச் சாயங்காலச்சூரியன் மேலே தென்னங்கீத்துகளை மீறிக் கசிஞ்ச மஞ்ச வெயில். ஒரு ஓவியம் போல வந்து நின்னாள்.

முதலாளிக்கு கண்ணு கூசலை. திறந்த கண்ணு மூடாம பாத்தாரு.

''நல்லாயிரும்மா'' என்று ஆசீர்வாதம் பண்ணினாரு. கையெடுத்துக் கும்பிட்ட அவள் உள்ளங்கையிலே நூறு ரூவாயைத் திணிச்சாரு.

எனக்குப் பெருமை தாங்கலே. முதலாளி போன பிறகு, செம்பகத்தைப் பாத்து கண்ணடிச்சேன். ''பாத்தியா எங்க முதலாளியை?''

அவ முகத்துலே அந்தப் பூரிப்பு இல்லே. சந்தோசமில்லே. என்னை இளக்காரமா பாத்தா. 'இப்படியும் ஒரு அப்புராணி இருப்பானா'ங்கிற மாதிரி பார்த்தா.

இந்த அசட்டுப்பயலுக்கு அது ஒண்ணும் விளங்கலை. வெளுத்ததெல்லாம் பாலுன்னு நம்பிக் கிடந்த கிறுக்குப் பயநானு

அப்புறம்

அடிக்கொரு தடவை முதலாளி வந்தாரு. பத்து நாளைக்கொரு தடவை காரு வந்துரும்.

''வெத்தலை வாங்கிட்டுவா''

''கலர் வாங்கிட்டு வா''ன்னு என்னை ஊருக்குள்ளே அனுப்பிச்சுருவாரு. வாங்கிட்டு வந்து பாத்தா.... முதலாளி கள்ள முழியா முழிப்பாரு. செம்பகம் என்னைக் கோபம் கோபமா பாத்து எரிப்பாள். இந்த அசட்டுக் கழுதைக்கு ஒரு இழவும் புரியலை.

செம்பகம் ஜாதிமான்கன்னு. ஒரு வார்த்தைகூட ஏங்கிட்ட வாய்திறந்து பேசலை. லேசா... ஜாடைமாடை யாக்கூட கோடு கிழிச்சுக்காட்டலை.

எல்லா அக்கிரமத்தையும் பூமிமாதா போல அவளே முழுங்கிட்டா. பொறுத்துக்கிட்டா, பாதகத்தி!

ஒரு நாளு....

பம்புஷெட் மோட்டார்லே ரிப்பேர். ஒரு சாமான் வாங்க நான் டவுனுக்குப் போயிட்டேன்.

அந்த நேரம் பாத்து முதலாளி வந்துருக்காரு. செம்பகம் மட்டும் இருந்துருக்கா. சோப்பு, குருட்டுத் தாயாரு. என்ன செய்வா? பாவம்.

செம்பகத்தை - தேவதையை - அந்த மிருகம் நாசம் பண்ண முயற்சி பண்ணியிருக்கு. ஓடிஓடிப் பார்த்திருக்கா, அலறியிக்கா, கதறிக்கதறி கையெடுத்துக்கும்பிட்டிருக்கா.

பாவி, விடலே. வெறிபுடிச்ச மிருகத்துக்கு பூவோட அருமை தெரியுமா? வாசம் தெரியுமா?

முரட்டுத்தனமா-பலாத்காரம் பண்ணியிருக்கான்.

கெஞ்சிக்கூத்தாடிப் பாத்துருக்கா. மல்லுக்கட்டிப் பாத்துருக்கா. தப்பிக்க வழியில்லே. எளநீ சீவுறதுக் காகப் போட்டிருந்த அருவாளைத் தூக்கிட்டா. ஒரே போடு.

கையிலே வெட்டு. ரத்தத்தை வடிச்சிக்கிட்டு வெறி நாய் ஓடிப்போயிருச்சு.

டவுன்லேயிருந்து வந்த ஏங்கிட்டே சொல்லியழுதா செம்பகம். ஆதியோடந்தமா சொன்னா. எனக்கு ரத்தம் கொதிச்சது.

நாங்க ஏழைதா. நாயா கிடப்போம். மாடா ஒழைப் போம். பசியிலே இருப்போம். எங்ககிட்டே மிஞ்சு நிக்குறது மானம் ஒண்ணுதானே! இதையும் உதுத்துட்டு எதுக்கு நாங்க உசுர் வாழணும்?

அருவாளோட புறப்பட்டேன். தோப்புக்கு வெளியே போலீஸ் வேன் நிக்குது. ரெண்டு போலீஸ்காரங்க ஏங்கிட்டே வந்தாக.

''ஐயா கூப்பிடுறாக, வா''ன்னாக. ஸ்டேசன்லே ஏதேதோ பேப்பர்லே கைநாட்டு வாங்குனாக.

என்ன எதுக்குன்னு கேட்டேன்.

''நாயே, எதுத்தா கேள்வி கேக்கே?''ன்னு நாயை அடிச்சமாதிரி அடிச்சு லாக்கப்லே போட்டுட்டாக.

எனக்கு ஒண்ணும் புரியலை.

கோர்ட்லே கொண்ணாந்து நிறுத்துனாக, வழக்கை சொன்னாக. எனக்குத் தீயை அள்ளிப்போட்ட மாதிரி எரிஞ்சது. உடம்பு மனசு எல்லாமே திகு திகுன்னு எரிஞ்சது.

நாந்தேங்காய்களை கள்ளத்தனமா வித்தேனாம். தட்டிக்கேட்ட முதலாளிகிட்டே பொண்டாட்டியக் காட்டி மயக்கினேனாம். அதையும் மீறி அவரு கேள்வி கேட்ட துக்குத்தான், அருவாளுட்டு அவரை வெட்டுனேனாம்!

பாத்தீகளா அக்குரமத்தை? பாவம் செய்றது யாரு? கேஸ் யாருமேலே? அதுவும் எப்புட்டு அசிங்கமா?

இந்தக் கொடுமைக்கு சாட்சி சொல்ல நாலு நாய்க.

ஒரு நாய் குலைக்குது ''ஏங்கிட்டேதா இவன் தேங்காய்களை வித்தான்.''

இன்னொரு நாய் குலைக்குது ‘‘நாந்தான் தேங் காய்களுக்கு ரேட்டு பேசிவிட்டு தரகு வாங்குனேன்.’’

மீதி ரெண்டு நாய்களும், முதலாளியை வெட்டுனதை வேடிக்கை பார்த்ததுகளாம்.

இந்த ஏழைக்கு வக்கீல் வைச்சு வாதாட, வக்கு ஏது? வசதி ஏது?

வக்கீல் கிடைச்சாலும், சாட்சிகள் கிடைக்காதே... என்ன செய்றது? இப்ப நான் ஜெயில்லே, குத்த வாளியா.

குத்தவாளி வெளியே வெறிநாயா சுத்திக்கிட்டிருக் கான்.

சாகக்கிடக்கிற குருட்டுத்தாய் - காவல் காக்க நாதி இல்லாம செம்பகம். எச்சிலை வடிச்சுக்கிட்டு ஓநாயா திரியுற அந்த அயோக்கியன்.

பாருங்கய்யா.. பாருங்க. நா என்ன தப்பு செய்ஞ் சேன்? என்ன குத்தம் செய்ஞ்சேன்? எந்த வம்புதும்புக் காச்சும் போனேனா? ஒதுங்கிக் கிடந்த இந்த அசட்டுப் பயலை ... இப்படிக் கிழிச்சு வேடிக்கை பார்க்கணுமா? இது ஞாயமாய்யா? நேர்மையாய்யா? சொல்லுங்கய்யா ... சொல்லுங்க ...

எஞ்செம்பகம் என்னானாளோ.... எங்கம்மா என்ன கதியானாளோ....

# 10

சொல்லி முடிக்கிறபோது...

ராசையா ஆங்காரமாய் கைகளை வீசினான். முகம் உணர்ச்சிமயமாகி கறுத்துக்கிடந்தது. கண்கள் தெறித்து விடுவதைப்போல மிரட்டின. வெடித்துவிடுவதைப்போல நெஞ்சுக்கூடு விம்மி விம்மித் தணிந்தது.

சம்முகம் அப்படியே உறைந்து போனான். மனசின் சகல அணுக்களும் கலைந்து போனதைப்போல தளர்ந்து கிடந்தான்.

இப்படியும் கொடுமைகளா? நடக்குமா? நடக்குதா?

நம்பமுடியாமல், ஜீரணிக்க முடியாமல் திணறிப் போய்நின்ற சம்முகத்தின் எதிரே, உண்மையாய்- சத்தியத்தின் சொரூபமாய்-ராசையா.

நல்லசிவம் கண்கலங்கிப் போயிருந்தான். ராசையாவுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னான்.

விடுதலையாகி வெளியே போனதும் முதல் வேலை ராசையாவை ஜாமீனில் எடுப்பது. வழக்கை அப்பீல் செய்வது. அதற்கான ஏற்பாடுகளை கட்சியின் மூலம் செய்வதாக உறுதி சொன்னான்.

இருவரும் புறப்பட்டனர்.

மாமர குவாரண்டைன் முழுவதும் தூக்கத்தில் கிடந்தது, மௌனமாகவந்தனர். இருவருக்கும் மனசுகனத்தது மௌனமே ஒரு பாஷையாக உயிர் பெற்றுப் பேசிக் கொண்டிருந்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிறு சிறு பல்புகள் மங்கலான சந்தனநிற வெளிச்சம். மாமரம் அடர்த்தியான ராட்சஸனாக நின்றது. சின்னக்காற்று, சன்னமாய் சலசலக்கச் செய்தது.

நல்லசிவத்தால் இந்த மவுனத்தைச் சுமக்கமுடியவில்லை. வெடித்துவிட்டான்.

''பார்த்தீகளா, இதுதா நம்ம சமூகம். நல்லதுகளையெல்லாம் கெடுத்து நாசம் பண்ற சமுதாயம். மனுசனை மனுசத்தன்மைகளோட வாழவிடாத சமுதாயம். காந்திய சுட்டுட்டு சிரிச்ச சமுதாயம். நல்லவங்களையெல்லாம் தோற்கடிச்சு இழிவுபடுத்தி - அற்பத்தனங்களையெல்லாம் தலையிலே வைச்சுக் கொண்டாடுற சமுதாயம். இதுலேயிருந்து ஒதுங்கிப்போய் ஒருத்தன் உருப்படியா வாழ்ந்துர முடியுமா? ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும், எட்டிப்பிடிச்சு உடம்பை கிழிக்கிற குரூரமான சமுதாயம். நம்ம முன்னாடி ரெண்டே வழிதான் இருக்கு. ஒண்ணு, போராடி இந்தச் சமுதாயத்தை மாத்துறது. இன்னொன்னு, பணிஞ்சு போய் இந்தச் சமுதாயம் மாதிரியே மிருகமாயிடறது.''

வெடித்துச் சிதறுபவனைப் போல கட்டுப்பாடு இழந்து பேசுகிற நல்லசிவத்தைப் பார்த்தான் சம்முகம்.

மொத்தப் பூமியையே குலுங்க வைக்கிற ருத்ர தாண்டவமாக அவன் மனசு சீறுகிறது.

''இந்த ரெண்டுலேயிருந்தும் தப்பிச்சு ஒரு மனுசன் சும்மாயிருந்துர முடியுமா? நிச்சயமா முடியாது. மரம் சும்மாயிருந்தாலும், காத்து இருக்கவிடாது. ஆட்டும், ஆடவைக்கும்.''

நல்லசிவம் படுக்கப் போய்விட்டான். சம்முகம் தான் படுக்கிற இடத்துக்கு வந்தான். நீட்டி நிமிர்ந்துபடுத்த சம்முகத்துக்குள் -

ஜெயில் வந்தது. ராசையா வந்தான். முகம் தெரியாத செம்பகம் வந்தாள். நல்லசிவத்தின் ஆவேசப் பேச்சு வந்தது....

கழுத்தைக்கட்டிக் கொண்டு கொஞ்சுகிற மகள் காமாட்சி வந்தாள். மாரியம்மா வந்தாள். உழவுக்கு ஏங்குகிற புஞ்சை வந்தது. ஊர் முழுக்க வந்தது.

பெருமூச்சு விட்டான். மன்சின் ஆழத்திலிருந்து வெளிப்பட்ட பெருமூச்சு.

ஆனாலும் -

ஜெயிலுக்கு வந்தது தப்பு, முட்டாள்தனம் என்ற நினைப்பு மட்டும் வரவேயில்லை, இப்போது.

# அந்நியம்

இன்னும் சரியாக விடியாத வைகறைப் பொழுது. மாசி மாதக்குளிருக்கு சீக்கிரமாகவே விழிப்பு தட்டி விட... டீக்கடையில் அடுப்பு பற்ற வைப்பதற்கு முன் பாகவே தவம் கிடக்கின்றனர், கிராமத்து ஆட்கள்.

அந்த ஊரின் வெறும் வாய்க்கு அவலாக சங்கரப்பன் ஆகிவிட்டார்.

டீக்கடையில் உட்கார இடம் இல்லாமல் அடர்த்தி யாய் ஆட்கள், ஒருத்தன் புதுச் செய்தியை ஒலிபரப்புகிற உற்சாகத்துடன் மெல்ல ஊதினான்.

''விஷயம் தெரியுமா? நம்ம சங்கரப்பன் வீட்லே கோவிச்சுக்கிட்டு ஓடிப் போயிட்டராம்.''

''நெசமாவா?''

''பொய் சொன்னா எனக்குக் கிரீடமா கிடைக்கும்? நெசந்தாங்கேன்.''

''அதெல்லாம் இருக்காதப்பா. பாவம், சங்கரப்பன். நொம்பலப்பட்ட மனுசர். எங்காச்சும் ஒரு சோலியா ஊருக்குப் போயிருப்பாரு. அதுக்குள்ளே கதைகட்டி விடாதீங்கப்பா.''

''கதை கட்டி விட்டா எங்களுக்கு என்ன கிடைக்கப் போகுது? கதை கட்டி விளையாடுற விஷயமா இது? கோவிச்சுக்கிட்டு போயிட்டாருங்கிறது நெசம். தேடிப் போயிருக்கான், நம்ம முத்து.''

''சங்கரப்பன் குடும்பத்துலே இந்த முத்துப் பயலுக்கு என்ன தொடர்பு? இவன் எதுக்கு தேடியலையணும்?''

''சடங்கான கொமரு இருக்கிற வீட்லே எளவட்டப் பய முத்துக்கு என்ன தொடர்புன்னு புளியைப் போட்டு வெளக்கணுமாக்கும்? கைப்புண்ணுக்கு கண்ணாடி வேணுமாக்கும்?''

சூறாவளி வசப்பட்ட கர்கிதமாய் திசையற்று மிதந்து சுழன்று கொண்டேயிருந்தது, பேச்சு. ஒன்றைத் தொட்டு ஒன்றாக விளைந்து கொண்டே போயிற்று.

ஓடிப் போன. சங்கரப்பனை ஆளுக்குக் கொஞ்ச மாய் பிய்த்து வாயில் போட்டு மெல்லத் தொடங்கி விட்டனர். ஊரான் கழுத்துப் புண்தானே! கிளறிய வரைக்கும் சுகம்தானே!

''சங்கரப்பன் சல்லிக்காசுக்கு பெற மாட்டான். சுத்தக்கூறு கெட்ட பய...''

''இவனுக்குக் கெடைச்ச வாய்ப்புக்கு எம்புட்டோ கௌரவமாயிருந்துருக்கலாம்.... எல்லாத்தையும் சீரழிச் சுட்டானே....''

''குடும்பத்தையும் சீரழிச்சு நாசமாக்கிட்டு, அவனும் சீரழிஞ்சுட்டானே...''

''அவனோட மூத்த மக பூசுன கரியை தொடைக் கறதுக்குள்ளே... இவன் குடும்ப மூஞ்சியையே உடைச் சுட்டானே....''

''தொட்டதை விட்டவனும் கெட்டான். தொடா ததைப் போய்த் தொட்டவனும் கெட்டான்ங்கிற சொல வடை, சங்கரப்பன் விஷயத்துலே சரியாய் இருக்கு..''

''வவுத்துப் புள்ளையை நம்பி வளந்த புள்ளை கழுத்தைத் திருகுறவன் கதையெல்லாம் இப்படித்தான் முடியும்....''

''அடேயப்பா... ஒருத்தனையும் வாயெடுக்க விட மாட்டான். சவடால் பேச்சு பேசியே ஆள்களை அரட்டிப் போடுவான். இன்னிக்கு எல்லாம் பொசுக்குன்னு போச்சு....''

''கையிலே நாலு சில்லறை நடமாடுறப்போ கண்ணு மூக்கு தெரியாம குதிக்கக் கூடாதப்பா. குதிக்கிறவ னெல்லாம் இப்படித்தான் குழியிலே வுழணும்.''

''அப்பவும். ஒரு முழுத்த ஆம்பிளை இப்படியா செய்வான்? ஓடிப் போகறதா? ச்சே, ரொம்பக் கோழையா இருந்துருக்கான்...''

''நீ வேற... பொம்பளை எந்நேரமும் கொத்திப் புடுங்குனா ஆம்பிளை என்ன செய்ய முடியும்? நாற வாய்க்குள்ளே குடியிருந்தாலும், நச்சரிப்புக்குள்ளே குடியிருக்க முடியாதப்பா.... பூமாலையும் முள் முள்ளா குத்திப் பேசுவா...''

''பூமாலையும் பொறுமையான மனுஷிதான். 'பூமி மாதாவே கேள்'னு பொறுத்து வாயை மூடித்தான் கிடந்தாள். தரை தாங்காத அளவுக்கு இவன் போட்ட ஆட்டத்துலே அவளோட பெருமையெல்லாம் கண் காணாமப் போயிடுச்சு....''

டீக்கடையில் மட்டுமல்ல.... குழாயடியில், மடத்துத் திண்ணையில், கூலி வேலைகள் நடக்கும் புஞ்சைகளில் எங்கெங்கு மனிதர்கள் கூடுகிறார்களே அங்கெல்லாம் சங்கரப்பன் கதைதான்.

கவலையோடு சிலர்தான் பெருமூச்சு விட்டனர். மற்றவரெல்லாம் கேலியாக, கிண்டலாக வக்கிரமான கற்பனையாக, வர்ணமேற்றிய அவதூறாக .. பேசிப் பேசியே தூசி கிளப்பினர். ஊரெல்லாம் சூறாவளிச் சுழற்சி. சுழன்றடிக்கின்ற காற்றில் மாறி மாறி எழுகிற தூசிப்படலங்கள்.

வெளியே தலைகாட்ட முடியாமல் வீட்டுக்குள் அடைக்கப்பட்டுக் கிடந்தாள், பூமாலை, சுவரில் சாய்ந்து சரிந்து உட்கார்ந்திருந்தாள். பாதி குலைந்த நிலையில் இடது தோளில் சரிந்து கிடந்த கூந்தலில் ஆங்காங்கே நரைகள். மாலை மாலையாய் வழிகிற கண்ணீர். சலனமற்று உறைந்து போன விழிகள். அதில் ததும்பி நின்ற சோகம்.

உடைந்து அழுதாள். உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டு குழுங்கிக் கொண்டுருந்தாள்.

''இப்படியும் செய்வாரா, இந்த மனுஷர்? என்னைக் கேவலப்படுத்திட்டாரே ... உப்புக் கல்லுக்குப் பெறாத ஒரு சிறுக்கி கூட இனி என்னை ஏளனமாய்ப் பேசுவாளே,

இளக்காரம் செய்வாளே... நா எப்படித்தான் இந்த ஊர்லே இருக்கப்போறேனோர்... ஆக்கங்கெட்ட இந்த ஊர்லே ஆளுக்கொரு காரணமாய் இட்டுக் கட்டிப் பேசுவாகளே... காறித் துப்புவர்களே... என்னை இந்தக் கதியிலே நிறுத்திப் பார்க்க, இந்த மனுஷருக்கு எப்படித்தான் புத்தி போச்சோ...''

விடிந்ததிலிருந்து அழுது அழுது அரற்றியதில் தொண்டை கரகரத்தது. குரல் கம்மிப் போயிருந்தது. உலர்ந்து போன நாக்கில் எச்சில் கட்டியாகத் திரண்டிருந்தது. மேல் அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது. அவள் கண்களில் அயற்சி. அலைபாய்கிற மனசு. நினைக்க நினைக்கப் புண்ணைக் கிளறுவதைப் போல உள்ளுக்குள் வலியின் அலைகள்.

''நா ஒரு பாதகத்தி... என்ன இழவுக்குத்தான் எனக்கும் அப்படி புத்தி போச்சோ... பொசுக்'குன்னு வார்த்தை வந்துருச்சு. வாய்க்கு முந்தி வார்த்தை ஒடியாந்துருச்சே நா என்ன செய்ய? ஆசையா ஒடியாந்த புள்ளையை ஓங்கியறைஞ்ச மாதிரி, அப்படியே தெகைச்சுப் போனாரே... சொன்ன சொல்லைக் கேட்டு முகம் சுண்டிப் போனாரு. பர்வம், பார்வை பறவையாட, ஆதரவத்து நின்னாரே... அதுக்காக இம்புட்டுக் காரியம் பண்ணுவாருன்னு... இந்தப் பாவி மனசு நெனைக்கலியே...''

மனசுக்குள் 'கறுங், கறுங்'கென்று அறுக்கிற சோக உணர்ச்சி. குத்திப்பிடுங்கிற குற்ற உணர்ச்சி. ஊசிக் குத்தலில் ஓட்டையாகிப் போனதைப் போல மனசில் ஒரு சூன்யம். சகலமும் பறிபோய் விட்டாற்போன்ற வெறுமை.

அம்மாவை ஒரு பரிவோடு பார்த்தாள் பவளம். 'ஐயோ பாவம்' என்கிற கண்கள். மற்றபடி எந்த

வருத்தமோ, சலனமோ இல்லாமல் அவள் முகம் வறண்டு கிடந்தது. ஓடிப்போன அய்யாவால் வந்து சேர்ந்த கேவலம் பற்றிய நினைவே இல்லாதவளைப் போல மௌன நிழலாய் நடந்தாள்.

மகளின் முகத்தைப் பார்த்த பூமாலைக்குப் பகீரென்றது. 'அடிப்பாவி.... அப்பன் போன வருத்தம் கூட இல்லாம, கல்லுப் புள்ளையாரு மாதிரி இருக்காளே... ஏதுமத்த அப்பனை புள்ளைகூட மதிக்காது போல இருக்கு.... அடியே பவளம், எனக்கு அப்படி இல்லேடி.... சகலமும் அவருதானடி.

'என் பொட்டுக்கும், தாலிக்கும் பொறுப்பு அவருதாண்டி.... நம்ம தாழ்வுக்கும் மேட்டுக்கும் அவருதாண்டி காரணம். அவரு இல்லேன்னா, நீயுமில்லே... நானுமில்லே....'

அடுப்பறைக்குள் நுழைகிற பவளத்தின் முதுகை பூமாலையின் பார்வை துரத்தியது. மனசுக்குள் ஏதேதோ நினைவுகள். கொதிக்கிற பானைக்குள் தளதளக்கிற தண்ணீராய்...நினைவுகள்.

நினைக்க நினைக்க உள்ளுக்குள் பொங்கிப் பீறிடுகிற அழுகை. சத்தமில்லாமல் அழுகை. அழுது அழுது வற்றிப்போய் விட்ட சத்தம்.

ஓய்ந்த மாட்டின் கழுத்தில் புண், வந்து ஒட்டுகிற ஈக்கள், அப்படித்தான் இந்தக் குடும்பம். மாறி மாறி வருகிற நிலநடுக்கம். ஒவ்வொரு அதிர்விலும் ஒவ்வொரு சேதாரமாய்.. சேதாரங்களே வாழ்க்கையின் தொகுப்பாய்...

பெண்ணாக இருந்த பூமாலையைத் தாயாக மாற்றிய கௌரவம் தந்த மூத்த மகள் ராசாத்தி... இவள்

ரத்தத்தைக் குடித்து சதையைத் தின்று வடிவம் பெற்ற மகள்... இந்த வீட்டின் காற்றையும் சோற்றையும் வேர்வையையும் உண்டு வளர்ந்து உலவியவள்...

நாள் நாளாய் நூல் கோர்த்து இவர்கள் வளர்த்து வைத்திருந்த கனவுகளையெல்லாம் அறுத்துக் காயப் படுத்தி விட்டு எவனோ ஒருவனுடன் ஓடிப் போய் விட்டாள்...

ஆறு மாதம் கூட ஆகவில்லை.

அதற்குள் இந்த மனிதர்... இப்படி...

அடடா... இவருதான் எம்புட்டு நல்ல மனிதர்... நல்லது கெட்டதைப் பிரிச்சுப் பார்க்கத் தெரியாது. எல்லாவற்றையும் நம்பி விடுவார். வெகுளியான ஆள். வண்டி வண்டியாய் ஆசைப்படுவார். யோசனை இல் லாத ஆசைகள். வானவில்லை கையில் பிடிக்க ஆசைப் படுவார். நட்சத்திரங்களையெல்லாம் அள்ளி மடியில் கட்டிக்கொள்ள... நிலாவை எடுத்து பூமாலை நெற்றி யில் வைக்க... உலகத்தில் உள்ள 'லட்சுமி'களையெல் லாம் அள்ளிக்கோர்த்து பிள்ளைகள் கழுத்தில் போட்டுப் பார்க்க.,. வண்டி வண்டியாய் ஆசை.

எல்லா ஆசைகளும் பாசத்தோடு பின்னிக் கிடக்கும். பெருமை தழுவிக்கிடக்கும்.

பூமாலை என்றால் உயிர். பிள்ளைகள் என்றால் உயிரின் உயிர். அப்பேர்ப்பட்ட பிரியமான மனுசரை எங்கே பார்க்க முடியும்? இனி எங்கே போய்ப் பார்ப்பது.

ராசாத்தி பிறந்த அன்று தைப்பூசம் கழிந்த நாலாவது நாள். இடுப்புவலி கண்டு விட்டது. தெரு ஜனமெல் லாம் வீட்டில். ஆடி ஓடி ஆளுக்கொரு வேலையாக

பார்க்கின்றனர். வலி தாங்காமல் துடித்தலறுகிற பூமாலையைச் சுற்றி பரபரப்பாக இயங்குகிற பெண்கள்.

உயிரைப் பிடுங்கிற வேதனை. உயிரே போய்விடக் கூடாதா என்று ஏங்க வைக்கிற நரக வேதனை.

பூமியின் காற்றைச் சுவாசிக்கிற புதிய உயிர். புதிய ஜீவன் வீறிடுகிற அழுகை. நரக வேதனையை சுக வேதனையாக்குகிற ஜீவனின் குரல்.

''சங்கரப்பனுக்கு தலைப்புள்ளை கடங்காரப் புள்ளையா பொறந்துருக்கு'' ஒரு கிழவியின் வருத்த மான் அங்கலாய்ப்பு. ''பொம்பளைப் புள்ளை.''

சத்தம் கேட்டு உள்ளே எட்டிப் பார்த்தான் சங்கரப்பன். அவல் முகமெல்லாம் ஆவல்.

அவன் பார்வையெல்லாம் பூமாலை மீது. அடே ய்ப்பா, அந்தக் கண்களில் ததும்பிய பரவசம்... பரி வுணர்ச்சி... கருணை உணர்ச்சி எல்லாம் கலந்து கனிந்த ஒருவகைக் கூட்டுணர்ச்சி.

அவன் பார்வையை மனசால் தழுவிய அவள் முகத் தில் மின்னும் புன்னகை. பெருமிதப் புன்னகை.

''சங்கரப்பா, பூமாலை, ஒனக்குப் பொம்பளைப் புள்ளை'' பெத்துக் குடுத்துருக்கா. இந்தப் புள்ளைக்கு நீ நகை பண்ணிப்போட இப்பவே சம்பாத்தியம் பண்ண ஆரம்பிக்கணுமப்பா.''

''பொம்பளைப் புள்ளைன்னா அம்புட்டு மட்டமா? திங்கிற வாயும் நக்கை மாட்டுற கழுத்தும மட்டுமா, பாடுபடுற கைகால்களோடயும்தானே பொம்பளைப் புள்ளை பொறக்கு?''

''அடியாத்தி... புள்ளைக்கு அப்பன் வக்காலத்து வாங்கி வர்ர வேகத்தைப் பாருங்கடி'' என்று ஒரு நடு வயதுக் கிழவி பொய்யாக வியக்க... அவள் முகத்தை ஆட்டிய ஆட்டத்தில் காது பாம்படங்களும் ஆட.... அந்தச் சின்ன வீட்டுக்குள் முட்டி மோதுகிற பெண்களின் சிரிப்பொலி. ஆனந்தப் பரிகாசமாய் எழுந்த அந்தச் சிரிப்பலையில் வெட்டுண்டு, அசட்டுச் சிரிப்புடன் தலை கவிழ்ந்தான்.

அந்தப் புருஷப் பிள்ளையைப் பார்த்து பூரிப்போடு புன்னகைத்தாள் பூமாலை. துவண்டு கிடந்த அந்தப் பச்சை உடம்பில் அந்தப் புன்னகை அழகாய், உயிர்ப்பின் துடிப்பாய் பிரகாசிக்கிறது.

மோதிக் கொள்கிற இருவரின் பார்வைகள். வார்த்தையில் வசப்படாத அந்தரங்கமான இன்ப உணர்வுகளை, ஆழப்பதிந்து வேர் பின்னிக் கொண்ட தாம்பத்ய அந்யோந்யங்களை பரிமாறிக் கொள்கிற மனசின் பாஷைகள்.

இன்னும் ஒலிக்கிற சிரிப்பலைகள்.

''ஆம்பளைப் புள்ளை பொறதுந்தா.... மூணுதடவை கொலவை போட்டுருப்போம்.... ஊருக்கெல்லாம் ராசா பொறந்த சங்கதி தெரியும். பொம்பளைப் பிள்ளையா யிருக்கே ... என்ன செய்ய?''

அதே கிழவிதான் பொய்யாக வருந்தினாள். நமட்டுச் சிரிப்பில் முகச் சுருக்கங்கள் அதிகமாகியிருந்தன.

''கொலவை போடுறது சந்தோஷத்துக்காகத்தானே? பூமாலை பெம்பளைப் பிள்ளையை பெத்தெடுத்ததே எனக்குச் சந்தோஷந்தான். போடுங்க கொலவை. முட்டாய்ச் செலவு செய்கிறேன்.''

''முட்டாய்க்காக கொலவை போடலாமா வழமையை மீற முடியுமா?''

''பொம்பளைப் புள்ளை பொறந்ததுக்கு பொம்பளைக வருத்தப்படுறது, பொம்பளைகளுக்கே கேவலம்.''

குறுஞ்சிரிப்போடு சொல்லிவிட்டு, நைஸாக வெளி யேறி விட்டான்.

''போடு சக்கை....! புள்ளையோட அப்பன் என்ன போடு போட்டுட்டு போறான், பாருங்கடி'' என்று பலத்த குரலில் போலிக்கண்டனம் செய்ய.... வீடு முழுக்க ஆரவாரச் சிரிப்பொலி. குப்பென்று எழுந்த அந்தச் சிரிப்புச் சத்தம், அடங்குவதற்குக் கொஞ்ச நேரமாயிற்று.

இருபது வருஷம் ஆச்சு. இப்பக்கூட அந்தச்சிரிப்புச் சத்தம் கேக்குற மாதிரியேயிருக்கு.

காணாத புதையலைக் கண்டவனைப் போல அந்தப் பிள்ளையை அப்ப் ப்படிச் சீராட்டினான். ராசாத்தி என்று பெயர் வைத்து, உயிராகக் கிடந்தான்.

செத்துப் போன அம்மாவோட ஜாடையாம். பேச்சு.... கண்ணு.... கொணம் எல்லாம் அதே அச்சாம்! சொல்லிச் சொல்லிப் பூரித்துக் கொள்வான்.

மல்லாக்கப் படுத்துக்கொண்டு பிள்ளையை நெஞ்சில் போட்டுக் கொண்டு எந்நேரமும் கொஞ்சல்தான். பேச்சு தான். சிரிப்புதான். வீடே ஒளி துள்ளும். கலகலக்கும்.

ஒரு குறை வைக்க மாட்டான். கண்ணுக்குள் கண்ணாக வளர்த்தான். கண்கலங்கி விடக்கூடாது. அவள் அழுதுவிட்டால்.... பூமாலைக்கு வசவு நாறிப் போகும்.

அந்த ராசாத்திதான் -

குடும்பத்தின் மூக்கையறுத்து மூளியாக்கி, இழிவு படுத்திவிட்டு இழிவான முறையில் எவனுடனோ ஓடிப் போய் விட்டாள். சிறுக்கி!

பூவைப் போல பொத்திப் பொத்தி வளர்த்தவர்கள் நெஞ்சிலே தீயை அள்ளிக் கொட்டி விட்டுப் போயிட் டாளே ... பாவி!

பாவி, சிறுக்கி என்று அவளைத் திட்டி என்ன செய்ய? யோசித்துப் பார்த்தால்.... ராசாத்தியைக் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது.

அவளும்தான் சடங்காகி வீட்டில் இருந்தாள். சபலம் இல்லாமல் சலனம் இல்லாமல் ஒரு வம்பு தும்பில்லாமல் பசு போல இருந்தாள். ஒரு வருஷம், ரெண்டு வருஷமா, ஏழு வருஷம் இருந்தாள். மாலை பூக்காதா; நேரம் கூடி வராதா என்று பூமி மாதாவாய்ப் பொறுமையாய் இருந்தாள்.

குனிந்த தலை நிமிர மாட்டாள். தெருவில் வருகிற நாயைக் கூட ஏறிட்டுப்பார்க்க மாட்டாள். உணர்ச்சியும் கனவுகளும் உள்ள ஒரு மனுஷிதானே என்கிற சந்தேகம் வரும். நடமாடுகிற கற்சிலை, உயிர்ச்சிலை.

நடமாட்டம் என்றால் ... சாதாரணமா? உழைப்பில் ஆண்பிள்ளை தோற்றுப்போவான். அப்படிப் பாடு படுவாள். எருமைக்குப் புல் பார்ப்பதென்ன. ஆடுகுட்டி களை கவனித்துக் கொள்வதென்ன, கூலி வேலைக்குப் போகிற அக்கரையென்ன, வீட்டுவேலைகளை ஓடிஓடிப் பாரப்பதென்ன, தங்கச்சி பவளத்துடன் சண்டை போட்டு கூச்சல் போடுவதென்ன... சகலத்திலும் ராசாத்தி

கெட்டிக்காரி. இரவும், பகலும் எந்தநேரமும் பாடுபடு வாள். அவள் கை சும்மாவேயிருக்காது. எதையாவது நோண்டிக் கொண்டிருப்பாள்.

வயசுக் கோளாறில் வருகிற இளமைக் கனவு களெல்லாம் வியர்வையில் செலவழிப்பதைப் போல அத்தனை தீவிரமாய்ப் பாடுபடுவாள்.

தன்னைத்தானே வருத்தி, திசை திருப்பி விட் டவளைப்போல உழைப்பாள்.

சங்கரப்பன் சாராயத்தை அளவில்லாமல் குடித்து புழுதியில் புரண்டு ஆளாகத்தள்ளாடி வருவான். பூமாலை தலையில் அடித்துக் கொண்டு அழுவாள்.

''அடக் குருட்டுப்பய தெய்வமே.... ஏங் குடும்பத்தை இப்படிச் சீரழிச்சு நீயும் கூத்துப் பாக்கணுமா?'' என்று உடைந்து போய் நெஞ்சமெல்லாம் கொதிக்கக் கதறு வாள்.

விடியற்காலம் தலைவலியோடு அவன் எழுந்தால், பூமாலையும் கோழிக் குஞ்சாகக் கொத்துவாள்.

''ஆம்பளை இப்படிப் பொறுப்பத்து அலைஞ்சா... வீடு வெளங்குமா? குட்டிச்சுவராத்தானே ஆகும்? புள்ளை சடங்காகி எத்தனை வருஷமாகுது? அவளை ஒருத்தன் கையிலே புடிச்சிக் குடுக்கணும்னு... மனசுலே ஒறைக் குதா? சொரணையத்துத் திரிஞ்சா எப்படி?...''

அவன் சள்ளையோடு எரிந்து விழுவான்.

''விடிஞ்சவுடனே... ஒங் கூப்பாடுதானா? மனுசனை நிம்மதியா இருக்கவிட மாட்டியா? சனியன்!''

''நிம்மதியா? நமக்கா? ரத்தத்துலே பொறந்த பொறப்புக இருக்கு. அதுக கடமைகளை செய்ஞ்சு முடிச்சாத்தானே நிம்மதி வரும்.''

''இங்க பாரு.... ராசாத்திக்கேத்த ராசா இனிமே பொறந்து வரப்போறதுல்லே. பாரு அவனா வந்து சேருவான் பாரு.''

''அப்ப .. அப்பனா நீ எதுக்கு இருக்கணும்? கடனுக்கா?''

''இந்தா! வார்த்தையை அளந்து பேசு. ஆமா.''

''இல்லேன்னா.. ?''

''செருப்பு பிய்ஞ்சு போகும்.''

''நம்ம பொழப்பே பிய்ஞ்சு தானே கெடக்கு?''

நித்தம் இந்தக் கூத்துத்தான். வீட்டில் இடியும் முழக்கமுமாய் மின்னல் வெட்டுமாய் .. மழையின் மையக் குறியாய் ராசாத்தி....

இதைப்பார்த்தாலே ராசாத்திக்குக் குமட்டிகொண்டு வரும். காறித் துப்புகிற உணர்வோடு எருமைமாட்டுப் பக்கம் போய் விடுவாள்.

வருஷம் பூராவும் நடக்கிற இந்தக் கூத்துகளுக்கு இடையில் ... நல்ல காரியம் ஏதாவது தானாக் கைகூடி வந்துவிடாதா என்று ஏங்கினாள்; நம்பினாள். நம்பிக்கை பொய்க்கவில்லை.

ஒரு இடத்திலிருந்து பெண் கேட்டு வந்தார்கள். தீப்பெட்டியாபீஸில் ஃபோர்மேனாக இருக்கிற மாப் பிள்ளை. சொந்த வீடு உண்டு. அவர்களும் ரொம்பக்

கேட்டுவிட வில்லை. ஆறு பவுன் நகையும், மூவாயிரம் ரொக்கமும்தான்.

இந்த இடம் முடிந்து விடாதா என்று ஏங்கினாள். இந்தச் சண்டையும் சச்சரவுமான, நித்தக் கூத்து நடக்கிற வீட்டை விட்டுப் போய்த் தொலைந்துவிடலாமே என்று நினைத்தாள்.

நினைப்பில் மண்ணையள்ளிப் போட்டுவிட்டான், சங்கரப்பன். 'அது இது' என்று 'அழிச்சாட்டியம்' பேசியே.... அந்தச் 'சம்பந்தத்தை' விரட்டி விட்டான்.

நகை போட முடியாத நிலைமை. பணம் புரட்ட முடியாத கஷ்டம். இயலாமையை வெளிக்காட்டாமல், ஜம்பம் பேசியே அவர்களைத் துரத்திய பின்தான், ராசாத்தி விழித்துக் கொண்டாள்.

'அய்யா திருந்தப் பேரறதுமில்லே ... ஒரு வழி செய்யப் போறதுமில்லே.... என்கிற தெளிவான விரக்திக்கு வந்து விட்டாள். விரக்தி வசப்பட்ட மனசின் நினைவுகள், ஒழுங்கான திசையில்தான் செல்லாதே... குடும்பத்தின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டாள்.

எதையோ நினைத்துக் கொண்டவளைப் போல... பூமாலை வெறியோடு மார்பில் மாறி மாறி அறைந்து கொண்டாள். என்னவோ கீச்சுக்குரலில் முணங்கினாள்.

கேவலப்படுத்தி விட்டு... ஓடிப் போன மகளை நினைத்து அழுதாளா.... நேற்று ஓடிப் போன புருஷனை நினைத்தாளா? இரண்டையும் சேர்த்தே நினைத்து மனசு வெடித்தாளா?

ஓடிப்போனவர்களைத் தூற்றுவதுடன் ஊர் நிறுத்துவதில்லை. மொத்தக் குடும்பத்தையும் காறித்துப்புகிறதே...

''மானங்கெட்ட குடும்பம்.... இப்படி ஓடுகாலிப் புள்ளையை பெத்தவ வவுத்துலே சூடு போடணும். ஊரையே அசிங்கமாக்கிட்டாளே ...''

''தரயைப் போலப் புள்ளை.... நூலைப்போல சேலைன்னு பெரியாளுக சும்மாவா சொன்னாக? புள்ளை இப்படி ஓடுகாலிப் புள்ளை இப்படி மானங்கெட்டு ஓடுதுன்னா... அப்பன் ஆத்தர கொணமும் அப்படித்தானே இருக்கும்? இவுக ஒழுக்கமா பொறுப்பாயிருந்திருந்தா, இந்தப் பொட்டச்சிறுக்கி இப்படிக் காரியம் செய்யத் துணிஞ்சிருக்காதே....''

நாக்கில் ஊசிகளை வைத்துக்கொண்டு, நொந்து கிடந்த மனசுகளைக் குத்திக் கிழித்தார்களே, பாவிகள்!

'மகளை இழத்து விட்டோமே' என்ற அதிர்ச்சியில் புலம்பக் கூட உணர்வில்லாமல் திகைப்படைந்து கிடந்த அந்தக் குடும்பத்தின் தலையில் விழுந்த செருப்படிகள் கொஞ்சமா? அள்ளிக் கொட்டிய அக்கினி வார்த்தைகள் கணக்குகள் அடங்குமா? ஆ....ஹ்! நார் நாராகக்கிழித்து நாறடித்து விட்டார்களே....

இன்னைக்கும் இந்த ஊரு இப்படித்தானே பேசும்? எது நிஜம் என்று அறியாமலேயே யூகத்துக்கு வர்ணம் பூசிப்பூசி பேசி மகிழத்தானே செய்யும்? காயப்பட்ட மனசைக் கீறி உப்பையள்ளிப் போடுகிற குரூரம்தானே ஊருக்குத் தெரியும்?

எல்லாம் இந்த மனிதரால் தானே! இவர் புத்தி கெட்டுப் போய் இப்படிக் காரியம் செய்ததால் தானே! பொண்டாட்டி கோவித்துக் கொண்டு போகும். சகஜம். வீட்டுக்குத் தலையாக இருக்கிற ஆம்பளை இப்படிச் செய்யலாமா?

இதைவிட என்னைத் தூக்கிப் போட்டு நாலு மிதி மிதித்திருக்கலாமே! அரிவாளையெடுத்து ஒரே போடு போட்டிருக்கலாமே! இயலாத மனிதரைப் போல எதுக்காக ஓடனும்? என்னை 'அரக்கி' என்று ஊர் பேசட்டும் என்றுதானே! 'என்ன கொடுமை செய்தாளோ, பாதகத்தி' என்று வசைபாடட்டும் என்று தானே?

அட மனுசா, இப்ப ஒமக்குத் திருப்திதானே! மனசு ஆறிப்போச்சா? என்னை அசிங்கப்படுத்திப் பார்ப்பதில் ஒமக்கு அப்படி ஒரு மகிழ்ச்சியா?

நீர் செய்த தப்பு ஒமக்குத் தெரியலியா? இந்தக் குடும்பம் செழித்துச் சிரித்து இருந்ததும் உம்மால்தான். சீரழிந்து நாசமாய்ப் போனதும் உம்மால்தானே!

இதை உணர முடியலியா? இதை யோசிக்கிற அளவுக்குப் புத்தியில்லியா?

நீரே யோசித்துப் பாரும்.... எல்லாம் உமக்கே தெரியும்.... உள்ளங்கையிலே இருக்கிற புண்ணு மாதிரி.

யோசித்துப் பார்த்தால்... இந்த மனிதருக்கு எந்தக் காலத்தில்தான் நல்ல புத்தி இருந்தது? நாளும் பொழுதும் விரட்டி விரட்டி அவர் வயது அதிகமாயிற்று. காலமும் வாழ்க்கையும் ஓடிய வேகத்தில் அவரை இழுத்துக்கொண்டு போயிற்று.

அவராக யோசித்து முடிவு செய்து ஆரம்பித்த காரியமெல்லாம் வாழ்க்கையின் சறுக்கல்களாகவே ஆகி.... குடும்பத்தின் திசையை அலைக்கழிக்கத்தானே செய்தது ...

பூமாலையை கல்யாணம் பண்ணிய காலத்தில் சங்கரப்பனுக்குக் குடிப்பழக்கம் இல்லை. எந்தக்கெட்ட

சகவாசமுமில்லை. வஞ்சகமில்லாத, கபடில்லாத உழைப்பாளியாக இருந்தான்.

பூர்வீகப் புஞ்சை ஒன்றரைக் குறுக்கம். கமலை இறவையுள்ள கிணறு. வானம் பார்த்த கரிசல் பூமி. நிலையின்றி அலைகிற மேகத்தை நம்பிய பிழைப்பு.

வானம் பண்ணுகிற வஞ்சனையும், கூத்தும் கொஞ்சமில்லை. நாலு வருஷத்திற்கு பெய்தும் பெய்யாமலும் காயப் போட்டு வெள்ளாமை பொசுங்கும். அப்புறம் ரெண்டு வருஷத்திற்கு சவலைப் பிள்ளை 'கழிஞ்சு வைக்கிற' மர்திரி மழை மேலே மழையாகப் பெய்து நாசக்காடாக்கி கெடுத்துச் சீரழிக்கும்.

தப்பித் தவறி, குருட்டாம் போக்கில் பருவம் நல்லபடியாக அமைந்து ஓரிரு வருஷம் நல்ல விளைச்சல் கண்டு விட்டால் ... புற்றிருந்து புறப்பட்டு வருகிற அரசாங்களாக வியாபாரிகள் ஊருக்குள் புகுந்து அடிமாட்டு விலைக்கு அள்ளிக்கொண்டு போய் விடுகிறார்கள்.

சம்சாரி தப்பிக்கவே முடியாது. தேய்ஞ்சு போன சாட்டைக் குச்சிக்கும் கதியற்றுப் போய்த்தான் நிற்க வேண்டும்.

இப்படித்தான் சாகவும் விடாமல் வாழவும் விடாமல் சஞ்சலப்படுத்துகிற பூமியோடு மல்லுக்கட்டுவதற்கு அஞ்சாதவனாக இருந்தான் சங்கரப்பன். வீடு நிறைய பற்றாக்குறையே குடியிருந்தாலும் மனம் தளராமல் உழைத்து குடும்பத்தோணியை நகர்த்துகிற அசுர உழைப்பாளியாக இருந்தான்.

ராசாத்தி பிறந்த வருஷம். அப்போதுதான் இங்கு சிமிண்டாலை வந்தது. ஆலை வளர்ச்சிக்கும் கற்குவாரி

அமைப்பதற்கும் ஏகப்பட்ட நிலங்களை ஆர்ஜீதம் செய்த போது, இவனது ஒன்றரைக் குறுக்கமும் கபளீகரம் ஆயிற்று.

நிலத்தைத் தரமாட்டேன் என்று காட்டுத்தனமாய் சண்டை போட்டுப் பார்த்தான். புல்டோசர் போன்ற ஆலை நிர்வாகம் இவனது கூச்சலையெல்லாம் இடித்து நொறுக்கி ஒதுக்கிவிட்டுத் தன்போக்கில் நகர்ந்தது.

நரி கூட நடமாடாத கரிசல் காட்டில் மஞ்சணத்தி மரமும், கருவேலி மரமும் தவிர வேறு எதுவும் இல்லாத அந்தக் காட்டில், ஒரு மாய வித்தை போல ஒரு நகரம் உண்டாகி விட்டது. மேகமெல்லாம் வெட்கப்பட்டு முகம் வெளுக்கிற மாதிரி ... ஆலைக்குழாய் தினந்தோறும் மேகப் படையையே அனுப்பியது. சங்கிலித் தொடராய் புகைத் திரட்சியின் நீட்சி.

புகையோடு சேர்ந்து வருகிற சிமெண்டுத் தூசி அந்த வட்டாரத்துப் புஞ்சைகளையே நாசம் பண்ணியது. நிறம் மாற்றியது. பாவம், சங்கரப்பன் மோதித் தோற்றுப் போய் அரிவாள் இழந்த அறுப்புக் காரனாக குன்றிப் போய்க் கிடந்தவனை ... சிமெண்டுத் தூசி மூடிப் புதைத்தது.

அங்கே பல தொழிற்சங்கங்கள். அதில் ஒரு தொழிற் சங்கம் 'விவசாயி - தொழிலாளி ஒற்றுமை ஓங்குக' என்று கோஷமிட்டது. ஆலையிடம் நிலமிழந்த சகல விவசாயி களுக்கும் ஆலையில் வேலை தரப்பட வேண்டும் என்று விடாப்பிடியாக வற்புறுத்திச் சண்டை போட்டது.

அந்தச் சண்டை சங்கரப்பன் வாழ்வில் ஒரு விடி யலைக் கொண்டு வந்தது.

எழுத்து வாடையறியாத சங்கரப்பனுக்கு கற்குவாரியில் கல்லுடைக்குற வேலை கிடைத்தது. காக்கி யூனிஃபார்ம் கிடைத்தது. கனத்த பூட்ஸ் கிடைத்தது. நல்லெண்ணெய் கிடைத்தது. சோப்பு கிடைத்தது. இவன் அசந்து போகிற அளவிற்கு சலுகைகளும் சம்பளமும்.

பொழுது பூராவும் வெயிலில் பாடுபட்டு நார் நாராய் கிழிந்து போய் வந்தால்.... ஏழு ரூபாய் கூலி கிடைக்கிற விவசாயத்திலேயே பழகிப் போயிருந்த சங்கரப்பனுக்கு.... இந்தச்சம்பளமும் வேலையும் லாட்டரிச்சீட்டு அதிருஷ்டம் போலத் தோன்றியது. ஆகாசக் கோட்டையைப் பிடித்து விட்ட மாதிரி தரையில் கால் பதிக்க விடாத பெருமிதம்.

வீடே நிறம் மாறி ஒளி துலங்கியது. சுவர்களில் சுண்ணாம்போடு கொஞ்சம் பெயிண்டும் வர்ணம் காட்டியது. சோளக்கஞ்சி, கம்மங்கஞ்சி என்பதெல்லாம் பழங்கதையாகி, எந்நேரமும அரிசிப் பருக்கைகள். பூமாலைக்கு மாசா மாசம் புதுச்சேலைதான். ராசாத்திக்கு வாங்கிக் கொடுத்த கவுன்களுக்கு கணக்கு வழக்கே கிடையாது.

இந்தக் குட்டி வசந்தத்தை ஜீரணிக்க முடியாமல் சங்கரப்பன் தத்தளித்தான். கையில் பிடிபடாத காற்றாக அலைந்தான்.

சொல்லிச் சொல்லி மாய்ந்து போவான். ''இதெல்லாம் ராசாத்தி பிறந்த பிறகுதான். எல்லாம் அவளோட யோகம். இன்னும் என்னென்னவோ யோகம் அடிக்கப் போகுதோ'' என்பான்.

வீடு பூராவும் குதூகுலம். ஒளிமயமான உல்லாசம்.

பூமாலை நிஜமாகவே புதுப் பெண்ணைப்போல மஞ்சள் கிழங்கு போல ஆகிவிட்டாள். காட்டு வேலைக் குப்போகாமல் வெயில் முகம் படாமல் - வீட்டிலேயே நிழல் வாட்டத்திலேயேயிருந்ததால் உடம்பில் ஒரு இளமை மினுமினுப்பு. புதிய நிறத்திற்குரிய கனிவு.

மஞ்சள் பூசிய முகமும், குளித்து முழுகிய ஈரக்கனி வும், பூவாசத்தோடு பூமாலையைப் பார்த்து சிறுபிள்ளை யைப்போல கிளுகிளுப்பான்.

''என்ன பூமாலை ஒனக்கு மட்டும் நாளும் மாசமும் பின்னாலேயே போகுதா?''

''ஏன் எதுக்கு கேக்கீக?''

''ஒரு நாளைக்கு ஒருநாள்.... எளமையாகிக்கிட்டே போறீயே, அதுதான் கேக்கேன்''

வெட்கப்பட்டுப் போய் கன்னத்தில் குழிவிழ உதடு களை சுழித்து குறுநகை செய்தாள். ''போ .. ங்க, உங்களுக்கு கொழுப்பு ரொம்பத்தான்''

''இல்லே பூமாலை, நெசமாகவே சொல்றேன், நம்ம கல்யாணத்தப்ப இருந்ததைவிட, இப்ப எம்புட்டு அழகாயிருக்கே தெரியுமா? இந்த வருஷம் சடங்கான கொமரி கணக்கா ..!''

உள் மனசுக்குள் பனிச்சிரிப்பு, மொட்டு வெடித்த மல்லிகைப் பூக்களாய் உதிரும். அதன் சுகந்த மணம்.... அவள் கண்களில் இடம் மாறி மின்னல் வெட்டிச் சிரிக்கும்.

குவாரியில் வேலை கிடைத்த ஒன்றிரண்டு பேரைத் தவிர.... மற்றபடி கிராமம் முழுவதும் பழைய கதியில்தான். ஏழு ரூபாய் கூலிக்கும் வேலை கிடைக்காமல் அலைகிற

கூலிக்காரர்கள், நிலம் இருந்தாலும், கடனும் உடனுமாய்ப் பொதியேற்றிய கழுதையாக அசையும் சம்சாரிகள். படித்துப் பட்டம் பெற்ற ஒன்றிரண்டு பேர்களும் வீசிய வெறும் கையும் வீதி நடையுமாய் அலைகிற கோலம்.

வறட்சியைத் தவிர வேறு எதையும் பார்த்தறியாத கிராமத்து மக்கள் கையில் துட்டு இல்லாமல் கைமாற்றுக்கும் கால் மாற்றுக்கும் அலைந்து கொண்டிருக்கும் போது இவன் கையில் மட்டும் வாடாத சில்லறைப் புழக்கம்.

சங்கரப்பன் நடையே மாறி விட்டது. ஆள் ஒரு சாண் கூடுதலாகி விட்டதைப் போல ஒரு நிமிர்வு.

வசந்த காலத்தைப் பின் தொடர்கிற கோடைகாலம் என்பது வாழ்க்கையிலுமா?

அந்த நேரம்தான், அறுபது லட்சம், எழுபத்தேழு லட்சம் என்று பம்பர் குலுக்கல் பிரபலமாய் பேச வைத்தது நமது பத்திரிக்கைகள்.

விஞ்ஞானிக்கு, விருதுகள் பெறும் எழுத்தாளருக்கு, வரதட்சணையை எதிர்த்துப் போராடிய வீராங்கனைக்கு, பத்து வருஷம் முதலமைச்சராய் இருந்தும் ஒற்றைப் பைசாகூட சம்பாதிக்காத ஒழுக்கமான அரசியல்வாதிக்கு, விளம்பரமில்லாமல் மக்களுக்காக அன்றாடம் போராடித் தியாகம் செய்கிற அரசியல் போராளிகளுக்கெல்லாம் இடமே தராமல் இருட்டடிப்பு செய்து விட்டு,

'கள்ள'த்தோணி ஓட்டும் கடத்தல் 'மன்னர்'கள் - பஸ்நிலைய விபச்சார 'அழகி'கள்,- கல்லூரி மாணவிகளை கேலி செய்து கலாட்டா செய்த குறும்பு வாலிபர்கள். லாட்டரிசீட்டில் - யோகமடித்தவர்கள் - கற்பழிப்புக்குள்ளான பெண்கள்-

- இவற்றையே முதல் பக்கச் செய்திகளாக்கி, 'சமுதாயமே இப்படித்தான்' என்ற உணர்வுக்கு வாசகனை வாசிக்கப் பழக்கி விடுகிற வாசக விரோதப்பணியில் நமது பிரபல்ய பத்திரிக்கைகளை ஜெயிப்பது கஷ்டம்.

எழுபத்தேழு லட்சம் பரிசு சீட்டு யோகம் அடித்து பக்கத்து ஊரைச் சேர்ந்தவர். அவர் எஸ்டேட்டில் ஃபோர்மேனாக இருப்பவர். அவரது குடும்ப ஃபோட்டோ, வாழ்க்கை சரித்திரம், லட்சியம் எல்லாம் பக்கம் பக்கமாய்.... போட்டிகளும் கட்டுரைகளுமாய்....

பத்திரிகை செய்த தடபுடல், வாசிக்கத் தெரியாத கிராமத்து அப்புராணிகளையும் பேச வைக்கிறது. பிரமிக்க வைக்கிறது.

தனக்கும் இப்படியோர் யோகம் அடித்தால்... பத்திரிகையில் படம் வரும். செய்தி வரும். நாடு முழுவதும் பேசப்படுகிற மையப்பொருளாவோம்... என்கிற சபலம் தட்டும்.

சும்மாவே 'ராசாத்தி யோகம்' என்ற மயக்கத்தில் மிதந்து கொண்டிருகிற சங்கரப்பன் இந்தச் சபலத்தீயில் விட்டில் பூச்சியாய் விழுந்தான்.

விளையாட்டாய் வாங்கினான். அப்புறம் கட்டுக் கட்டாய்... எப்போதேனும் பரிசு விழ... மற்ற சீட்டுக்களையெல்லாம் கிழித்து எறிய, உள் மனசுக்குள் சப்பென்று அறைகிற ஏமாற்றத்தின் ரகசியவலிகள்....

அந்த அவமானத்தை யாரிடம் பகிர்ந்து கொள்வது? மூச்சு முட்டுகிற நினைவுக் குழப்பம், அவ்வப்போது ஜாலிக்காக தண்ணியடிக்க ஆரம்பித்தான்.

சாராயக்கடையை திறப்பதும் மூடுவதுமாய் கண்ணா மூச்சி காட்டி மாய்மாலம் செய்கிற சர்க்கார், குடிக்க லாம் என்கிறதா, குடிக்காதே என்கிறதா? ஒரு இழவும் புரியமாட்டேன் என்கிறது.

மூடிக்கிடந்தாலும் எங்கேயும் தாராளமாய்க் கிடக்கிற சாராய யதார்த்தம். ஏலத் தொகை வசூலிக்கிற அதிகாரிகளுக்குப் பதிலாக மாமூல் தொகை வாங்குகிற 'காக்கி' சர்க்கார்.

குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ள கிராமங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால், சாராயத் தட்டுப்பாடுள்ள கிராமம் ஒன்றுகூட இல்லை என்று எந்தக் கோவிலிலும் சத்தியம் பணணிச் சொல்லி விடலாம்.

இதெல்லாம் என்ன? குடிக்கச் சொல்லித்தான் சர்க்கார் கள்ளத்தனமாய் அறைகூவல் விடுகிறதோ! குடியரசு சொல்வதை குடிமகன் மீறலாமா? அறை கூவலை ஏற்றுக்கொண்டான்.

ஏறுவது யுககால வேலை. சறுக்குவது நிமிஷ நேர வேகம். கை நிறைய காசுப் பழக்கம் உள்ளவன் குடிப் பழக்கத்துக்கு ஆளானால்.... நேரம் ஏது? பொழுது ஏது?

எல்லா நேரமும் போதைப் பொழுதுதான்....

தலைகீழ் மாற்றம்.

சைக்கிள் ஓரிடத்திலும், இவன் ஒரு புழுதியில் புரண்டு கிடப்பது என்பதுவும் வழக்கமாகி விட்டது.

அவனைத் தூக்கிக் கொண்டு வந்து வீடு சேர்க்க வேண்டும். அதற்காக அவன் வெட்கப்படவும் இல்லை. ரோஷாக்கினியெல்லாம் போதையின் ஆழத்தில் தேனில்

சிக்கிய ஈயாக நனைந்து போக.... எந்த அவமானத்தை யும் அசட்டுச் சிரிப்பால் துடைத்துக் கொண்டான்.

''ஏண்டா இப்படி புத்திக் கெட்டுப் போறே?'' யாராவது பெரியவர் மனம் சகியாமல் கண்டித்து விட்டால் போதும், கல்லெறியப்பட்ட நாயாக வீறிடத் துவங்கி விடுவான்.

''எந்தப் பயலும் எனக்குப் புத்தி சொல்ல வேண்டி தில்லே. எவனுக்கு அந்தத் தகுதி இருக்கு? நா எதுல குறைஞ்சுட்டேன்? குடிச்சதுனாலே எதுலே குறைஞ்சுட்டேன்? எனக்கு சமதையா இந்த ஊர்ல எவன்கிட்ட துட்டு இருக்கு?''

தெருவில் நின்றுகொண்டு குரைத்துக் கொண்டிப் பான். கூச்சப்படமாட்டான்.

'அற்பனுக்கு வாழ்க்கை வந்தா, அர்த்த ராத்திரியிலே குடை பிடிப்பானாம்.... அப்படியிருக்கு இந்தப்பயலோட ஆட்டம்' என்று ஒரு சிலர் வாய்க்குள் வார்த்தையாக முணங்கிவிட்டு முகச் சுளிப்போடு நகர்ந்து விடுவார்கள்.

பூமாலை புழுங்கினாள். மருகினாள். வீட்டுக்குத் தலையாக இருக்க வேண்டிய மனிதரே, இப்படி பாத மாகிப் புழுதியில் புரண்டால் என்ன செய்வது? எவ்வளவு இழிவாக இருக்கிறது.

மனுசருக்கு சுரணை என்பதே இல்லாமல் போய் விட்டதே

பூமாலை கண்டித்தாள். சண்டை போட்டாள். திட்டிப் பார்த்தாள். ஊஹூம், எதற்கும் அவன் மசிவ தாக இல்லை. ஓடும் வெள்ளத்தில் மிதக்கும் பலகை யாக தன்போக்கில் போய்க் கொண்டிருந்தான்.

தாறுமாறாக தண்ணியடிப்பது... கண்டவனுடன் சண்டை போடுவது.... மறுநாள் அவனுடன் கொஞ்சிக் குலவுவது.

நேரம் கெட்ட நேரப் போதையினால், ஷிப்டுக்கு வேலைக்குப் போகாமல் சம்பள இழப்புகள். சிறுத்துப் போகிற சம்பளக் கவரை அரித்து தின்கிற லாட்டரிச் சீட்டு.

வீட்டில் மீண்டும் பழைய வறுமையின் முகம். சோளக்கஞ்சி நடமாட்டம். கூலி வேலைக்கு பூமாலை யோடு ராசாத்தியும் செல்ல வேண்டிய அவலம். படிப்பை பாதியோடு நிறுத்திவிட்டு அடுப்பாங்கரையை கட்டியர்ள வேண்டிய அவசியத்தில் பவளம்....

எங்கு பார்த்தாலும் வட்டிக்கடன்கள், பற்றாக்குறை, நச்சரிப்புகள்.

ஒருநாள் சாராயம் கடனுக்குத் தர மறுத்து விரட்டப் பட்டான் சங்கரப்பன். அந்த வெறியில் இவனே சாராயம் 'காய்ச்சினான்' விற்றுப் பார்த்தால்.... நல்ல ஆதாயம்.

ருசி தட்டியது. பாதை புரிந்தது.

சாராயம் காய்ச்சுவதை தொழிலாக்கினான். ஆள் போட்டு காய்ச்சினான். மூன்று ஊர்களில் ஆள்போட்டு விற்றான். மாமூல் தொகையை கட்டி விட்டான்.

போலீஸ்காரர்கள் இவனைப் பார்த்து சலாம் போட.... தன் கையில் பெரிய அதிகாரமே வந்து விட்டதாக பிரமை. பரிவாரங்கள் சுற்றிலும். பெருமை பிடிபடவில்லை.

நிஜமாகவே நல்ல ஆதாயம். திமுதிமுவென்று வரு மானம். போலீஸ் ஆஃபீஸர்களின் பரிச்சயம். அறிமுகம்.

'குடிகாரப்பய' என்று ஏளனம் செய்தவர்களையெல்லாம் தோற்கடித்து விட்டதாய்.... மனசில் ஒரு மதர்ப்பு.... மனத்திமிறல்.

முறுக்கேறிக் கிடந்த மனசு மூளையின் கழுத்தை நெறித்து விட்டதோ! அறிவை ஜீரணித்து விட்டதோ!

இல்லையானால் சங்கரப்பன் அந்தக் காரியம் செய்வானா? வயிற்றுப் பிள்ளையை நம்பி, மாடு மேய்த்துக் கொண்டிருக்கிற பிள்ளையின் கழுத்தைத் திருகுகிற அசட்டுத்தனத்தை ஒரு மடையன் கூடச் செய்வானா?

சங்கரப்பன் செய்தானே!.

பொன்முட்டையிடும் வாத்து வயிற்றை கிழித்துப் பார்த்த அசடனைப் போல.... சாராய வியாபார வருமானத்தை நம்பி காமதேனு பசுவாக இருந்த கல் குவாரி வேலையை ராஜினாமா செய்து விட்டான். பூமாலையின் கதறலை - புலம்பலை காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

கலக்கலும், வியாபாரமும் தடபுடல். எல்லாம் ஆறு மாதம் தான். பெரிய சாராய வியாபாரி ஒருத்தனுக்கு இந்த மூன்று ஊர்கள் மீது குறி விழுந்தது.

மாமூல் தொகையை அவன் உயர்த்த... வம்பு, வழக்குகள், சண்டை, சச்சரவுகள். பி.எஃப். தொகை முழுவதும் கோர்ட் செலவில் காலியாயிற்று.

இவனும் மாமூல் தொகையை உயர்த்தினான். போட்டி என்று வந்து, பணம் தண்ணீராக....

என்ன இறைத்து என்ன செய்ய? பெரிய திமிங் கலத்தை சின்ன மீன் என்ன செய்து விடும்? அதன் வாய்க்குள் விழுந்து ஜீரணமாவதைத் தவிர வேறு கதி?

சகலத்தையும் பந்தாக நினைத்து எற்றி உதைத்து வெற்றி வாகை சூடி வருவதாக சவடால் அடித்துத் திரிந்த சங்கரப்பனை, வாழ்க்கை எற்றி விளையாடியது.

அந்தரத்தில் சீறிச் சுழன்ற பந்து சகதியில் வந்து விழுந்து விட்டது. நகர்ந்து உருள வழியில்லை.

ஊரும் வீடும் அவனைக் கொத்திப்பிடுங்கியது. அதைவிட அவனை அவனது உள் மனசு கொடூரமாகக் கொத்திக் குதறியது.

அவனை அவனாலேயே மன்னிக்க முடியவில்லை. 'நீயும் ஒரு மனுசப் பயலா' என்று காறித் துப்புகிற உள்மனசு. நமைச்சல். நமைச்சலை சமாளிக்க சாராயம்.

ஏழு ரூபாய்க்கூலி வேலைக்குக் கூட உடம்பில் சக்தி யில்லை. விறைத்து விறைத்து அடங்குகிற நரம்புகள். ஒரேயடியாக துவண்டு தளர்ந்து விட்ட உடல். வீட்டுக் குள் சண்டைகள், சச்சரவுகள், கோபதாபங்கள் .. வீராப் புப்பட்டினிகள்.

நிலைமை இப்படி கழுத்துப் பிடியாக பிடித்து நெரிக்கிற சமயத்தில்தான் செருப்பால் அடிப்பதுபோல ராசாத்தி அந்தக் காரியம் செய்தாள்.

அருமை மகள் அம்மாவின் ஜாடையாக மடியில் கிடந்தவள் உள் மனசின் ஆழத்தில் உறைந்து கிடந்த அம்மா பாசத்துக்கு மறு உயிரும், உருவும் தந்த உயிர்ச் சிற்பமாய் தோளில் தவழ்ந்த செல்வமகள். தன் யோகமாய் நின்ற மங்கள மகள்...

அவளையா இந்தக் கதியில் விட்டேன்? ஐயோ... அவளுக்கு என்ன நேருமோ? கூட்டிக்கொண்டு போன பயல் வைத்துக் காப்பாற்றுவானா? அனுபவித்து முடித்து

விட்டு சக்கையாக எறிந்து விடுவானா? ஐயோ.... என் ராசாத்தி....

பூமாலை படித்துப் படித்துச் சொன்னாளே... ''அவளுக்கு ஒரு வழியைப் பாருங்க. ஒரு நல்லதுக்கு ஏற்பாடு செய்யுங்க'' என்று

சண்டி மாட்டை தார்க்குச்சியால் குத்துவதைப் போல இடித்துச் சொன்னாளே....

சண்டி மாடாகவே இருந்துட்டேனே... கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல் அசட்டையாக இருந்துட்டேனே....

இருந்த மூலதனம், சக்தி எல்லாவற்றையும் திமிறில் தொலைத்து விட்டு நொண்டி மாடாக முடங்கிய நேரத்தில் ...

என் ரத்தப் பிறப்புக்கு இந்த கதியா? என் முகத்தில் கரியைப் பூசிவிட்டு, அவளும் தன் தலையில் நெருப்பை அள்ளிப் போட்டுக் கொண்டாளே ...

எல்லாம் இந்தப் பாவியால் வந்த வினை.

உள் குத்தலாகக் குத்தித் துளைக்கிற மனசாட்சியின் அவஸ்தை. எத்தனையோ பூச்சிகளின் அரிப்புக்கு ஆளாகியும் இற்றுப் போகாமல் இன்னும் துடித்துக் கொண்டிருக்கிற ஆத்மா.... மகளை எண்ணி, எண்ணிக் கருகியது.

சங்கரப்பன், உள்ளும் புறமும் உடைந்து போய்.... வெறும் கூடாக - நடமாடும் பிரேதமாக அலைந்து கொண்டிருந்தான்.

மதியக் கரண்டு. பொழுது அடைவதற்குள் கரண்டு நின்றுவிடும். அதுற்குள் குளிக்கப் போயாகணும். பவளம் பரபரத்துக் கொண்டிருந்தாள்.

கூலிக்குக் களை வெட்டப் போய் விட்டு இப்போது தான் வந்திருந்தாள். நாலைந்து நடை தண்ணீர் சுமந்தாள். மணி ஐந்துக்கு மேலிருக்குமோ?

மனசு கிடந்து தவித்தது. குளிக்கவில்லையானால் உறங்க முடியாது.

''அம்மா! அய்யா எங்கே போயிருக்காரு?....''

''கீழக்காட்டுலே வெறகு வெட்டப் போயிருக்காரு. அவரு வந்து சேர இருட்டிரும்.''

''அம்மா நா குளிச்சிட்டு வாரேன்.''

''பொழுது சாயப் போகுது வெருசா வந்துரு ...''

''ஆட்டும்மா''

பூமாலைக்குப் பதிலைச் சொல்லிக் கொண்டே மாற்றுச்சேலை, பாவாடை, சட்டையை எடுத்தாள். மனசுக்குள் இனம் புரியாத பரபரப்பு. பரவசம். மஞ்சளை எடுத்துக் கொண்டாள். கால்களுக்கு முன்பாக ஓடுகிற மனசு.

ஓட்டம் போன்ற நடை. அவசரப்பட்ட நடை. ஓடி ஓடித்தாவுகிற மனசு. வாலிப மனசு. கொம்புக்கு ஏங்கு கிற கொடியின் நுனி மனசு.

மனசுக்குள் முத்து.

ஓடையைத் தாண்டிக் கரையேறினாள். தோட்டத்தில்

தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிற முத்து. அவனைக் கண்டதும்—

கன்றுக்குட்டியாகத் துள்ளுகிற மனசு. தொண்டையைச் செருமினாள்.

வாய் மடையைத் திருப்பிவிட்டு நிமிர்ந்த அவன், செருமல் சத்தத்தில் திரும்பினான். அவன் முகத்தில் மலர்ச்சி. சாயங்கால மஞ்சள் வெயிலின் பிரகாசமாய் கண்கள்.

சன்னமாய் விசிலடித்தான். பொழியில் நடந்து கொண்டே 'ஸ்ஸ்ஸ்' ஸென்று அவளைப் போலியாக அரட்டினான்.

''ஏய் பவளம், எங்க போறே, குளிக்கவா?''

''இல்லே, கோயிலுக்கு. பாத்தாத் தெரியலே?''

அவன் குறும்பாக சிரித்தான்.

''சாமி இங்க இருக்கேன். நீ எதுக்கு கோயிலுக்குப் போகணும்?''

''சாமியாம், சாமி! மூஞ்சியைப்பாரு''

''சரி சரி... கரண்டு நிக்கிற நேரம். சீக்கிரம் குளிச்சு முடி. நா வந்து சேர்ரேன்''

''வருவீக, வருவீக! களை சுரண்டியை திருப்பிப் பிடிச்சு அடிச்சா.... வருவீக''

அவன் கேலியாகச் சிரிக்க, அது அவளையும் தொற்றிக்கொள்ள, மனசுக்குள் பூக்களின் சிரிப்பு. பனியின் சிலிரிப்பு.

கிணற்றை நெருங்கி விட்டாள். மோட்டார் தடதடக்

கிற இரைச்சல். அள்ளியிறைக்கிற நீர், வெள்ளிக் கற்றையாக சிமெண்ட்டுத் தொட்டியில் பாய்ந்து நுரை பெருகி வழிகிறது.

அவசரமாகத் தொட்டிக்குள் இறங்கி, தலையைக் கொடுத்தாள். சப்பென்று அறைகிற வேகத்தில் வந்து மோதுகிற நீர்க்கற்றை. கூந்தலின் எண்ணெய்ச் சிக் கெல்லாம் பறந்தது.

இங்கிருந்தே முத்துவைப் பார்த்தாள். பரவசத்தில் துள்ளுகிற மனசு. ''கண்ணைப் பாரு.... இங்கேயே பார்த்துக்கிட்டு'' என்று கிளுகிளுப்பாய் முணங்கிக் கொண்டாள்.

நனைந்த சேலையை உரித்தாள். பாவாடையை அவிழ்த்து, உயர்த்தி பற்களால் கவ்விக் கொண்டு ஜாக் கெட்டை உரித்தாள். மார்புக்கு மேலாக பாவாடையைக் கட்டிக் கொண்டாள். சேலையையும், பாவாடையையும் துவைத்துப் பிழிந்து விட்டு, மறுபடியும் குளித்தாள்.

மஞ்சளைத் தேய்த்து முகத்தில் பூசிக்கொண்டாள்.

தலையைக் கொடுத்தாள். மாறி மாறி உடம்பைத் திருப்பி திருப்பி நீர்க்கற்றையில் காட்டினாள்.

இப்படிக் குளிப்பதே தனீ...ச் சுகம். உழைத்துக் களைத்து வேர்வையில் நசநசத்த உடம்பை அன்பாய் அடித்துத் தடவி கொடுக்கிற தாய்மை உணர்வான நீர் வேகம். அழுக்கைக்கழுவி உடம்பையும் மனசையும், துடைத்து எடுக்கிற இன்பப் பரவசம்...

டடக்!

இதென்ன கொடுமை, கரண்டு நின்று விட்டதே.

ஈரக்கூந்தலை அள்ளி முடிந்து கொண்டாள். மாற்றுத் துணியை எடுத்துக் கொண்டு பம்ப் ஷெட் ரூமுக்குள் நுழைந்தாள்.

மனசுக்குள் அச்சப்படபடப்பு; ஆர்வத் துடிதுடிப்பு. 'வந்துருவாரோ....'

அவசர அவசரமாய் உடை மாற்றிக் கொண்டாள். கீழே விழுந்து கிடந்த ஈரப்பாவாடையை எடுத்து நிமிர்ந்தால் —

வாசலை 'மறித்துக்' கொண்டு முத்து.

பதைத்துப் போய்க் கேட்டாள்.

''எப்ப வந்தீக?''

''அப்பவே வந்துட்டேன். ஜாக்கட்டைப் போடுறத்துக்கு முந்தியே...''

''ச்ச்சீய்! வெக்கமாயில்லே?''

குறும்பாகச் சிரித்தான்

''நா எதுக்கு வெட்கப்படணும்? ஆம்பளை சிங்கம்''

''அசிங்கம். இதெல்லாம் எனக்குப் பிடிக்காது''

அவள் முகத்தில் அசலாகவே வெறுப்பு. மெல்லிய அசூயை. முகம் சட்டென்று வாடியது.

''அட நீ ஒண்ணு, நா சும்மா சொன்னேன். நா இப்பத்தான் வந்து நிக்கேனம்மா, ஏங்கிட்டே அப்படிக் கள்ளக்குசும்பு எல்லாம் இருக்காது''

''அதுதானே பாத்தேன்....''

முகத்தில் இறுக்கம் சற்று தளர்ந்தது. கோபத்தில் விரிந்த இமைகள் படபடத்து அடங்கியது. அவன் மெல்லச் சிரித்தான்.

''என்ன சிரிப்பு?''

''பொம்பளைங்களை புரிஞ்சுக்கிடுறது கஷ்டம்தான். ஆனால், ஒன்னைப் புரிஞ்சுக்கிடுறது அதைவிட கஷ்ட மாயிருக்கு''

''அதான் என்னோட சிக்கல்''

''என்ன சிக்கல்?''

''அய்யாவை நம்பி இருக்கவும் முடியாது. அக்காளை மாதிரி ஆயிடவும் கூடாது. அதுதான் சிக்கல்.''

''புரியுது பவளம். அதுவும் கரெக்ட்தான். நேத்து தான் எங்கம்மாகிட்டே ஒன்னைப்பத்திச் சொன்னேன். மொதல்லே யோசிச்சாக. நா ஒரே பிடிசாதனையா சாதிச்சேன். அவுகளுக்கும் என்னை விட்டா வேறயாரு இருக்காக? சம்மதிச்சுட்டாக.''

''நெசமாவா?''

''நெசந்தான்''

அவள் முகத்தில் இருட்டு. கண்களில் ஈரக்கனம். படபடவென்று துடிக்கிற ஈர இமைகள். பிடிபட்ட பறவையின் சிறகாக அடித்துக் கொள்கிற மனசு.

''எங்கய்யா இருக்குற நெலமையிலே.... வெறுங் கட்டையாகத்தான் உங்க வீட்டுக்கு வருவேன்.''

நனைந்த கண்கள் தாழ, வருத்தத்துடன் தலை குனிந்தாள். கனிந்த உதட்டில் மெல்லிய துடிப்பு.

''பவளத்தை விட நகை நட்டு பெருசா? நாம அன்போட சேர்ந்து பாடுபட்டா நகை வாங்க முடியாதா என்ன? எல்லாம் மனசுதான் முக்கியம் பவளம்.''

''பவளம்கிறது வெறும் பேருதானே! ஒரு உப்புக் கல்லுக்குக் கூட பெறாதே....''

''பவளங்கிறது ஒரு பேரு மட்டுமில்லே ஒரு மனசு, ஒரு கொணம், ஒரு மனுசி, அதுக்கு நூறு பவுன் நகை கூட ஈடாகாது தெரியுமா?''

கலகலவெனச் சிரித்தான், மனசின் நிறைவு முழுவதும் பொங்கிப் பிரவகிக்கச் சிரித்தான். என்ன இது இவள் முகத்தில் பீதி? கண்களில் ஏனிந்த கிலி?''

சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

கோடாரியும், அரிவாளுமாய் சங்கரப்பன். ரௌத்ரமாய் நிற்க சங்கரப்பன் உடம்பெல்லாம் வேலிமர இலைகள்.

பவளம் உருவிக் கொண்டு ஓடிப் போய் விட்டாள். முத்து மனசுக்குள், மெல்லிய மிரட்சி. அப்படியோர் வெறி பிடித்த தோற்றத்தில் சங்கரப்பன்.

இதே மாதிரி விஷயத்தில் மூத்த மகளைப் பறி கொடுத்து ஆறு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் இவளும் இதே கூத்தா நடத்துகிறாள்?.

''எம் மக கூட என்னடா பேச்சு, ஒனக்கு?''

ஆத்திரமாய் கேட்ட அவன், ஆவேசமாய் கோடரியைத் தலைக்கு மேலாக ஓங்கினான். பாய்ந்தான்.

''மாமா.... என்ன? ஏதுன்னு? கேளுங்க....'' என்று

சொல்லிக் கொண்டே விருட்டென்று நகர்ந்து கொண் டான். 'ணங்'கென்று தரையில் மோதிய கோடாரியை காலால் மிதித்து, வாலிபச் சுறுசுறுப்போடு பறித்துக் கொண்டான்.

சங்கரப்பன் அங்கும் இங்குமாய்ப் பரபரத்தான். ஓடிப் போய் ஒரு கல்லைத் தூக்கினான். முத்து பயப்படாமல் நின்றான். கண்டிக்கிற தோரணையில் சிடுசிடுத்தான்.

''எல்லாத்தையும் தொலைச்சு நாசமாக்கினீரு. புத்திக்கெட்ட ஆத்திரத்திலே பவளத்தோட பொழப் பையும் நாசமாக்கிடாதீரும்.''

''என்ன சொல்றே?''

''நம்ம நெலவரமெல்லாம் அறிஞ்சுதான் பவளத்தை ஆசைப்படுதேன். அவளும் ஆசைப்படுதாள். எங்கம்மா வும் சம்மதிச்சிட்டாக''.

''நா சம்மதிக்க வேண்டாமா? எம்புள்ளை பொண் டாட்டி பத்தி ஒனக்கென்ன கவலை?''

''நீரு எதைப்பத்திதான் கவலைப்பட்டீரு? ஒமக்கு சாராயம்தான் பொண்டாட்டி. லாட்டரி சீட்டுதான் புள்ளை. வேற எதைப்பத்தி ஒமக்குக் கவலை?''

''வீணா சீரழிஞ்சு போகாதே. வார்த்தையை அளந்து பேசு.''

''சும்மா குதிக்காதீருமய்யா, பொழப்பை அளந்து பாக்கத் தெரியாம தொலைச்சவரு. வார்த்தையை வந்து அளக்க வந்துட்டாரு.''

''ஏலேய்....'' என்று சீறலை அருவருப்போடு முகத்தை சுளித்து அலட்சியப் படுத்திவிட்டு, அவன்

பாட்டுக்குப் போய்விட்டான்.

அவனது சொற்கள் சங்கரப்பனுக்குள் கோடாரி வெட்டாக வந்து விழுந்தன. அவரை வெட்டிச் சரிக்கிற அவமானம். அப்படியே ஸ்தம்பித்துப் போனார்.

ஆத்மாவையே கதறடிக்கிற சாட்டைச் சுழற்சியாக வார்த்தை விளாசல்கள்.

''சின்னப்பய என்ன பேச்சுப் பேசிட்டான்.

பொங்கிக் குமுறிய ஆத்திரம், பீறிட வழியின்றி முட்டி மோதியது. கையாலாகாத்தனமாய் பூமாலை மீது திரும்பியது.

இவரைக் கட்டிப் போட்ட பலவீனமே, இவருள் ரௌத்ரமாய் தீவிரப்பட, அடிபட்ட பாம்பின் சீற்றமாய் வீட்டுக்குள் பாய்ந்தார்.

''ஏய் பூமாலை ... எங்க அந்தச் சிறுக்கி?''

''அவா கிடக்கட்டும். நீரு எதுக்கு இம்புட்டுக் கோபத்துல வாரீரு?''

''இந்தக்குட்டி நாய் செய்ற கூத்தாலே, ஒரு சின்னப் பய என்னை எம்புட்டுக் கேவலமாப் பேசிட்டான், தெரியுமா?''

கொதிக்கிற மனசோடு வார்த்தைகள் தெறித்துச் சிதற நடந்ததைச் சொன்னார். தன் மனைவியிடமல்ல... தாயிடம் சொல்லி ஆறுதல் தேடுகிற சிறுவனைப் போல ... ஆவல் பதைப்போடு சொன்னார்.

சண்டை சத்தம் வருகிற போதெல்லாம் சங்கரப்பனை பூமாலை திட்டுவாள். எவ்வளவோ பேசி இருக்கிறார்.

''ஏந்தாலியை அறுத்துக்கிட்டு, நீரு தொலைஞ்சு போரும். எதுக்கு எங்களைச் சேத்து சீரழிக்கணும்?'' என்று கூட மனக் கொதிப்பில் சீறிச் சினந்திருக்கிறாள்.

ஆனால், திட்டுகிற உரிமையை வேறு யாருக்கும் இதுவரை விட்டுக்கொடுத்ததேயில்லை. அவள் காது பட சங்கரப்பனை யாராவது திட்டிவிட்டால் போதும், 'பிலு, பிலு' வென்று சண்டைக்குப் போய் விடுவாள்.

அப்பேற்பட்ட பூமாலை இப்போது நிச்சலனமே... உணர்ச்சியற்ற வறண்ட நிலையில் முகம்.

சங்கரப்பனுக்கு இந்த நிச்சலனமாய் ஆச்சரியமாய்... உள்ளுக்குள் ஏமாற்றம் ஒரு புழுவாய் நெளிந்தது.

அவர் பார்வை, குவிமையமே அவள் முகத்தில், மெல்ல உதடுகள் அசைந்தன.

''அந்தத் தம்பி சொன்னதுல என்ன தப்பு இருக் குன்னு.... இந்தக் குதி குதிக்கீக?''

பூமாலையின் கண்டிப்பு கலந்த அந்தச் சொற்கள், அவருக்குள் தீ மாலையாய் விழுந்தது. சுரீரென்றது.

காலடியிலிருந்த ஒற்றைப் பலகையையும் உருவிக் கொண்டதைப் போன்று ஆழ் மனசில் பகீரென்றது.

சகலத்திலிருந்தும் அந்நியப்பட்டிருந்த சங்கரப்பனை பற்றியிருந்த ஒரே உறவு பூமாலைதான். அன்புகாட்ட வும், இரக்கம் காட்டவும், தனக்காக வக்காலத்து வாங்கிச் சண்டை போடவும் ஓர் உயிர் இருக்கிறது; உயிருடன் சகலத்தையும் பகிர்ந்து கொள்ள ஓர் ஆத்மா இருக்கிறது.

அந்த நம்பிக்கையும் இதோ.... நழுவிக்கொண்டது.

மக செய்ற தப்பைக் கண்டிக்கிற உரிமைகூட எனக்கு இல்லை என்கிறாளா? இவள் என்னில் கலந்தவளா, தள்ளித் தள்ளிப் போய் கொண்டிருக்கிற வெறும் ஜடமா?

அவள் முகத்திலேயே அவரது கண்கள். உள் மன சுக்குள் அறுபட்ட ரண வேதனை. கல்லடிபட்ட புறா வாக மனசு படபடக்க.... பார்வை பறவையாடிது. அலங்க மலங்கப் பார்த்தார்.

வேறு எந்த வார்த்தையும் பேசவில்லை. பேச மதி யில்லை. விரக்தியின் விளிம்பில் கைத்துப்போன மனசு பூராவிலும் கசப்பு.

விபரீதமாய் சிந்தனை சிதறியோட.... விபரீதமான வேகத்தில் விருட்டென்று வெளியேறினார்.

சுவரில் சரிந்து சாய்ந்து கிடந்த பூமாலை, மூக்கை சீறி சுவரிலே இழுவினாள். இன்னு வழிந்து கொண் டிருக்கிற கண்ணீர். பச்சைத் தண்ணீர்கூட பல்லில் படாததால் உலர்ந்து போய், வெடிப்புக் கண்டு கிடக் கிற உதடுகள்.

''எம்மா, கொஞ்சமாச்சும் சாப்புடும்மா''

கலங்கிக் கிடக்கிற பவளத்தின் சத்தம். கெஞ்ச லாய் குரல். திமிறிக் கொண்டிருக்கிற அழுகையை உணர்த்துகிற குரல்.

''எனக்காகவாச்சும் சாப்பிடும்மா''

இப்பொழுதுதான் பூமாலை நிமிர்ந்தாள். மகள் முகத்தில் நங்கூரமிட்ட பார்வை. பயத்தில் அடிபட்டுக்

கிடக்கிற மகள், ஆதரவு தேடி தவிக்கிற மகளின் பார்வை.

''ஒனக்காகத்தானடி.... நர் அந்த மனுஷர்கிட்டே அப்படிச் சொல்லித் தொலைச்சேன். அவரு என்னை இப்படி கேவலப்படுத்திட்டாரே....''

எரிச்சலில் மெல்லிசாய் சிடுசிடுத்தாள் பவளம்.

''அவரு என்னைக்குத்தான் நம்மளை கேவலப் படுத்தாம இருந்தாரு?''

''அப்படி சொல்லாதேடி. அவரு தங்கமான மனுசர்டி. குழந்தை மனசு, அவருக்கு. என்ன இழவோ, ஊரு நாடு போறபோக்கு, அவரு புத்தியைக் கெடுத்துச் சீரழிச்சிருச்சி. நம்மளையும் சீரழிச்சுக் கூத்து நடத்துது. மத்தபடி.... அந்த மனுசர் கள்ளங்கபடு இல்லாத ஆளுடி.''

அம்மா அருகில் மண்டிபோட்டு உட்கார்ந்தாள். தோளில் பரிவோடு கை போட்டாள். பூமாலை மீண்டும் அழுவது போல அங்கலாய்த்தாள்.

''மூத்தவளைப் போல ஒங்கதையும் ஆயிடக்கூடாதே, ஒன்னையாச்சும் ஒருத்தன்கிட்ட உருப்படியா ஒப்படைக் கணுமே, அதுக்கும் ஒரு வழியில்லேன்னு கதி கலங்கிப் போயிருந்தேன். நேத்து முத்துவைப்பத்தி சொன்னே. நல்ல புள்ளையாண்டான இருக்கானே, அவன் கையிலே ஒன்னைப் பிடிச்சுக் கொடுத்துட்டா மனப்பாரம் எறங்கு மேன்னு நெனைச்சேன். அதனாலேதா.... வெறியோட வந்த அந்த மனுசர்கிட்டே கோபத்தை மடக்குறதுக்காக அந்த வார்த்தையை சொன்னேனே.... அந்த வார்த்தை யிலேயே ஆடிப்போயிட்டாரே...''

கண்களிலிருந்து வழியத் தொடங்கிய கண்ணீரை துடைத்தாள் மகள். ''அழாதேம்மா....''

நிதானமா அவருகிட்ட பேசி, அவரையும் சம்மதிக்க வைக்கனும்னுதானே நெனச்சிக்கிட்டிருந்தேன். அது புரியாம, இந்த மனுசர் இப்படிச் செஞ்சுட்டாரே. என்னையும் அசிங்கப்படுத்தி, நாலு பேரு நாலு விதமா பேசுற நிலைக்கு ஆளாக்கிட்டாரே...''

''இருக்கட்டும்மா.... மொதல்ல சாப்புடும்மா''

இந்நேரம் அவரு எங்க நிக்காரோ.... எப்படியெல்லாம் தவிக்காரோ.... சாப்புட்டாரோ.... சாப்புடாம பட்டினியா கெடக்காரோ .. அடப்பாதரவே, நம்ம குடும்பம் இப்படியா சீரழியணும்? இந்த சீரழிவு வேறு எந்தக் குடும்பத்துக்கும் வரக்கூடாதும்மா.... வரக்கூடாது.''

கருகருவென்று மயங்குகிற நேரத்தில் புறப்பட்ட சங்கரப்பன், ஓடைக்கரையில் வேலிமரத்தூருக்கடியில் நாலு கிளாஸ் சாராயத்தை வாங்கி ஊற்றிக்கொண்டார்.

மனசு உடம்பெல்லாம் நெருப்பாய் பற்றி எறிய, விறுவிறுவென்று நடந்தார். எங்கே? எதற்கு? ஊஹூம் அதைப்பற்றிய நினைவேயில்லை. மனசு பூராவும் முத்துவின் பேச்சும், பூமாலையின் அலட்சியமும். உடம்பு பூராவும் கொதித்தது.

நடக்க நடக்க விர்ரென்று ஏறியது. வெறும் வயிற்றில் குடித்த சாராயம் குடலைச் சுருட்டியது. அடிவயிற்றைக் கவ்வியது. வயிறு 'கபகபா' வென்று எரிந்தது. பசி உயிரைப் பிடுங்கியது.

ஏதோ ஒரு ஊருக்குள் நுழைகிறபோது, அந்த ஊர் சுத்தமாக அடங்கிக் கிடந்தது.

கால்லெல்லாம் வலியெடுத்தது. மூட்டுக்கு மூட்டு, 'விண், விண்'ணெங்கிற வேதனை.

ஒரு வீட்டின் வெளிப்பானையில் இருந்த தண்ணீரை வயிறு முட்ட அள்ளிக் குடித்தார். ஊர் மடத்து திண்ணையைத் தேடிவந்து சாய்ந்தவர்தான். அடித்துப்போட்ட மாதிரி அப்படியே உறங்கிப் போனார்.

ஆட்டு மந்தை ஒன்று கத்திக் கொண்டும் தன்னை மிதித்துக்ககாண்டும் ஓடுவதைப்போன்ற உணர்வு. திடுக்கிட்டு விழித்துப்பார்த்தால்—

தெருமெல்லாம் திமுதிமுவென்று ஜனங்கள், ''ஐயய்யோ.... தீப்பிடிச்சிருச்சே'' என்ற ஒரே கூப்பாடு. சங்கரப்பனும் பதைபதைப் போடு ஓடினார்.

ஒரு கூரை வீட்டில் தீ. பயங்கரமாய் தீ. பற்றிக் கொண்டு தாவுகிற தீ. 'சடசடசட்டச் சட'வென்ற இரைச்சலோடு தீ.

குய்யோ முறையோயென்னு அலறிச்சாடுகின்ற பெண்கள். பானையும் சட்டியுமாய் கையில் அகப் பட்டதைத் தூக்கிக் கொண்டு ஓடுகிற மனிதர்கள். தண்ணீரையும், மண்ணையும் அள்ளி அள்ளி இறைக்கிற ஆவேசமாய் மனிதர்கள்.

காலம் காலமாய் நடந்த போரின் தொடர்ச்சியாக, நெருப்பை எதிர்த்து மோதுகிற மனிதர்கள்.

சங்கரப்பனுக்கு என்ன செய்வதென்றே ஒன்றும் புரிய வில்லை.

காளியின் ரௌத்ரமாய் பேயாட்டம் போடுகிற நெருப்பு ஜுவாலைக்குள் கட்டைகள் சரிந்து விழுகிற சத்தம்.

ஒரு சிறுமியின் சத்தம் வீட்டுக்குள் கேட்பதை போல ஓர் உணர்வு. சங்கரப்பன் உற்றுக் கேட்டார்.

சுழன்று வீசுகின்ற சுவாலையின் சீற்றச் சத்தத்துக் கிடையில் துல்லியமாய் ஒரு சிறுமியின் கதறல்.

இவர்தான் இதயமே பிளந்து போகிற மாதிரி கத் தினார். ''ஐயய்யோ.... உள்ளே ஒரு புள்ளை அழுகுதே....''

இவரது கத்தலில் அந்தக் கிராமத்தின் உயிரே ஸ்தம்பித்தது. தீயை அணைக்கிற வேலை தற்காலிக மாக நிற்க ...

''ஐயய்யோ ... ஒருபுள்ளை தீக்குள்ளே ஒருபுள்ளே'' என்ற பல குரலில் சத்தங்கள். தவித்துக் கதறுகிற சத்தங்கள். எதுவும் செய்யத் தோன்றாமல் சுற்றிச் சுற்றி வந்து புலம்புகிற சத்தங்கள்

யாரும் உள்ளே இறங்கவில்லை. சங்கரப்பனுக்கு ஒன்றும் ஓடவில்லை. துல்லியமாய்க் கேட்கிற ஒரு குழந்தையின் கதறல்.

''ஐயோ.... ஒரு ''உசுராச்சே'' என்று மனசு கிடந்து தவிக்கிறது. அவர் மனமெல்லாம் அக்குழந்தையின் தவிப்பான கதறல்.

சகலத்திலிருந்தும் அந்நியப்பட்டுப் போன அவருள் அந்நியப்படாமல் உட்கார்ந்திருக்கிற மனிதநேயம். உயிர்ப்பான மனிதத் துடிப்பேடு இயங்குகிற மனித இயல்பு.

யோசிக்க-நிதானிக்க முடியவில்லை. மடமடவென்று உள்ளே பாய்ந்து விட்டார். வெறித்தனமாய் முட்டி

மோதிக்கொண்டு உள்ளே ஓடினார். சூடே அறிய வில்லை. அறிகிற உண்ர்வில்லை. உணர்வு முழுவதும் ஒரு உயிரைப் பற்றிக்கொண்டு

கையால் எதை எதையோ தட்டி விட்டார். காலால் எதையோ எற்றினாா. கடைசியில் தீயில் குரூர வெளிச்சத்தில் சிறுமியைப் பார்த்து விட்டார்.

கண்ணெல்லாம் அப்பியிருந்த பீதி.

தண்ணீர் பானையை வைக்கிற மண்திட்டுக்கு அடியில் பம்மிப் போய் கிடந்தாள்.

குபீர் குபீரென்று நெருப்பலைகள்.

விருட்டென்று பாய்ந்து பிள்ளையை அள்ளிக் கொண் டார். தாவி ஓடி வந்தார்.

வாசலை நெருங்குகிற சமயம் —

வாசலை மறித்துக் கொண்டு ஒரு கனத்த நீளமான கனிந்த கங்கு, அதை வலது காலால் ஓங்கி மிதித்து நொறுக்கி விட்டு. தாண்டி குபீரென்று வெளியே பாய் கிறபோது—

பலத்த சத்தத்தோடு நடு முதுகில் நறுக்கென்று விழுந்து அழுத்துகிற தீக்கட்டை திமிறிப் பார்த்தார். உடம்பை வெறியோடு ஆட்டிப்பார்த்தார். முகத்தில் வந்து சூழ்கிற நெருப்பு.

ம்ஹூம்... முடியவில்லை. கண்ணுக்குள் மரணத் தோற்றம். இதோ முதுகில் ஏறிக்கொண்ட மரணம்.

வீறிட்டலறுகிற குழந்தையின் கதறல்.

வலது கையில் இருந்தது குழந்தை. இட்டது கை யாலும் பற்றினார். பலம் முழுவதையும் திரட்டி வீசி யெறிந்து விட்டார். அவ்வளவு தான்.

கண்ணுக்குள் கறுப்பாய் நெருப்பலைகள். தீ கருப் பாகவா இருக்கும்?

இருட்டி விட்டது.

மறுநாள். இன்னும் சரியாக விடியாத வைகறைப் பொழுது. ஒரு மாட்டி வண்டி ஆடி அசைகிற சத்தத் துடன் இந்த ஊருக்குள் நுழைகிறது. வண்டியைத் தொடர்ந்து பத்து பதினைந்து பெரியவாகள்.

சப்தமற்ற இறுக்கத்தில் அவர்கள்.

வண்டியில் துணிசுற்றி மூடிய சங்கரப்பனின் உடல்.

தீப்பிடித்த மாதிரி செய்தி நிமிஷத்தில் பரவ மொத்த கிராமமே ஊர் விளிம்புக்கு வந்து விட்டது.

வண்டியோடு வந்த பெரியவர்கள் சங்கரப்பனைப் பற்றி உருகி வழிகிற மனசோடு, கலங்கிய கண்களோடு கதை கதையாய்ச் சொல்ல ...

''கடைசியா அவரு உசுரு போறப்போ பூமாலை, ராசாத்திங்கிற ரெண்டு வார்த்தையைத்தான் மாறி மாறிச் சொன்னாரு ''

பூமாலையும், பவளமும் கதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர். சங்கரப்பன் மேல் விழுந்து புரண்டனர். நெஞ்சு வெடிக்க அவர்கள் அழுத அழுகையில் மற்ற பெண்கள் எல்லோரும் கண் கலங்கினர். மனசுக்குள் உடைந்தனர்.